பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalāikkathir

விழயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 20, புதன்கிழமை 04.01.2017 | கதிர் 60

# தெற்கு அரசியல் நெருக்கடியாலேயே ஜனாதிபதியின் யாழ். வருகை திடீர் ரத்து

## சு.கவின் முக்கிய கூட்டம் நேற்று இரவிரவாக

கொழும்பு, ஜனவரி 04

தென்னிலங்கையில் திடீரென முற்றிய அரசியல் நெருக்கடிகளை அடுத்தே ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவின் இன்றைய யாழ். பயணம் கடைசி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டதாகக் கொழும்பில் விடயமறிந்த வட்டாரங்கள் 'காலைக் கதிருக்கு'த் தகவல் வெளியிட்டன.

நல்லாட்சி அரசின் பிரதான பங்காளிக் கட்சிகளுள் ஒன்றான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் சத்தம் சந்தடியில்லாமல் அரசியல் நெருக்கடி முற்றியுள்ளதாகக் கூறப்படுகின்றது. அவற்றால் எழக்கூடியவை என்று கருதப்படும் சவால்களை உடனுக்குடன் எதிர்கொண்டு தோதான நடவடிக்கைகளை விரைந்து எடுப்பதற்கு கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைநகர் கொழும்பில் பிரசன்னமாகி இருப்பது அவசியம் என ஜனாதிபதிக்குச் சுட்டிக் காட்டப்பட்டதாகத் தெரிகின்றது.

அதனை அடுத்தே தமது இன்றைய யாழ். பயணத்தை நேற்று மாலை கடைசி நேரத்தில் ஜனாதிபதி ரத்துச் செய்தார் என்றும் கூறப்படுகின்றது.

நல்லாட்சி அரசில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பத்து எம்.பிக்கள் கூட்டு எதிரணிப் பக்கம் இன்று தாவுவர் என எதிர்பார்க்கப்படுவதாக முன்னர் கொழும்பில் செய்திகள் வெளியாகியிருந்தன.

2017 இல் தற்போதைய அரசைக் கவிழ்த்து ஆட்சியைப் பிடிப்பேன் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

பக்கம் 20 »

## சரியான வேளை, சரியான முறையில் ஆட்சியை வீழ்த்துவாராம் மஹிந்தர்!

கொழும்பு, ஜன. 04

இந்த அரசை வீழ்த்துவதற்கு சரியான திட்டத்தை – சரியான சமயத்தில் – முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராபக்ஷ வகுத்து செயற்படுத்துவார்.

– இப்படி கூட்டு எதிர்க் கட்சி நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சிகளின் ஊடகவியலாளர் மாநாடு கொழும்பில் நேற்று நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு பேசிய அத்தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான தினேஷ் குணவர்த்தன இந்த நம்பிக்கையை வெளியிட்டார்.

தொடர்ந்து இந்த அரசாங்கம் நீடிக்க அனுமதிக்க முடியாது. அதனை வீட்டுக்கு அனுப்பும் வேலையை மஹிந்த ராஜபக்ஷ கன கச்சிதமாக ஒப்பேற்றுவார் என்றும் அவர் கூறினார். (உ)

## தேசியப் பட்டியல் எம்.பி. ஹசன் அலிக்கு கிட்டும்

கொழும்பு, ஜன.4

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் எம்.ரி.ஹசன் அலிக்கு தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்குவதற்கு முஸ்லிம் காங்கிரஸின் உயர் பீடம் முடிவு செய்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் உயர் பீடக் கூட்டம், கட்சித் தலைமையகமான தாருஸ்ஸலாமில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற போதே முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

பக்கம் 20 »

## ஜனாதிபதியின் விஜயம் கடைசி நேரத்தில் தள்ளிப் போனமையால் பெரும் வீண்விரயம்

கொழும்பு, ஜன.04

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் யாழ்ப்பாணத்துக்கான விஜயம் இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டமையால் அவரது வருகைக்காகப் பெரும் செலவில் செய்யப்பட்ட அனைத்து ஏற்பாடுகளும் வீணாகிப் போயுள்ளன.

இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணம் வருகை தந்து பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்வார் என இருந்தது. இதனால் ஜனாதிபதியின் வருகைக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுத் தயார் நிலையில் இருந்தன.

'ஜனாதிபதியிடம் தெரிவியுங்கள்' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மக்கள் குறைகளைத் தெரிவிக்கும் அலுவலகத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வு, ஓய்வுபெற்ற இராணுவ வீரர்களின் கௌரவிப்பு, மரம் நடும் நிகழ்வு போன்றவற்றில் ஜனாதிபதி கலந்து கொள்வதற்கு இருந்தமையால்

பக்கம் 20 »



குளியாப்பிட்டியில் 'வொக்ஸ் வேகன்' கார் பொருத்தல் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று இடம்பெற்றபோது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முதலீட்டுச் சபையின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய ஆகியோர் அடிக்கல் நாட்டுவதைப் படத்தில் காணலாம்.


## சுருட்டல்
## முன்னைய அரசு கட்டுமானம் மூலம் இந்த அரசு சொத்து விற்பனை மூலம்
### குற்றம் சுமத்துகிறது ஜே.வி.பி.

கடந்த அரசு கட்டுமான நடவடிக்கைகள் மூலம் திருடியது எனவும் தற்போதைய அரசு விற்பனை மூலம் திருடுகின்றது எனவும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க கூறியுள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுக கொடுக்கல் வாங்கல் அது

பக்கம் 20 »

## அளப்பு அருணாசலம்



இரணைமடுவை வேண்டாம் எண்டதால இப்ப கடலில இருந்து எடுக்க வேண்டிய நிலமை...!

## கடல் நீரிலிருந்து குடிதண்ணீர் யாழ். மக்களுக்கு!

யாழ்ப்பாணம், ஜன.04

யாழ்ப்பாணம் மற்றும் கற்பிட்டி குடாக்களில் வசிக்கும் மக்களுக்கு கடல் நீரைத் தூய்மைப் படுத்தி வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக நீர்வளத்துறை அமைச்சர்

பக்கம் 20 »

## நிதி மோசடி பொலிஸ் விசாரணைப் பிரிவின் மூத்த அதிகாரி பதவியுயர்வுடன் இடமாற்றம்

கொழும்பு, ஜன. 04

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அருண பிரேமசாந்த பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மொனராகலை பிரதேச பிரதிப் பொலிஸ்மா அதிபராகப் பதவி உயர்வு வழங்கப்பட்டு அவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்றும் அடிப்படை உரிமை மனு ஒன்றின் தீர்ப்புக்கமையவே இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.


பக்கம் 20 »

## பம்பலப்பிட்டியில் ரயிலில் மோதுண்டு விரிவுரையாளர் பலி!

கொழும்பு, ஜன.04

வெள்ளவத்தை–பம்பலப்பிட்டி இடையேயான ரயில் பாதையில் நேற்று ரயிலில் மோதுண்டு சிரேஷ்ட விரிவுரையாளரான பிரியந்த பெரகும் குணவர்த்தன (வயது 59) என்பவர் உயிரிழந்தார். பம்பலப்பிட்டிப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (உ)

## பதில் முதல்வராக பொ.ஐங்கரநேசன்



வடக்கு மாகாண பதில் முதலமைச்சராக பொ.ஐங்கரநேசன் நேற்று வடமாகாண ஆளுநர் முன்னிலையில் பதவியேற்றுக்கொண்டார்.
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வெளிநாடு பயணமாகியதனை அடுத்தே இவர் பதில் முதலமைச்சராகப் பதவியேற்றுக்கொண்டார்.

## கைத்தொலைபேசி திருடப்பட்டது

அச்சுவேலி, ஜன.04


பருத்தித்துறை புற்றளை மகா வித்தியாலயத்தில் மேசன் வேலையில்ஈடுபட்டிருந்ததொழிலாளி ஒருவரின் 58 ஆயிரம் ரூபா பெறுமதியான கைத்தொலைபேசி திருடப்பட்டுள்ளது என பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுழிபுரம் மத்தியைச் சேர்ந்த நபர் ஒருவர் பருத்தித்துறையில் தங்கிநின்று மேசன் வேலை செய்து வருகின்றார். அவருடைய கைத்தொலைபேசியே கடந்த டிசெம்பர் மாதம் 29 ஆம் திகதி திருடப்பட்டுள்ளது எனத் தெரிய வருகின்றது. (ம-09)

# கூட்டமைப்பின் முடிவுக்கு முழு ஆதரவு; புளொட் செயற்குழு கூடித் தீர்மானம்!

தீர்வு மற்றும் அரசமைப்பு விடயங்களில்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவு தெரிவித்துச் செயற்படுவது என கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சியானஜனநாயகமக்கள்முன்னணியின் (புளொட்டின்) செயற்குழு தீர்மானித்திருக்கின்றது.

மேற்படி செயற்குழுக் கூட்டம் கட்சியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமானதர்மலிங்கம்சித்தார்த்தன்தலைமையில்நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரையில் கட்சியின் வவுனியா மாவட்ட தலைமையகத்தில் நடைபெற்றது. இன்றைய அரசியல் நிலைமைகள் சம்பந்தமாக கூட்டத்தில் தீவிரமாக ஆராயப்பட்டது. அரசமைப்பை மாற்றும் முயற்சிகள் சம்பந்தமாக இதன்போது விரிவாகப் பேசப்பட்டது. தீர்வு விடயத்திலே மக்கள் மத்தியில் நம்பிக்கையீனம் இருந்தாலும் இதற்கு ஒரு





முடிவு வரும் வரையில் நாம் அதற்கான முயற்சியைத் தொடரவேண்டும் என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

# நவாலி கம்பிக் குத்து சந்தேக நபர்கள் சரண்!

மானிப்பாய், ஜன.04

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்துக்கு அருகில் டிசெம்பர் 25ஆம் திகதி கம்பியால் குத்தி இருவரைக் காயப்படுத்திய சந்தேக நபர்கள் நால்வர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் நேற்று சரணடைந்துள்ளனர்.

கடந்த நத்தார் தினத்தன்று மாலை நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்துக்கு அருகில் இரு இளைஞர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் கம்பிக் குத்தில் முடிவடைந்தது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் நால்வரே நேற்று பொலிஸில் சரணடைந்துள்ளனர்.

அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் மேலும் ஐந்து சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பிக் குத்தில் காயமடைந்த இரு இளைஞர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர். இவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## திருட்டில் ஈடுபட்ட சிறுவர்கள்

ஊர்காவற்துறை பொலிஸ் பிரதேசத்துக்குட்பட்ட பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றின் கூரையைப்பிரித்துதிருட்டில்ஈடுபட்டவர்கள் எனக் கருதப்படும் இரு சிறுவர்களையும் எதிர்வரும் 16ஆம் திகதி வரை அச்சுவேலியில் அமைந்துள்ள அரச சான்று பெற்ற நன்னடத்தைப் பாடசாலையில் சேர்ப்பிக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் ஏ.எம்.எம்.றியால் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

காரைநகர் கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில்ஞாயிறன்று கூரை பிரித்து, களஞ்சிய அறையில் இருந்த இலத்திரனியல் உபகரணங்கள் திருட்டுப் போயிருந்தன. இதுதொடர்பில் ஆலயபரிபாலன சபையினரால் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பில் வழக்கு பதிவு செய்த குற்றத்தடுப்பு பொலிஸார் திருட்டில் ஈடுபட்ட சிறுவர்களைக்கைதுசெய்தமையுடன், திருடப்பட்ட கமரா, ஒலி பெருக்கிக் கருவி, கைபேசி போன்றவற்றைக் கைப்பற்றியுமிருந்தனர். கைதான இருசிறுவர்களையும் மன்றில் நீதிவான் ஏ.எம்.எம்.றியால் முன்னிலையில் முற்படுத்திய போது நீதிவான் சான்றுபெற்ற பாடசாலையில்அவர்களைச்சேர்ப்பிக்குமாறு சிறைச்சாலை அத்தியட்சகருக்கு நீதிவான் கட்டளை பிறப்பித்தார்.

# இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடித்த போது கைது செய்யப்பட்ட ஏழு இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இவர்களை ஜனவரி 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் ஏ.எம்.எம்.றியால் நேற்று உத்தரவிட்டார்.

கடந்த டிசெம்பர் 19ஆம் திகதி நெடுந்தீவுக் கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடித்த 7 இந்திய மீனவர்கள் இரண்டு விசைப்படகுகளுடன் கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த மீனவர்களின் வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது மீனவர்களை விடுவிப்பதற்குரிய பரிந்துரை சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து கிடைக்கப் பெறாதமையால் இவர்களின் விளக்கமறியல் மேலும் 14 நாள்கள் நீடிக்கப்பட்டது.

# இது ஒரு முகப்புத்தகப் பதிவு!

## முன்னாள் போராளிகளின் போராட்டம்

தீர்வைப் பெற்றுத்தராத சம்பந்தனுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம் என்று கருட புராணத்தின் கடைசிப்பக்கம் வரைக்கும் தடவித்தேடிக்கொண்டிருக்கும் 'மாண்புமிகு' ஈழத்தமிழ் பெருமக்களும் இதயம் பலவீனமானவர்களும் இந்தப் பதிவை இதற்கு மேல் வாசிக்கவேண்டாம் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

போர் முடிவடைந்த பின்னர் இலங்கைச் சிறைகளில் கொண்டு சென்று அடைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட சுமார் நூறுக்கும் மேற்பட்ட முன்னாள் போராளிகள் இன்று கிளிநொச்சியில் இலங்கை இராணுவத்திடம் சென்று தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு வேலை தருமாறு கேட்டு - இரந்து - விண்ணப்பித்துவிட்டு வந்திருக்கிறார்கள். இராணுவத்தினரின் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு ஆட்களை எடுக்கப்போவதாக விடுக்கப்பட்ட அறிவிப்பைத் தொடர்ந்து நூற்றுக்கும் மேற்பட்ட முன்னாள் போராளிகள் – சிலர் தங்களது கைக்குழந்தைகளோடு போய்நின்று – தங்களை அந்தப் பிரிவில் இணைத்துக்கொள்ளுமாறு கோரிக் கையெழுத்திட்ட மகஜரை கையளித்துவிட்டு வந்திருக்கிறார்கள்.

முன்னரும் இவ்வாறு வேலைக்கு ஆட்களை எடுத்த போது, 'இதுவொரு சூழ்ச்சிகர மான பொறி' – 'நுண்ணிய இன வழிப்பிற்குள் நூதனமாக பின்னப்பட்டும் வலை' – என்றெல்லாம் கதைகளை பரப்பியதால் இந்த போராளிக் குடும்பங்கள் அந்த வேலைகளுக்கு போகவில்லை. மீறிச் சென்றவர்கள் இன்று நல்ல சம்பளத்துடன் சிறப்பாக வாழ்கிறார்கள். ஆக, இனியும் தாமதிக்காமல் இந்த தடவையிலாவது இந்த வேலையில் சேர்ந்துகொள்ளவேண்டும் என்று சிவில் பாதுகாப்புத் திணைக்கள கட்டளை அதிகாரியிடம் தங்களது பெயர்களைக் கொடுத்துவிட்டு வந்திருக்கிறார்கள்.

சுருங்கச்சொன்னால், எங்களுக்கு உள்ளேயிருக்கும் முன்னாள் போராளிகளை வெளியே கொண்டுவரவும் தெரியவில்லை. வெளியே இருக்கும் முன்னாள் போராளிகள் இராணுவத்துடன் சென்று இணைந்துகொள்வதை தடுக்கவும் தெரியவில்லை. மொத்தத்தில் எங்களுக்கு எதுவும் தெரியுதுமில்லை. எங்கள் அரசியலாளர்களுக்கு என்ன நடக்குது என்று விளங்குதுமில்லை.

வடமாகாண சபையில் கடந்த மூன்று வருடத்தில் 337 தீர்மானங்களை நிறைவேற்றிய களைப்புடன் கனடா செல்லவுள்ள முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கோ அல்லது தமிழர்களுக்கு தீர்வு வழங்குவதாயின் சிங்களவர்களின் மனங்களை வெல்ல வேண்டும் என்று தலதா மாளிகையில் பிரதட்டை அடித்துக் கொண்டிருக்கும் சம்பந்தனுக்கோ அல்லது அவரது பரிவாரங்களுக்கெல்லாம் இந்த பிரச்சினை பெரிய அரியண்டமாகத்தானிருக்கும். ஏனென்றால், அவர்கள் ஆளுக்காள் அண்ணா – தம்பி என்று 'நாளை நமதே' பாடிக்கொண்டு ஓடுகின்ற அரசியல் வண்டிக்கு இந்த முன்னாள் போராளிகள் பிரச்சினைக்குரிய ஆட்கள். கறைபடிந்தவர்கள். தீட்டுப்பிடித்தவர்கள். தீண்டத் தகாதவர்கள். அறிக்கைகளுக்கும் அரசியலுக்கும் மாத்திரம் மங்களகரமானவர்கள்.

ஏன் துயிலும் இல்லத்தில் விளக்கேற்றிவிட்டு இன்று வரைக்கும் புலிகளின் பெயரையே நாமஸ்கரணம் செய்து கொண்டிருக்கும் சிறிதரன் மற்றும் தலைவர் பிரபாகரன் இப்போது உயிரோடு வந்தாலும் பிரதமராக்குவதாக சூளுரைத்திருக்கும் விஜயகலா மகேஸ்வரன் எல்லோருக்கும் கூட இந்தப் போராளிகள் வெறும் விளம்பர பொம்மைகள். புதுமைப்பித்தன் கூறியதைப்போல புண்ணை காட்டி பிச்சையெடுக்கும் பித்தர்களாகச் சபிக்கப்பட்டவர்கள்.

புலம்பெயர்ந்த பக்கம் பார்த்தால், இங்கே உள்ள பக்கவாத்தியங்களும் தாயகத்தில் வன்வலுக்கொண்டை கட்டியவர்களுக்கு மாத்திரம்தான் ஆதரவாம். ஸ்பீடாக சுற்றுகின்ற கம்புகளுக்கு மாத்திரம்தான் குஞ்சரம் கட்டுவார்களாம்.

இப்போதுகூட, இந்தச் செய்தியைப் பார்த்து பெருந்துயரை பகிர்ந்து கொண்டிருக்கும்போது மறுமுனையில் பேசிய பெருமகன் 'கைக் குழந்தையளோட போய் ஆமிக்காரனிட்ட வேலை கேட்கினம் எண்டு சொல்லுறியள். அப்பிடியெண்டால், பிள்ளை பெற மட்டும் தெரியுது. அந்த நேரத்தில போய் வேற வேலையள் பார்த்திருக்கலாமே' – என்று தனது அதிபுத்தி சாதுரியத்தில் பிறந்த கேள்வி ஒன்றை முன்வைத்தார். வருஷம் பிறந்த பிறகு 'நல்ல சொற்களை' பயன்படுத்துவதற்கு எனக்கொரு சந்தர்ப்பத்தை உவந்தளித்த அந்த அன்பருக்கு நன்றி.

முன்னாள் போராளிகளுக்கு சிவில் பாதுகாப்புப் பிரிவில் வேலை கொடுப்பது போல புலம்பெயர்ந்த கொஞ்சப்பேருக்கு இலங்கை அரசாங்கத்தின்ர புலனாய்வுப்பிரிவில் வேலைக்கு ஆள் எடுத்தால் இங்கிருந்து பலரை ஏற்றுமதி செய்யலாம். அவ்வளவுக்குதுப்பறியும் புலிகளெல்லாம் எங்கள் மத்தியில் ஏறி விளையாடிக்கொண்டு திரியுதுகள்.

எது எப்படியோ –

தமிழர்கள் உண்மையிலேயே பெருமைப்படவேண்டிய தருணம் இது. பதற்றப்படாமல் அந்த பெருமையை கொண்டாட வேணும்.

சிங்களம் தனது பொருளாதாரத்தைச் சீனாவிடம் கொடுத்து விட்டு, அரசியலை அமெரிக்காவிடம் கொடுத்துவிட்டு காலி முகத்திடலில் காலாட்டிக்கொண்டிருக்கிறது.

அதேபோல –

தமிழர்கள் நாங்கள், அரசியலை கொழும்பிலிருந்து வந்த விக்னேஸ்வரனிடமும் சுமந்திரனிடமும் கொடுத்துவிட்டு போராளிகளை இலங்கை இராணுவத்திடம் கொடுத்துவிட்டு போராட்டத்தை சனல் – 4 தொலைக்காட்சியிடம் கொடுத்துவிட்டு பெருமைப்பட்டுக் கொண்டேயிருப்போம்...!

-ப.தெய்வீகன்-

# வவுனியா நெற்களஞ்சியங்களில் இருந்து தெற்குக்கு நெல் கொண்டு செல்ல முயற்சி

## களஞ்சியசாலையை முற்றுகையிட்டு அரிசி ஆலை உரிமையாளர்கள், மக்கள் எதிர்ப்பு

வவுனியா, ஜன.04

வவுனியா மாவட்ட நெற் களஞ்சியசாலைகளில் இருந்து தென்பகுதிக்கு நெல் கொண்டு செல்லப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அரிசி ஆலை உரிமையாளர்கள், பொதுமக்கள் களஞ்சிய சாலையை முற்றுகையிட்டு தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

வவுனியா பாவற்குளம் படிவம் 6 களஞ்சியசாலையிலேயே இந்த எதிர்ப்பு நடவடிக்கை நேற்றுக் காலை இடம்பெற்றது.

வவுனியா, பாவற்குளம் படிவம் 6 நெற் களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும் நெல்லைத் தென்பகுதிக்கு கொண்டு செல்வதற்கு பாரவூர்திகள் வந்திருந்தன.

இதனையடுத்து அங்கு ஒன்று கூடிய வவுனியா மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள், அரிசி ஆலைகளில் வேலை செய்வோர், பொது மக்கள் எனப் பலரும் எதிர்ப்புத் தெரிவித்தனர்

எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்:-

களஞ்சியசாலையில் உள்ள நெல்லை மாவட்ட அரிசி ஆலைகளுக்கு வழங்க வேண்டும் அல்லது அதனை அரிசியாக்கி மாவட்டத்தில் உள்ள சதொச மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் எமது பகுதி மக்களுக்கு குறைந்த விலையில் அரிசி கிடைக்கச்செய்ய வேண்டும்.

தற்போது வறட்சியான காலநிலை காரணமாகப் பெரும்போக நெற்செய்கை பொய்த்துவிட்டது. அரிசி விலையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இந்த நிலையில் இங்குள்ள நெல்லை பொலனறுவை போன்ற







பகுதிகளுக்கு ஏற்றுகிறார்கள். அங்கிருந்து மீள அரிசியாக வரும் போது நாம் அதிக விலை கொடுத்தே அவற்றை உணவுக்காகப் பெற வேண்டும்.

இதனால்இந்தநெல்லை இங்குள்ள அரிசி ஆலைகளுக்கு கொடுத்தால் நாம் அரிசியைக் குறைந்த விலையில் பெற முடியும். வவுனியாவில் 30 அரிசி ஆலைகள் நெல் இல்லாமையால் மூடப்பட்டுள்ளன. இதனால் இதில் வேலை செய்த 500 இற்கும் மேற்பட்ட எமது பகுதி மக்கள் வேலையின்றி வறுமையில் இருக்கின்றனர். இந்த நெல்லை இங்குள்ள ஆலைகளுக்கு வழங்கினால் வேலை வாய்ப்பையும் பெறக் கூடியதாக இருக்கும்.- என்று தெரிவித்தனர்.

இதேவேளை, இந்த எதிர்ப்பு நடவடிக்கை தொடர்பாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், கே.கே. மஸ்தான், அரச அதிபர் எஸ்.வி.ரோஹண புஸ்பகுமார உள்ளிட்டவர்களின் கவனத்துக்குத் தொலைபேசி மூலம் தெரியப்படுத்தப்பட்டது.

நெல்லை ஏற்றுவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் பேசி முடிவு எடுக்கப்படும் எனஅவர்கள் தொலைபேசி மூலம் இதற்குப் பதில் தெரிவித்துள்ளனர். (ஐ-100)

# கேப்பாபுலவில் முழுமையாக இராணுவத்தை அகற்றுங்கள்

## இதனையே ஜனாதிபதியிடம் மக்கள் கேட்கவுள்ளனர்

கிளிநொச்சி, ஜன.04

கேப்பாபுலவுக்கு வருகை தரும் ஜனாதிபதியிடம், இராணுவ முகாம்களை அகற்றி இந்தக் கிராமத்தை முழுமையாக விடுவிக்க வேண்டும் என்பதையே வலியுறுத்துவோம் என்று கேப்பாபுலவு மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக மக்கள் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இடம்பெயர்ந்த போது இராணுவத்தினர் எமது கிராமத்தை முழுமையாகக் கைப்பற்றி இராணுவ முகாம்களை எமது பூர்வீக நிலத்தில் அமைத்திருந்தனர்.

எம்மை நலன்புரி நிலையங்களில் இருந்து அழைத்து வந்த இராணுவத்தினர் 2012 ஆம் ஆண்டில் சூரியபுரம் காட்டுப் பகுதியில் மாதிரிக் கிராமத்தை உருவாக்கிக் குடியமர்த்தினர்.

இந்த நிலையில் அடிப்படை வசதிகள் குறைந்த நிலையில் இதுவரை நாம் வாழ்ந்து வருகின்றோம்.

நல்லாட்சி அரசுக்கு நாம் வாக்களித்தது எமது பூர்வீக நிலங்கள் விடுக்கப்படும் என்பதாலேயே. எமது பூர்வீக நிலங்கள் முழுமையாக விடுக்கப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

மாதிரிக் கிராமத்தில் எம்மால் தொடர்ந்து வசிக்க முடியாது. எம்மை மாதிரிக் கிராமத்தில் தொடர்ந்து தங்க வைத்திருப்பது எமது நாட்டுக்குள்ளேயே சிறைச்சாலையில் வாழ்வதற்கு ஒப்பானதாகும்.

எமது கிராமத்துக்கு ஜனாதிபதி வரும்போது இதனையே வெளிப்படுத்துவோம். எமது கிராமத்துக்கு போக்குவரத்து வசதிகள் இல்லை. முதன்மை வீதிகள் புனரமைக்கப்படவில்லை. மின்சார வசதிகள் இல்லை. இவை எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்வோம். ஆனால் எமது சொந்த இடம் எமக்கு வேண்டும்.

எமது வாக்குகளைப் பெற்ற ஜனாதிபதி வரும் போது கேப்பாபுலவு கிராமத்தை முழுமையாக விடுவிக்க வேண்டும் என்பதையே வலியுறுத்துவோம்.- என்று தெரிவித்தனர். (ஐ-70)

# வடக்கு சுகாதாரப் பரிசோதகர்களுக்கு பழிவாங்கல் ரீதியான இடமாற்றங்கள்

## யாழ். மாவட்ட பொதுச்சுகாதார பரிசோதகர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன.04

வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு பழிவாங்கல் ரீதியான இடமாற்றம் வழங்கப்படுகிறது என்று குற்றம் சாட்டியுள்ளது யாழ். மாவட்ட பொதுச்சுகாதார பரிசோதகர் சங்கம்.

இடமாற்றக் கொள்கைகளுக்கு முரணாகவும், தாபன விதிக்கோவைகளுக்குப் புறம்பாகவும் வருடாந்த இடமாற்றம் வழங்கப்படுகிறது என்று தெரிவித்து, 2016 டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி முதல் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் போராட்டம் தொடர்பாகத் தெளிவுபடுத்தும் பத்திரிகையாளர் சந்திப்பொன்று யாழ். சோமசுந்தரம் வீதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன் போதே யாழ். மாவட்ட பொதுச்சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் க.சதீஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

அநீதியான முறையில் வழங்கப்படுகின்ற இடமாற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் நாம் ஈடுபட்டு வருகின்றோம். 2014 இற்கு முன்னர் சீரான முறையில் வழங்கப்பட்டு வந்த இடமாற்றம், 2015 இற்குப் பின்னரான காலப் பகுதியில் முறையற்ற வகையில் வழங்கப்பட்டு வருகின்றது.

இடமாற்ற சபையால் கடந்தவருடம் இடமாற்றக் கொள்கை ஒன்று உருவாக்கப்பட்டது. பின்னர் அதே வருடத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கெனத் தனியான இடமாற்றக் கொள்கை ஒன்று உருவாக்கப்பட்டது. இது எந்த மாகாணத்திலும் இல்லாத நடைமுறையாகும்.

இடமாற்றக் கொள்கை ஒன்று தயாரிக்கப்படும் போது சம்பந்தப்பட்ட தொழிற்சங்கத்தின் ஆலோசனை பெறப்பட வேண்டியது அவசியமாகும். ஆனால், இங்கு இந்த நடைமுறை பின்பற்றப்பட்டாலும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் நலன்கள் கருத்தில் கொள்ளப்படுவதில்லை.

அரசியல் பழிவாங்கல் நோக்கங்களோடு இடமாற்றம் செய்யப்படுகின்றனர். வெளி மாவட்டங்களுக்குக் கடமைக்குச் செல்பவர்கள் குறித்த காலப் பகுதிக்குப் பின்னர் தமது சொந்த மாவட்டத்துக்குத் திரும்புவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

ஆனால், புதிய இடமாற்றத்தின் படி 10 வருடங்களுக்கு மேல்சொந்த மாவட்டத்தில் கடமையாற்றியவர்கள் கட்டாயம் வெளி மாவட்டத்துக்குச் செல்ல வேண்டும் என்பது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. இது தவிர, பாதிக்கப்படுபவர்கள் மேன்முறையீடு செய்யும் உரிமையும் பறிக்கப்பட்டுள்ளது. இது உத்தியோகத்தர்களின் மன நிலையைப்பாதிக்கும் நடவடிக்கையாகும்.

இவ்வாறான செயற்பாடுகளால் அவர்களது பிள்ளைகளின் கல்வியும் பாதிக்கப்படுகின்றது.

எனவே எமது தொழிற்சங்கத்தின் ஆலோசனை பெறப்பட்டு இடமாற்றக் கொள்கை தயாரிக்கப்பட வேண்டும். அல்லது 2015 இற்கு முன்னர் இடம்பெற்ற இடமாற்றங்கள் போன்று வழங்கப்பட வேண்டும்.

இடமாற்றம் வழங்கப்படும் போது தாபன விதிக்கோவைக்கு அமைய உத்தியோகத்தர்களின் நலன்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரையில் எமது பணிப்புறக்கணிப்புத் தொடரும்.- என்றார். (ஐ)

# எதிர்வரும் தேர்தலில் கூட்டு எதிர்க்கட்சியுடன் இணைந்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன போட்டியிடும்

முன்னாள் வெளி விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன, எதிர்வரும் தேர்தலில் கூட்டு எதிர்க் கட்சியுடன் இணைந்து போட்டியிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் தேர்தல்களில் ஏற்படும் சவால்களை சமாளிக்கும் ஓர் உத்தியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது தடவையும் தாம் ஏமாறப்போவதில்லை. எதிர்வரும் தேர்தல்களில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே கட்சியை வழி நடத்துவார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இணைந்து செயற்படுவதால் புதிய கட்சிக்கு மக்கள் ஆதரவளிப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

ஒன்றிணைந்த ஸ்ரீலங்கா சுத நந்திரக் கட்சி தலைமையில் புதிய அரசை அமைப்பது தொடர்பில் சில ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டு வரும் நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இந்த அறிவிப்புக்களை வெளியிட்டுள்ளது என்று பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## யதார்த்தம் உணர்ந்து பேசுக!

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவிருந்தார். இந்த விஜயத்தை ஒட்டி நேற்று முன்தினம் வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் சில கருத்துக்களைச் செய்தியாளர் மாநாட்டில் பகிரங்கமாக வெளியிட்டிருக்கின்றார்.

இனப் பிரச்சினைத் தீர்வையும் உள்ளடக்கியதான நகல் அரசமைப்பு அடுத்து வரும் வாரத்தில் வெளியாகவுள்ளது என்ற தகவலை வெளியிட்ட அவர், அதில் இலங்கைத் தமிழர்களின் நியாயபூர்வமான எதிர்பார்ப்புகளை - அபிலாஷைகளை - விருப்புகளை - நிறைவு செய்யும் விடயங்கள் இடம்பெறப் போவதில்லை என்று அவநம்பிக்கையும் வெளியிட்டார். இதனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீதும் அவரது அரசு மீதும் தமிழ் மக்களுக்கு உள்ள கசப்புணர்வு அதிகரிக்கும் என்று சுட்டிக்காட்டிய அவர், அதன் காரணமாக இதுவே வடக்கு வரும் ஜனாதிபதியின் கடைசி அமைதி விஜயமாக இருக்கும் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

அதாவது, அடுத்த தடவை ஜனாதிபதி யாழ்ப்பாணம் வரும்போது தமிழ் மக்கள் அவரை ஒதுக்குவர் என்றும், அதனால் அவரது அடுத்த யாழ். விஜயம் அமைதியாக இருக்காது என்றும் சிவாஜிலிங்கம் முன் எச்சரிக்கை விடுத்திருக்கின்றார்.

இதேபாணியில் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த தலைவர்களுள் ஒருவரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசாவும் அவ்வப்போது போராட்ட எச்சரிக்கைகளை விடுத்து வருகிறார்.

இந்த உசுப்பேத்தல் பேச்சுகள் எல்லாம் காலாவதியாகிக் கனகாலமாகி விட்டன என்பதை இவர்கள் மறந்து போனமைதான் வேடிக்கையானது.

அமைதித் தீர்வுக்கான பேச்சுகளில் பங்குபற்றும் சுமந்திரனும், சம்பந்தனும் இத்தகைய போராட்டப் பாணியின் அல்லது பரணியில் பேசுவதில்லை.

ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை விவகாரம் தொடர்பில் இலங்கையோடு சேர்ந்து - இலங்கையையும் இணங்கப் பண்ணி - ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர வைத்ததில் முன்னின்று செயற்பட்டவர் சுமந்திரன் எம்.பி.

அந்தத் தீர்மானத்தின் மூலம் இலங்கை தானும் சேர்ந்து இணங்கிக் கொண்ட இணக்கப்பாடுகளை - கடப்பாடுகளை - நிறைவேற்றவில்லை. அதற்கான காலக்கெடு இந்த மார்ச்சுடன் - அடுத்த இரண்டு மாதங்களில் - நிறைவடையப் போகின்றது. அந்தப் பின்னடைவைச் சுட்டிக்காட்டும்போது கூட, சுமந்திரன் இந்தப் போராட்டப் பாணி அறிவிப்பை விடுக்கவில்லை.

"இலங்கை, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் தானும் சேர்ந்து நிறைவேற்றிய தீர்மானம் மூலம் ஒப்புக்கொண்ட விடயங்களை அது நிறைவு செய்யவில்லை. அதற்கு நாம் பதிலடியாக என்ன செய்யமுடியும்? ஆகவே, நாமும் சேர்ந்து இறங்கி, மேலும் ஒரு கால அவகாசத்தை இலங்கைக்கு வழங்கி, அந்தக் கடப்பாட்டுச் சட்டகத்துக்கு வெளியே இலங்கை போகாமல் மடக்கிப் பார்த்துக் கொள்வதுதான் சாணக்கியமானது" - என்று யதார்த்தப் போக்கில் சுமந்திரனின் கருத்து அமைந்திருக்கின்றது.

அப்படிப் பணிந்து, இறங்கி, வளைந்து கொடுத்துப் போவது சரியானதா, நியாயமானதா, அது அடிமைத்தனத்தை ஒப்புக் கொள்வது போன்ற செயலாகாதா என்ற கேள்விகள் எல்லாம் நியாயமானவைதான்.

ஆனால், 2009 மே மாதத்தில் ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்காலுடன் முற்றுப் பெற்ற பின்னர், அதுதான் நிலைமை என்றாகி விட்டது.

ஆயுதப் போராட்டம் முடிந்துவிட்டது என்பதற்காக எமது போராட்ட வீச்சை நாம் விட்டுக் கொடுக்கத் தேவையில்லை. தொடர்ந்து சாத்வீக வழியில் கனதியாகப் போராட முடியும்.


ஆனால், அப்படி நமது மக்கள் போராடுவதற்கான சூழ்நிலை என்பது வெறும் மாவை, சிவாஜிலிங்கம் போன்றோரின் வாய்ச் சவடால் பேச்சால் வந்துவிடப்போவதில்லை. அதற்கான தயார் நிலையில் மக்களை வைத்திருக்க வேண்டும். மக்களை அந்தத் தயார் நிலையில் வைத்திருக்கக் கூடியதாக அவர்களின் மன நிலை பேணப்படவேண்டும். அதற்கு தமிழ் மக்களின் பிரச்சினை பற்றிய விவகாரம் கொதிநிலையில் வைத்திருக்கப்படவேண்டும். அதைக் கோட்டை விட்டுவிட்டு வந்து, மக்களைப் போராடத் தலைவர்கள் அழைப்பார்களாயின் அது பொசுங்கிவிடும் என்பதில் ஐயம் இல்லை.

'எழுக தமிழ்' போன்ற எழுச்சிக் கோசங்கள் மூலமும், அறிவூட்டல் வாயிலாகவும் எமது பிரச்சினையின் மோச நிலைமை குறித்து மக்களுக்கு எடுத்து விளங்கி, உணர்த்தி, உணர்வூட்டி, சிந்தனை மயப்படுத்தி, போராட்டத்துக்கான கொதிநிலையில் மக்களை வைத்திருக்கத் தவறிவிட்டுவிட்டு -

பின்னர் அமைதி முயற்சிகளில் தோற்று, யதார்த்தத்தை உணரும் போது மக்களை உசுப்பேத்த முயன்றால் அது சரிவராது.

'இதோ, தீர்வைப் பேசிப் பெற்றுத் தரப்போகிறோம். அதுவரை அமைதி பேணுங்கள். தீர்வுக்கு இடம் விட்டு தந்து, பேசவிடுங்கள்' - என்று கொதிநிலையில் இருந்த மக்களை ஆசுவாசப்படுத்தி, அடங்கிப் போய், நம்பிக்கையுடன் காத்திருக்க வைத்துவிட்டு, பின்னர் எல்லாம் இழந்து, ஏமாற்றம் கண்டதும் குதித்து, 'குய்யோ முறையோ' என்று கூப்பாடுபோடுவதில் ஏது பயன்?

அந்தச் சூழ்நிலையில் இன்னொரு தடவை ஜனாதிபதி யாழ்ப்பாணம் வந்தாலும் அவருக்கு அமைதி வழியில் தன்னும் காத்திரமாக எதிர்ப்புக் காட்ட இங்கு யாரும் இருக்கமாட்டார்கள் என்பதே நிலைமை!




## தபால் ஊழியர்கள் மீண்டும் தொழிற் சங்கப் போராட்டம்

கொழும்பு, ஜன.04

தபால் ஊழியர்கள் மீண்டும் தொழிற்சங்கப் போராட்டத்தில் குதிப்பதற்குத் தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பில் தபால் தொழிற் சங்க கூட்டமைப்பின் அழைப்பாளர் சின்தக பண்டார ஊடகங்களுக்குத் தெரிவித்தவை வருமாறு:

"தபால் ஊழியர்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகளுக்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் நியாயமான தீர்வுத் திட்டம் பெற்றுக் கொடுக்க வேண்டும்" என்று கோரி ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

"எமது கோரிக்கைகளுக்கு அரசு நியாயமான தீர்வுத் திட்டம் ஒன்றை வழங்கத் தவறினால் நாடுதழுவிய ரீதியில் தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுக்க நேரிடும்.

"இதேவேளை தபால் ஊழியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க அரசுக்கு 14 நாள்கள் காலஅவகாசம் வழங்கப்பட்டது. அந்த அவகாசம் நாளை மறுதினத்துடன் நிறைவடைகின்றது.

"21 ஆயிரம் தபால் ஊழியர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு இதுவரையில் காத்திரமான எந்தவொரு முயற்சியையும் மேற்கொள்ளவில்லை.

எனவே, எதிர்வரும் 7 ஆம் திகதி தபால் தொழிற் சங்கங்கள் கூடி பேசி அடுத்த கட்ட நடவடிக்கை குறித்த தீர்மானம் எடுக்கும்." என்றார். (எ)

## இலங்கைக் கடற்படையின் வருமானம் கடந்த வருடம் மட்டும் 226 கோடி ரூபா!

கொழும்பு, ஜன.04

இலங்கைக் கடற்படை கடந்த ஆண்டில் 226 கோடி ரூபா வருமானத்தை ஈட்டி சாதனை படைத்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் முதல் கரையோரப் பாதுகாப்புப் பணி நடவடிக்கைகள் மூலம் இந்த வருமானத்தை ஈட்டியுள்ளதாக இலங்கைக் கடற்படை அறிவித்துள்ளது.

கடந்த வருடம் 6 ஆயிரத்து 371 நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று கடற்படை கூறியுள்ளது.

இதேவேளை எவன்கார்ட் தனியார் நிறுவனத்திடம் இருந்த கரையோரப் பாதுகாப்புப் பணி நடவடிக்கைகள் 2015ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கடற்படைக்கு வழங்கப்பட்டது.

அதன்பின்னர், 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி முதல் இந்த வருடம் ஜனவரி 2 ஆம் திகதி வரையில் 263 கோடி ரூபா வருமானம் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருவருட காலப்பகுதியில் பருவ நடவடிக்கைகளில் 7 ஆயிரத்து 457 கப்பல்களில் இலங்கைக் கடற்படை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கை மூலம் பெறப்பட்ட வருமானம் அரசின் ஒன்றிணைந்த நிதியத்துக்கு நேரடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கைக் கடற்படை மேலும் கூறியுள்ளது.

## கறுப்புப்பண விவரத்தை வெளியிடுகிறது சுவிஸ்; இலங்கையர்களின் தகவல்களும் வெளிவரலாம்

கொழும்பு, ஜன.04

சுவிஸ் வங்கிகளில் கறுப்புப்பணத்தை பதுக்கி வைத்திருப்பவர்களின் பெயர் விவரங்களை வெளியிடுவதற்கு அந்த நாட்டு அரசு தீர்மானித்துள்ளது. இதனால், சுவிஸ் வங்கிகளில் கறுப்புப் பணம் வைப்புச் செய்துள்ள இலங்கையர்கள் தொடர்பான தகவல்கள் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை சுவிஸ் வங்கிகளில் கறுப்புப் பணம் வைப்புச் செய்தவர்களின் இரகசியத்தைப் பாதுகாப்பதாகச் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை கடந்த முதலாம் திகதியுடன் நிறைவடைந்துள்ளது.

இதனால் வெளிவரும் பெயர்ப்பட்டியலில் இலங்கையர்கள் தொடர்பான தகவல்களும் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சுவிஸ் வங்கிகளில் கறுப்புப் பணம் வைப்புச் செய்தவர்களின் இரகசிய ஒப்பந்தத்தை ரத்துச் செய்வதற்கான தீர்மானத்தைச் சுவிஸ் அரசு அறிவிப்புச் செய்துள்ளதாகவும், இது தொடர்பான உடன்படிக்கையில் அந்தநாட்டு அரசு கைச்சாத்திட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இலங்கையர்கள் 200 பேரின் கறுப்புப் பணம் சுவிஸ் வங்கிகளில் உள்ளதாகக் கடந்த வருடம் வெளியான பனாமா பத்திரத் தகவல்கள் மூலம் பகிரங்கமாகக் கூறியிருந்தது.

எனினும், சம்பந்தப்பட்ட தகவல்களை சுவிஸ் அரசு வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

### நாளை

05.01.2017
வியாழக்கிழமை
திதி : ஸப்தமி மு.ப 11.17வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி பி.ப 2.21 வரை
சுபநேரம் : 08.01 - 09.31
இராகுகாலம் : 02.01 - 03.30

# யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் வே.ஞானகாந்தனின் மணிவிழா சிறப்பு மலர்

## (04.01.2017)



## இரக்க சுபாவமுடைய பண்பாளர்


கல்விப்பணியால் பலரது பாராட்டையும் பெற்ற அதிபர் திருமிகு. ஞானகாந்தன் அவர்களின் மணிவிழாக் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் வளர்ச்சியில் அயராது உழைத்த பெருந்தகை. ஆண்டுதோறும் புலமைப்பரிசில் பரீட்சையில் இந்து ஆரம்பப் பாடசாலை மகத்தான சாதனையை நிலைநாட்ட அல்லும் பகலும் உழைத்தவர். அரங்கில் தானே தேவார திருவாசகத்தைப் பாடி மாணவர்களை ஆன்மீக நெறியில் வளர்த்தவர். மூத்தவர்களைத் தாழ் பணிந்து வணங்கும் சுபாவமுடையவர்.

இளைப்பாறிய ஆசிரியர்களின் இல்லம் சென்று அவர்களின் ஆசியைப் பெறும் நற்பழக்கமுடையவர். இரக்க சுபாவமுடைய பண்பாளர். பகை அறியாத பண்பாளர். கனகரத்தினம் மகா வித்தியாலய அதிபராகப் பொறுப்பேற்றபின் விடுதிச்சாலையில் மாணவரை சகல வசதிகளுடன் கற்பதற்கு வழி செய்தவர். கொக்குவில் இந்துக் கல்லூரியின் அரியாசனத்தில் அமர்ந்து பணியாற்றும் அரிய வாய்ப்பு அவரது சேவையின் சிறப்புக்கு இலக்கணமாகக் கிடைத்தது.

ஆளுமைமிக்க அதிபரின் நிறைந்த சேவையை மதித்து அன்பர்கள் எடுக்கும் மணிவிழாச் சிறக்க வாழ்த்துகிறேன். சகல வளங்களுடனும் மன நிறைவுடனும் அதிபரும் அவர் குடும்பமும் சிறக்கத் துர்க்காதேவியைப் பிரார்த்தித்து அமைகிறேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்**
*தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.*





## நேர்க்கணிய சிந்தனை கொண்ட அதிபர்

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் உயர்திரு. வே.ஞானகாந்தன் அவர்களின் மணி விழாவுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை, யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் புகழ்பூத்த அதிபராகப் பணியாற்றி ஓய்வுபெறுகின்ற அதிபர் திரு. ஞானகாந்தன் அவர்கள் தான் வகித்த பதவிக்கே இலக்கணமாகத் திகழ்ந்தவர் எனக் கூறினால் அது மிகையாகாது.

தான் பதவியில் இருந்த காலத்தில் அப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கு அவர் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் எல்லோராலும் பாராட்டப்படும் வகையில் பதவியை அலங்கரித்தவர். அத்தகைய பெருமைக்குரிய அதிபர் இன்று இளைப்பாறுகின்றமை எமக்கு மனச் சுமையை ஏற்படுத்தினாலும் அவரதுஆலோசனையும்வழிகாட்டலும்தொடர்ந்தும் கிடைக்கும் என்ற நம்பிக்கை மனதைத் தேற வைத்துள்ளது.

அதிபர் உயர் திரு.வே.ஞானகாந்தன் தான் பெற்றுக் கொண்ட உயர் கல்வியாலும் அனுபவத்தாலும் தலை சிறந்த அதிபராக விளங்க முடிந்துள்ளது எனக் கூறினால் அதில் மிகையொன்றும் இல்லை. முதல் பட்டம், இரண்டாம் பட்டம், மூன்றாம் பட்டமென கல்வியுலகுக்குத் தேவையான உயர் பட்டப் படிப்புக்களை நிறைவு செய்த காரணத்தால் பாடசாலை நிர்வாகத்தைத் திறம்பட மேற்கொள்வதற்குத் தேவையான அறிவும் ஆளுமையும் அவரிடம் நிறையவே காணப்பட்டன. அது மட்டுமன்றி, பாடசாலைச் சமூகத்தை விளங்கி, அவர்களின் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றும் ஆற்றல் அவரிடம் காணப்பட்டமையை எவரும் மறுக்க முடியாது. '

இன்றைய காலத்தில் முகாமையின் வெற்றிக்கு அடிப்படையில் அமையக் கூடிய நேர்க்கணிய சிந்தனையை அவர் கொண்டிருந்த காரணத்தால் முரண்பாடுகள் இல்லாதநிர்வாக முறையை அவரால் பின்பற்ற முடிந்தது. பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களையும், கல்விகற்கும்மாணவர்களையும் மட்டுமன்றி, பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் என பாடசாலைச் சமூகத்தவர்கள் அனைவரையும் பாடசாலையின் இலக்குநோக்கி நகர்த்திச் சென்ற பெருமை அவருக்குரியதேயாகும். இத்தகைய நேர்க்கணிய சிந்தனையே அவரின் வெற்றிகரமான நிர்வாகத்துக்கு அடிப்படையில் அமைந்ததெனக் கூறமுடியும்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் புகழ் பூத்த அதிபராகப் பணியாற்றி இளைப்பாறும் உயர்திரு. வே.ஞானகாந்தன் அவர்கள் ஓய்வின் பின்னரும் உற்சாகத்துடன் இயங்குவதற்கு எல்லாம் வல்ல இறைவன் நல்ல உடலாரோக்கியத்தை வழங்க வேண்டுமென இறைஞ்சுவதுடன் அவரது மனைவி, பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என வாழ்த்தி அவரது தன்னிகரற்ற சேவைக்கு எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பேராசிரியர் க.தேவராஜா,**
*யாழ்.பல்கலைக்கழகம்,*
*தலைவர், மணிவிழாக் குழு,*
*முன்னாள் செயலாளர்,*
*பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,*
*கொக்குவில் இந்துக் கல்லூரி.*

## வேலாயுதபிள்ளை ஞானகாந்தன்

பிறப்பிடம் : நயினாதீவு
பிறந்த திகதி : 04.01.1957
தாயார் பெயர் : சிவயோகம்மா
கல்வி : நயினாதீவு மகா வித்தியாலயம்
ஆசிரியர் நியமனம் : 17.03.1978 வ/பறையனாலங்குளம் அ.த.க.பாடசாலை
தகைமை : B.A பேராதனைப் பல்கலைக்கழகம்
ஆசிரிய பயிற்சி : கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை
கல்விப் பின் தகைமை : Dip.in Edu. (யாழ். பல்கலைக்கழகம்)
M.Ed. (யாழ். பல்கலைக்கழகம்)
அதிபர் நியமனம் : 01.06.1991
திருமணம் : 27.11.1986 (திருமணமாகி 30 ஆண்டுகள்)
மனைவி : கேதாரபூரணி (முன்பள்ளி பொறுப்பாசிரியர்)
பிள்ளைகள் : திருமதி சுகப்பிரதா இரமணன் (இரு பேர்த்திகள்)
திருமதி சுகவரதா பிரியதர்சன்
திரு ஞா.சிவானுஜன்

### சேவை விவரம்

**ஆசிரியர் சேவையில் 13 வருடங்கள்**

வ/ பறையனாலங்குளம் அ.த.க.பா.17.03.1978 - 11.01.1981, வ/பூவரசங்குளம் மகா வித்தியாலயம் 12.01.1981 - 17.01.1982, யா/கோப்பாய் ஆசிரிய கலாசாலை 18.01.1982 - 31.12.1982, வ/பூவரசங்குளம் மகா வித்தியாலயம் 01.01.1984 - 17.05.1987, யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம் 18.05.1987 - 04.06.1991, ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணக் கோட்டம் 05.06.1991 - 08.10.1992

**அதிபர் சேவையில் 26 வருடங்கள்**

யா/ கல்வியங்காடு இ.த.க பாடசாலை 09.10.1992 - 11.01.1997, யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் 12.01.1997 - 26.01.1998, யா/ யாழ். இந்து ஆரம்ப பாடசாலை 27.01.1998 - 15.06.2010, யா/ கனகரத்தினம் ம.மகா வித்தியாலயம் 16.06.2010 - 09.12.2012, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி 10.10.2012 - 03.01.2017

### சமூக சேவைகள்

✱1983 கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் உதவி சிரேஷ்ட மாணவ தலைவன்.

✱1985 - 1986 பூவரசங்குளம் பாலசுப்பிரமணியர் ஆலய பரிபாலன சபையின் செயலாளராக இருந்து 1986இல் மகா கும்பாபிஷேகம் நடத்தி முடித்தமை

✱1993 - 2000 யாழ். மாவட்ட கல்வி மேம்பாட்டுக் கழகத்தின் பொருளாளராகப் பதவி வகிப்பு.

✱1994-2000 நல்லை தமிழ்ச் சங்கத்தின் தலைவராக பணியாற்றி கருத்தரங்குகளையும், கவியரங்குகளையும் இளைஞர் குழாத்துடன் கிராமங்கள் தோறும் நடத்தி வந்தமை.

✱1997 முதல் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தின் நிர்வாக உறுப்பினராகவும், பரீட்சை உதவிச் செயலாளராகவும் செயற்பட்டமை.

✱2000- 2004 வரை பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் உப தலைவராக இருந்து பாரம்பரிய கலைகளை அடையாளப்படுத்தியதோடு போட்டிகளை நடத்தி ஊக்கப்படுத்தியமை. கலைஞர்களின் வரலாற்றை நூலுருவாக்கத்தில் செயற்படுத்த பங்குபற்றியமை.

✱2000- 2006 '' இலங்கையில் பிள்ளைகளைப் புரிந்து கொள்ளல்'' தேசிய கல்வி நிறுவகத்தின் நெட்டாங்கு ஆய்வில் ஆய்வாளராகத் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் பணியாற்றியமை.

✱2002 - 2006 கொண்டலடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலையின் ஆலோசகராகப் பணியாற்றியமை.

✱2005 முதல் இன்றுவரையில் யாழ்ப்பாண அரிமாக் கழகத்தின் உறுப்பினராகவும் 2010 -2011 காலப்பகுதியில் அதன் தலைவராகவும் பணியாற்றியமை.

✱2006 - 2014 யாழ்ப்பாணம் மத்தியஸ்தர் சபையின் உறுப்பினராகவும் 2013 - 2014 இல் உதவித் தவிசாளராகவும் கடமையாற்றியமை.

✱28.05.2008 முதல் சமாதான நீதிவானாக நியமனம்.

## வாழ்த்துப் பாமாலை

அருளொடு அறம் வளர்க்கும் நாயகி நாகபூஷணி அம்மன்
அருளாட்சி செய்யும் நயினை நகர் வாழும்
திருவுடையார் வேலாயுதபிள்ளை தம்பதிகள் பேர் விளங்க வந்த
மைந்தன் பெருமகன் பேருவந்த ஞானகாந்தன்
பெருமனத்தான் முப்பதொடு ஒன்பது ஆண்டுகள் ஆசிரியராய் நல்ல
அதிபராய்க் கல்விப் பணிபுரிந்தோன் கொக்குவிலிந்துவில்
பெருஞ்சேவை கண்டு கல்லூரித்தாய் மகிழ்ந்தாள் மணிவிழா
நாயகனே! பல்லாண்டு நலத்துடன் வாழி! வாழி!

திருவொடு சீர்பல கல்விசிறந்திடும் நயினை மகாவித்தியாலயத்தில்
கல்விப்பயிர் வளர்த்து கோப்பாயில் ஆசிரியப் பயிற்சிபெற்று
விருப்புடன் பேராதனை, யாழ்.பல்கலைக்கழகம் சிறப்பித்து முதுகலை
மாணிப் பட்டங்கள் பெற்று ஆசிரியராய், அதிபராய் சேவை செய்தோன்
பெருமையுற யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம், ஆரிய திராவிட பாஷாஅபிவிருத்தி
சங்கம், அரிமாக் கழகம், கலை மேம்பாட்டுக்கழகம் வளர உழைத்தோன்
கருத்தரங்குகள், கவியரங்குகள் நடத்திய கலைஞன் ஞானகாந்தன்
பேருடனும் புகழுடனும் பெருமையுடன் கற்பகமாய் வாழி! வாழி!

தானங்களிற் சிறந்தது வித்தியாதானம் என்ற அறநெறிபோற்றி
வாழ்ந்தனன் கல்வியுலகம் மகிழ்ந்தது வியந்தது
பன்னலப் பணிகளால் நன்மாணாக்கர் பலரை உருவாக்கி உயர்ந்தவன்
பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் போற்ற வாழ்ந்தவன்
தன்னலமற்ற பணிகளால் கற்ற பாடசாலைக்கும் பெற்றோருக்கும்
பெருமை சேர்த்தோன் கொக்குவில் இந்துவின் அதிபர் ஞானகாந்தன்
உன்னதமான பணிகண்டு உவந்து உளமார வாழ்த்துகின்றோம்
மனைவி மக்கள் பேரருடன் மங்கலமாய்ப் பல்லாண்டு வாழி! வாழி!. →

**வாழ்த்துவோர்:**

*பேராசிரியர் க. தேவராஜா*
*திரு.சண். வாமதேவன்*
*(ஓய்வுநிலை அதிபர்)*
*திரு.எஸ்.தனபாலசிங்கம்*
*(அதிபர், கொக்குவில் ஆரம்பப் பாடசாலை)*
*திரு. ஞான. திருக்கேதீஸ்வரன்*
*(ஆசிரியர்,மானிப்பாய் இந்துக் கல்லூரி)*
*திரு. வி. தயாபாலன்*
*(ஆசிரியர்,யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)*
*திரு. எஸ். ஜெகபாலன்*
*(மக்கள் நலன்பேணும் அமைப்பு கோண்டாவில்)*
*திரு. எஸ்.என். பிரேம்குமார்*
*(பொது சுகாதாரப் பரிசோதகர்)*
*திரு.சொ.லோகேஸ்வரன்*
*(பிரதி அதிபர்,கொக்குவில் இந்துக் கல்லூரி)*
*B.N சுதர்சன்*
*(பிரதி அதிபர்,கொக்குவில் இந்துக் கல்லூரி)*
*சோ.முகுந்தன்*
*(ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி)*
*நயினை மயூசன்*
*(உப அதிபர், பெரியபுலம் மகா வித்தியாலயம்)*

*ஆக்கம்: ஞான. திருக்கேதீஸ்வரன்*

விளம்பர அனுசரணை:
நபாலசிங்கம் புத்தகசாலை
கிறீன் கிறாஸ் ஹோட்டல்
அன்னை புத்தகசாலை
வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்.
லக்ஸ்மி காகிதாதிகள்
111, வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்.
தர்சினி அழககம்
உரிமையாளர் சி.சிவகுமார்
இல:89,90 மேற்கு மார்க்கட், யாழ்ப்பாணம்.
ஞானம் புத்தகசாலை
1024, K.K.S.வீதி, யாழ்ப்பாணம்.
(C/301)

# நிலாவெளியில் இரு ஆலயங்கள் விஷமிகளால் உடைத்துச் சேதம்



பற்றைக்குள் விநாயகர் சிலை



கோபுரக் கலசம் சேதம்

திருகோணமலை,ஜன.04

திருகோணமலை நிலாவெளிப் பகுதியில் அமைந்துள்ள இரண்டு கோவில்கள் இனந்தெரியாத நபர்களால் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளன. அடம்போடை வீதியை அண்டி அமைந்துள்ள கூழாவடிப் பிள்ளையார் கோவில் மற்றும் நிலாவெளி இரண்டாம் வட்டாரத்தில் அமைந்துள்ள பழைமை வாய்ந்த பத்தினி அம்பாள் கோவில் என்பனவே இவ்வாறு சேதப்படுத்தப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவங்களில், கூலாவாடி பிள்ளையார் ஆலயத்தின் மூலஸ்தானத்தில் உள்ள விக்கிரகம் உடைக்கப்பட்டு அருகில் உள்ள பற்றைக் காட்டுப் பகுதியில் வீசப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்தில் தற்போது பெருங்கதை விசேட தின பூஜைகள் இடம் பெற்று வருகின்றன. இந்நிலையில் சுவாமிக்கு மலர்கள் கொண்டு சென்ற முதியவர் ஒருவரே, மூலஸ்தானத்தில் இருந்த விக்கிரகத்தைக் காணவில்லை எனத் தேடியுள்ளார். இதன் போதே உடைக்கப்பட்ட விக்கிரகம் வீசப்பட்ட நிலையில் இருப்பதைக் கண்ணுற்று ஆலய நிர்வாகத்தினருக்குத் தெரியப்படுத்தினார்.

இதனை அடுத்து இந்த விடயம் தொடர்பில் ஆலய நிர்வாகத்தினர், நிலாவெளி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இது தொடர்பான விசாரணைகளை நிலாவெளி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, நிலாவெளி 2 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள பத்தினி அம்பாள் ஆலயத்தின் கலசம் உடைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## 30 வருடங்களுக்கு முன் பறித்த
# 25 விவசாயிகளின் காணிகள் மீள ஒப்படைக்க நடவடிக்கை

ஏறாவூர்ப்பற்று,ஜன.04

ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவில் 25 விவசாயிகளின் காணிகளை மீள ஒப்படைப்பதற்கு அப்பிரதேச செயலாளர் முன்வந்துள்ளார் என்று கிழக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.எஸ்.சுபைர் நேற்றுச் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பதுளை வீதியை அண்டிய பல கிராமங்களைப் பூர்வீகமாகக் கொண்ட விவசாயிகள், அசாதாரண சூழ்நிலை காரணமாக 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தனர். இந்த விவசாயிகளின் சொர்ணபூமி உறுதிப்பத்திரங்களைக் கொண்ட சுமார் ஆயிரத்து 500 ஏக்கர் காணிகள், மேய்ச்சல் தரை என்ற பேரில் அதிகாரிகளால் கையகப்படுத்தப்பட்டு இருந்தன.

இது தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட முயற்சியின் பயனாக இந்த விவசாயிகளின் காணிகளை மீளக் கையளிப்பதற்குப் பிரதேச செயலாளர் முன்வந்துள்ளார். கடந்த 30 வருடங்களாகக் காணிகளை இழந்திருந்த விவசாயிகளுக்கு இது மகிழ்ச்சி தரும் விடயமாகும்.- என்றார். (ச)

# எல்லை நகரில் கைக்குண்டு மீட்பு



செங்கலடி,ஜன.04

செங்கலடி, எல்லை நகர்ப் பகுதியில் உள்ள வீட்டுத் தோட்டத்தில் இருந்து கைக்குண்டு ஒன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை மீட்கப்பட்டது.

எல்லை நகர் பகுதியில் உள்ள வீட்டுத் தோட்டத்தில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். அதன் போது இந்தக் கைக்குண்டு தென்பட்டுள்ளது. இந்நிலையில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

இதனை அடுத்து இந்தக் கைக்குண்டைப் பொலிஸார் மீட்டனர். (ச)

# நல்லாட்சி அரசு கவிழ்க்கப்பட்டால் நாடு அழிவை நோக்கிச் செல்லும்!

## எச்சரிக்கிறார் ஸ்ரீநேசன் எம்.பி.

மட்டக்களப்பு,ஜன.04

தற்போதைய ஆட்சியைக் கவிழ்க்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளை, சிறுபான்மை மக்களுக்கு அடிக்கப்படும் அபாய மணியாகவே நான் கருதுகிறேன். இவ்வாறு ஓர் ஆட்சிக் கவிழ்ப்புக்கு சிறுபான்மை இனத்தவர்கள் எந்த விதத்திலும் பங்குதாரிகளாக இருக்கக் கூடாது. இவ்வாறு இடம்பெற்றால் நாடு மீண்டும் ஓர் அழிவுப் பாதையை நோக்கிச் செல்வதை யாராலும் தடுக்க முடியாமல் போய் விடும்.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு ஏறாவூர் பற்று பிரதேச மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க் கிழமை கரடியனாறு மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முன்னாள் ஜானாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 'இந்த வருடத்தில் ஆட்சியைக் கவிழ்ப்பேன்' எனக் கூறியுள்ளார். அவர் ஆட்சியைப் பிடிப்பேன்' என்று கூறியிருந்தால் பெரிதுபடுத்தாமல் இருந்திருக்கலாம். ஆனால், ஆட்சியைக் கவிழ்ப்பேன் என்று கூறும் செய்தியானது ஒரு சதியோடு கூடிய திட்டமாக இருக்கலாம். ஆட்கவிழ்க்கப்பட்டால் சிறுபான்மையினர், கடந்த காலத்தைப் போன்று பல அழிவுகளைச் சந்திக்க நேரிடும்.

இந்த விடயங்கள் தொடர்பில் மக்ககள் விழிப்பாக இருக்க வேண்டும். கடந்த கால நிகழ்வுகளை மனதில் வைத்தே ஒவ்வோர் அடியையும் எடுத்து வைக்க வேண்டும். மீண்டும் ஒரு வன்முறை ஏற்படுவதற்கு சிறுபான்மையினர் காரணமாகி விடக் கூடாது. அது நமது எதிர்கால சந்ததிகளையே பாதிக்கும்.

ஒரு சமூகத்தை அடக்கி ஆளவேண்டும் என நினைக்கும் எந்தவோர் இனமும் நிம்மதியாக வாழ முடியாது. இதனைக் கடந்தகால வரலாறுகளே உணர்த்துகின்றன. இன்றைய சூழ்நிலையில் சரியான பொறி முறையின் கீழ் பேச்சு முன்னெடுக்கப்பட்டு அதன் மூலம் இணக்கமான தீர்வு காணப்பட வேண்டும்.-என்றார் (ச)

## மட்டக்களப்பு அரச அலுவலகங்களில் கண்காணிப்பு 'கமெரா'

மட்டக்களப்பு,ஜன.04

மட்டக்களப்பிலுள்ள பிரதேச செயலகங்கள், திணைக்களங்கள் மற்றும் அரச அலுவலகங்களில் கண்காணிப்புக் 'கமெரா'க்கள் பொருத்தப்பட்டு வருகின்றன.

டிசெம்பர் இறுதி வாரத்திலிருந்து 'கமெரா'க்கள் பொருத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் காத்தான்குடிப் பிரதேச செயலகத்தில் கண்காணிப்புக் 'கமெரா'க்கள் பொருத்தப்பட்டு, அவை செயற்படத் தொடங்கியுள்ளன. (ச)

# மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும்

## ஹிஸ்புல்லாஹ் எம்.பி. தெரிவிப்பு

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்களின் கண்ணீரைத் துடைப்பதற்கான வேலைத்திட்டங்களில் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என்று புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் ஆகிய அமைச்சுக்களின் ஏற்பாட்டில் புதுவருட நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு, கிழக்கு வாழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க இந்த வருடத்தில் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சால் பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளன.

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னும் ஏராளமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். அவற்றைத் தீர்ப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.- என்றார். (ச)

# யானை தாக்கி வயோதிபர் சாவு

மட்டக்களப்பு,ஜன.04

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெலிக்காகண்டி பகுதியில் காட்டு யானைத் தாக்குதலுக்கு இலக்காகி வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தம்பிராசா பரமானந்தம் (வயது- 74) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். (ச)








காளிக்குட்டி நாகேந்திரனின் 'நான் பொறந்த மண்' கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை செங்கலடி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன், ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் உ.உதயஸ்ரீதர் மற்றும் கல்குடா கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் தி.ரவி, செங்கலடி மத்திய கல்லூரி அதிபர் ஆகியோர் அதிதிகளாகக் கலந்த கொண்டனர். நூலாசிரியர், காளிக்குட்டி நாகேந்திரன் நாடாளுமன்ற உறுப்பனர் ஞானமுத்து ஸ்ரீநேசனுக்கு நூலின் பிரதியை வழங்குவதையும், இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (ச)

# தண்டப் பண நடைமுறை நாட்டுக்கு அவசியமாகும்!



## பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.04

போக்குவரத்து விதிமுறைகளை மீறுவோருக்கு எதிரான தண்டப்பண நடைமுறை நாட்டுக்கு அவசியமாகும் என்று பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

மேலும், வீதி விதிகளை மீறுவோருக்கு அபராதமாக 25 ஆயிரம் ரூபாவை அறவிடும் நடவடிக்கை விரைவில் அமுல்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது முன்னெடுக்கப்படும் கலந்துரையாடல்கள் நிறைவுபெற்றதன் பின்னர் வீதி விதிமுறைகளை மீறுவது தொடர்பான ஏழு குற்றங்களுக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் அறவிடும் நடைமுறை அமுல்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

பொலிஸ்தலைமையகத்தில் நடைபெற்ற புதுவருட நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தவறிழைப்பவர்களைஇலக்கு வைத்தே இந்த அபராதம் அறவிடப்படவுள்ளது. இதனால் அப்பாவி மற்றும் சட்டத்தை பின்பற்றும் மக்கள் பாதிக்கப்பட மாட்டார்கள்.

இந்த அபராதம் விதிக்கும் விடயத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மிகக் கடுமையாகப் பணியாற்ற வேண்டும். இதன்மூலம் மாத்திரமே வெளிநாடுகளைப் போன்று இலங்கையிலும் வீதி விபத்துக்களை குறைக்க முடியும்.

வீதி விதிமுறைகளை மீறும் குற்றங்களுக்கென ஏனைய நாடுகளில் மிகக் கடுமையான வீதி விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகள் காணப்படுகின்றன.

இந்த அபராத விதிப்பு நடவடிக்கையை மிகக் கடுமையாக அமுல்படுத்தினால் வீதி விபத்துக்களை குறைக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

# ஹொரவப்பொத்தானை இராணுவ முகாம் படையினருக்கு எதிராக விசாரணை!

## அனைவருக்கும் உடனடி இடமாற்றம்

அனுராதபுரம், ஜன.04

ஹொரவப்பொத்தானை நகரில் குழப்பம் விளைவித்த இராணுவத்தினருக்கு எதிராக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அனுராதபுர மாவட்டத்தில் உள்ள ஹொரவப்பொத்தானையில், புத்தாண்டைமுன்னிட்டு, கடந்த 1ஆம் திகதி இரவு இடம்பெற்ற இசை நிகழ்ச்சியில் இரண்டு குழுக்களுக்கிடையில் மோதல் இடம்பெற்றது.

இந்த மோதல்களில் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில், 10 பேரைப் பொலிஸார் கைது செய்திருந்தனர். அவர்களில் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவரும் அடங்கியிருந்தார்.

கைது செய்யப்பட்டிருந்த இராணுவச் சிப்பாய் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அதேவேளை, தமது இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஹொரவப்பொத்தானை இராணுவ முகாமைச் சேர்ந்த 5 ஆவது கஜபாகுப் படைப்பிரிவு இராணுவத்தினர் ஹொரவப்பொத்தானை நகரில் துப்பாக்கிச் சூடு நடத்திக் கலகம் விளைவித்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில், 16 இராணுவத்தினர், இராணுவப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

அதேவேளை, ஹொரவப்பொத்தானை இராணுவ முகாமின் கட்டளை அதிகாரியான லெப்டினன்ட் தர அதிகாரி உடனடியாகவே அங்கிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள் ளார்.

அத்துடன் இந்த இராணுவ முகாமில் பணியாற்றிய அனைத்துப் படையினரும், வேறு முகாம்களுக்கு உடனடியாக மாற்றப்பட்டுள்ளனர்.

இராணுவப் பொலிஸாரின் விசாரணைகளின் பின்னர், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இராணுவப் பேச்சாளர் ரொஷான் செனவிரத்ன தெரிவித்துள்ளார். (க)

# சவாலான காலப் பகுதியாக 2017 ஆம் ஆண்டு அமையும்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறுகிறார்



கொழும்பு, ஜன.04

2017 ஆம் ஆண்டு மிகவும் சவாலான காலப்பகுதியாக இருக்கும் என்று நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

புதுவருடத்தில் கடமைகளை உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கும் நிகழ்ச்சியில் அவர் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சி நகரத்திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.


அங்கு அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு:-


நகரத்திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சுக்கு 2017 ஆம் ஆண்டு மிகவும் சவாலான காலப்பகுதியாகத் திகழக்கூடும். எனவே, இவ்வாண்டு கடும் வறட்சி நீடிக்கும் பட்சத்தில் அதனை சமாளிக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது.

அமைச்சின் புதிய திட்டங்களுக்கு உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் அனுசரணைகள் கிடைத்துள்ளன.

மேலும், இந்த வருடத்தில் ஊழலையும், வீண் விரயத்தையும் ஒழிக்கும் முயற்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# காலி - கொழும்பு வீதியை மறித்துப் போராட்டம்





காலி, ஜன.04

காலி - கொழும்பு வீதியின் அஹுங்கல்ல பிரதேசத்தில் பெற்றோர் சிலர் நேற்றுக் காலை வீதி மறியலில் ஈடுபட்டுள்ளனர்.

அஹுங்கல்ல ராஜபக்ஷ மகா வித்தியாலயத்தில் நீண்டகாலமாக நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு அதிகாரிகள் உரிய நடவடிக்கை இதுவரை எடுக்கவில்லை என்று போராட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர் கூறியுள்ளனர்.

இந்தப் போராட்டம் காரணமாக கொழும்பு - காலி பிரதான வீதியின் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தப் பாடசாலையில் ஏழு பாடங்களுக்குஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுகிறது என தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் போராட்டம் குறித்து பாடசாலையின் அதிபரிடம் கேள்வி எழுப்பியபோது, தான் பதிலளிக்க விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார். (க)

# மஹிந்தவுக்கு எதிராக சட்டநடவடிக்கை!

## பொதுபலசேனா எச்சரிக்கை

கொழும்பு, ஜன.04

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க உள்ளோம் என்று பொதுபலசேனா எச்சரித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, பொதுபலசேனாவின் மேலாளர் திலாந்த வித்தானகே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

தமது அரசாங்கத்தின் வீழ்ச்சியை உறுதிப்படுத்துவதற்காகவே நாட்டில் கடும்போக்கு குழுக்களை எதிர்க்கட்சியும் மேற்கத்தைய நாடுகளும் உருவாக்கின என்று மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் வெளிநாட்டுச் செய்தியாளர்களை சந்தித்தபோது தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்துக்கு எதிராகவே சட்ட நடவடிக்கை எடுக்கப்போகிறோம் என்று திலாந்த வித்தானகே எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மஹிந்த ராஜபக்ஷவை பொறுத்தவரையில் அவர், தமது வீடுகள் பற்றியும், தமது கார்களைப் பற்றியும் தமது குடும்பம் பற்றியும் தமது பாதுகாப்பு தொடர்பிலும் பேசி வருகிறார்.

ஆனால், எமது அமைப்பை பொறுத்தவரை பாதிக்கப்பட்டுள்ள சிங்கள சமூகம் தொடர்பிலேயே கவலைகொண்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

# எமது வரலாற்றுச் சின்னங்களை அழியாது பாதுகாக்க வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி தெரிவிப்பு



கிளிநொச்சி, ஜன.04

எமது வரலாற்றுச் சின்னங்களை அழிவடையாது பாதுகாக்க வேண்டிய தேவை எம்மிடம் உள்ளது. எமது சந்ததி வரலாற்றை அறியக் கூடிய வகையில் அவை பாதுகாக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில், பேராதனைப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன் செந்தூரனின் 'யாதுமாகி' கவிதை நூல் அறிமுக விழா இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மாற்றுத்திறனாளிகளின் மனங்கள் நோகாது எங்களது சமூகம் நடந்துகொள்ள வேண்டும். இந்த நிகழ்வில் நான் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராகவோ, அந்த உணர்வோடோ வரவில்லை. நான் ஒரு மாற்றுத் திறனாளியாகவே வந்திருக்கின்றேன். எனக்கு செந்தூரனைத் தெரியாது. ஆனால் இந்த 'யாதுமாகி' கவிதை நூல் அறிமுகவிழாவில் கிடைக்கும் நிதியை கிளிநொச்சி மாற்றுத்திறனாளிகள் சங்கத்துக்கு வழங்குவதற்கு எடுத்த தீர்மானத்தின் காரணமாக அந்த மாற்றுத் திறனாளிகளுக்காகவே வந்திருக்கின்றேன்.

நான் இங்கு ஒன்றைக் கூற விரும்புகின்றேன். அண்மையில் பங்களாதேஷுக்கு சென்றிருந்த போது, அங்கு சில விடயங்களைக் கவனிக்க முடிந்தது.

அந்த நாட்டின் விடுதலைக்காகத் தம்மைக் குடும்பத்தோடு அர்ப்பணித்த முஜிபுர் ரகுமானினது குடும்பத்தில் ஓர் இரவில் ஐந்து பேர் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர்.

பங்களாதேஷ் நாட்டுக்காகத் தங்களை அர்ப்பணித்த அவர்களின் நினைவுகளைப் பேணுவதற்காகச் சுட்டுக் கொலை செய்யப்பட்ட அந்த இடத்தை மாளிகையாக மாற்றி அவர்கள் அணிந்திருந்த ஆடைகள், காலணிகள், பயன்படுத்திய சமையல் பாத்திரங்கள் மற்றும் சுடப்பட்ட தோட்டாக்கள் என்று எல்லாவற்றையும் கண்ணாடிப் பெட்டிக்குள் கௌரவமாக, உணர்வோடு பேணிப் பாதுகாத்து வைத்துள்ளனர். ஆனால் தமிழர்கள் எல்லா சின்னங்களையும் தொலைத்துவிட்டு இருக்கின்றார்கள். இந்த நிலையில் மாற்றம் வேண்டும்.


எமது வரலாற்றுச் சின்னங்களை அழிவடையாது பாதுகாக்க வேண்டியதேவை எம்மிடம் உள்ளது. எமது சந்ததி வரலாற்றை அறியக் கூடிய வகையில் அவை பாதுகாக்கப்பட வேண்டும்.

அந்த வகையில் செந்தூரன் போன்று, தனது தந்தையை இந்த மண்ணுக்காக அர்ப்பணித்த ஒருவரின் உணர்வோடு வெளிவரும் இந்தக் கவிதைகள்தான் வரலாற்றை எடுத்தியம்புவனவாக உள்ளன. ஆனால் இவ்வாறான நிகழ்வுகளுக்கு எம்மவர்கள் கொடுக்கும் மதிப்பைப் பார்க்கும் போது மிகவும் மனவேதனையாக இருக்கிறது.

மாற்றுத் திறனாளிகள் தாங்களாக விரும்பி இவ்வாறு தங்களை மாற்றிக் கொண்டவர்கள் அல்லர். இந்த நாட்டுக்காக, மக்களின் விடிவுக்காகத் தங்களை அர்ப்பணித்து இன்று தங்கள் உடல்களில் காலை இழந்து, கையை இழந்து, கண்ணை இழந்து பல்வேறு கொச்சைச் சொற்களால் விளிக்கப்பட்டு வாழ்ந்து வருகின்றார்கள். இது மிகவும் மனவருத்தமானது. இந்த நிலை மாறவேண்டும். சமூகத்தின் மனங்கள் மாறவேண்டும். எங்களுடைய மாற்றுத்திறனாளிகளைப் பகடைக்காய்களாக மாற்றிப் பலர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.-என்றார்.

(ஐ-70)

# மோட்டார் சைக்கிள் தீக்கிரை: நெடுங்கேணியில் ஒருவர் கைது!



புதுவருட தினத்தில் வவுனியா, நெடுங்கேணிப் பகுதியில் இடம்பெற்ற குழு மோதலையடுத்து மோட்டார் சைக்கிள் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா, நெடுங்கேணி, கற்குளம் சந்தியில் புதுவருட தினமான ஞாயிற்றுக்கிழமை இரவு 9.30 மணியளவில் இரண்டு குழுக்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

அதையடுத்து அந்தப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் ஒன்றுக்குத் தீ வைத்து எரியூட்டப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கூட்டமைப்பின் நெடுங்கேணி பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் ம.செந்தூரன் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணையை நெடுங்கேணிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-100)

# வாள்வெட்டு, குழு மோதல்; வவுனியாவில் நால்வர் கைது!

புதுவருட தினத்தன்று வவுனியா, கற்குழிப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு மற்றும் குழுமோதல் தொடர்பில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, கற்குழி பகுதியில் உள்ள இரு குழுக்களுக்கிடையில் முரண்பாடுகள் இருந்துள்ளன. புதுவருட தினத்தன்று ஒரு குழுவினர் தமது வீட்டில் பாட்டுப்போட்டு வீட்டின் முன் ஆடிக்கொண்டிருந்துள்ளனர். அதனால் ஆத்திரமடைந்த அந்தப் பகுதியைச் சேர்ந்த மற்றுமொரு குழுவினர் அங்கு வந்து பாட்டு போட்டு ஆடிக் கொண்டிருந்தவர்களுடன் முரண்பட்டனர்.

அத்துடன் வாள், கம்பிகள், பொல்லுகளால் அவர்கள் மீது தாக்கவும் முயற்சித்தனர். அதையடுத்து குறித்த வீட்டில் இருந்த பெண்கள் சமரசம் செய்ய முயற்சித்துள்ளனர்.

இதன்போது அங்கு வந்த இளைஞர்கள் வீடு புகுந்து தாக்க முற்பட்ட போது இடம்பெற்ற கைகலப்பில் இருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்திய வவுனியாப் பொலிஸார் வாள்வெட்டுக் குழுமோதல் தொடர்பில் நான்கு பேரை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைது செய்துள்ளனர் என்றும் மேலும் மூவரைத் தேடி வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளனர்.(ஐ-100)

# சட்டவிரோத மீன்பிடியை ஒழிக்க முல்லையில் அஹிம்சைப் போர்!

## ஏற்பாடு செய்கிறது சமாசம்

முல்லைத்தீவு, ஜன.04

முல்லைத்தீவில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களின் சட்டவிரோத மீன்பிடியை இல்லாதொழிக்கும் வகையில் அஹிம்சை வழியிலான போராட்டத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளை முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் மேற்கொண்டுள்ளது.

முல்லைத்தீவில் இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடி தொடர்பாகப் பல தரப்பிலும் மனுக்கள் மூலமும் நேரிலும் முறைப்பாடு செய்யப்பட்டது.

எனினும் தகுந்த பலன்கள் கிடைக்காத நிலையில் நீதியை நிலைநிறுத்தி அஹிம்சை வழியான போராட்டத்தை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளை முல்லைத்தீவுக் கடற்றொழிலாளர் சமாசத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

இது தொடர்பான கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன. இதற்கான ஆதரவைச் சகலரிடமும் வேண்டி நிற்பதாகக் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் அறிவித்துள்ளது.

(ஐ-70)

# சாரதியை மதுபோதையில் தாக்கிய இரு இராணுவத்தினர் கைதாகினர்!

வவுனியா,ஜன.04

வவுனியா பிரதான பஸ் தரிப்பிடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மதுபோதையில் வந்த இரு இராணுவத்தினர் ஓட்டோச் சாரதி ஒருவரைத் தாக்கியுள்ளனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவத்தினர் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புதுவருட தினத்தன்று காலை ஓட்டோ சாரதி ஒருவருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டையடுத்து மதுபோதையில் தாக்குதல் மேற்கொண்ட இரண்டுஇராணுவத்தினரையே வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மூன்றுமுறிப்பு பகுதியிலுள்ள இராணுவத்தினர் இருவர் மதுபோதையில் அந்தப் பகுதியிலிருந்து ஓட்டோ ஒன்றில் வவுனியா பஸ் நிலையத்தில் வந்து இறங்கியுள்ளனர்.

ஓட்டோவில் ஏறும்போது 150 ரூபா கட்டணம் என்று ஓட்டோச் சாரதி தெரிவித்துள்ளார்.

பஸ் நிலையத்தில வந்து இறங்கியதும் 120 ரூபாவை இராணுவத்தினர் வழங்கியுள்ளனர். இதையடுத்து ஓட்டோ சாரதி 150 ரூபா பணத்தைத் தருமாறு கேட்டுத் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார்.

அதையடுத்து ஓட்டோ சாரதி மீது இராணுவத்தினர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

அந்தச் சாரதி உடனடியாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்துள்ளார். அதன் பின் வவுனியா வைத்தியசாலையில் சாரதி அனுமதிக்கப்பட்டார்.

அதையடுத்துத் தாக்குதல் மேற்கொண்ட இராணுவத்தினரைப் பொலிஸார் கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். சம்பவ தினத்தன்று பிற்பகலே அவர்களைப் பொலிஸார் விடுவித்து விட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது(ஐ-100)

### அம்பாந்தோட்டையில் சீனாவுக்கு 15 ஆயிரம் ஏக்கர் நிலம்:

# அம்பலாந்தோட்டையில் 500 பிக்குகள் கூடி அரசுக்கு எதிராக மக்கள் ஆதரவுடன் பேரணி

### பிரதான வீதியில் போக்குவரத்து ஒரு மணிநேரம் ஸ்தம்பிதம்





கொழும்பு, ஜன.04

அம்பாந்தோட்டையில் 15 ஆயிரம் ஏக்கர் நிலத்தை சீன முதலீட்டாளருக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து 500 இற்கும் மேற்பட்ட பௌத்த பிக்குகள் கொட்டும் மழையில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர்.

அம்பலாந்தோட்டை ஜயவர்தனாராமய விகாரை வளாகத்தில் நேற்றுமுன்தினம் ஒன்றுகூடிய பெருந்திரளான பௌத்த பிக்குகள், அங்கிருந்து 5 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள மிரிச்சவில சந்தி வரை பேரணியாகச் சென்றனர்.

பௌத்த சமயத்தின் நாமமான 'சாது' என்ற பெயரை உரத்த தொனியில் ஒலிக்கச் செய்தும், பௌத்த கொடிகள் மற்றும் கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறும் பிக்குகள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். பௌத்த பிக்குகளின் இந்தப் பெரிய பேரணியால் கதிர்காமம் - மாத்தறை பிரதான வீதி யூடான போக்குவரத்துக் கள் சுமார் ஒரு மணி நேரத்துக்கும் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருந்தன.

அம்பாந்தோட்டையில் 15 ஆயிரம் ஏக்கர் காணியில் சீனா முதலீடு செய்வதற்கான ஒப்பந்தத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 7ஆம் திகதி கைச்சாத்திடவுள்ளார். இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு தனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள போதிலும், நல்லாட்சி அரசின் இந்தமுயற்சிக்குஎதிர்ப்பை வெளியிடும் வகையில் அந்த நிகழ்வை பகிஷ்கரிக்கப் போவதாக அம்பாந்தோட்டை - திஸ்ஸமஹராம சந்தகிரி உபயமஜமகா விகாரையின் தலைமைப் பிக்குவான மாத்தற கந்தபட தேரர் மற்றும் அம்பாந்தோட்டை - தெதிசாவே மகாநாயக்க கலாநிதி தேவாலேகம தம்மசேன தேரர் ஆகியோர் அறிவித்துள்ளனர்.

இதேவேளை ஆர்ப்பாட்டப் பேரணியின் போது உரையாற்றிய வெலிகந்த ரஜமகா விகாரையின் தலைமைப் பிக்குவான பெரகம ஞானதிலக்க தேரர் தெரிவித்தவை வருமாறு:

''கடந்த முதலாம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரையிலான ஒரு வார காலப் பகுதி தேசிய துக்க தினமாகப் பிரகடனம் செய்யப்படுகின்றது. ஒட்டுமொத்த அம்பாந்தோட்டை மக்களும் நல்லாட்சி அரசின் காணி விற்பனை செயற்றிட்டத்துக்கும், தேசத்துரோகச் செயலுக்கும் கட்சி பேதமின்றி எதிர்ப்பு வெளியிடுகின்றனர்.''-என்றார்.

இதேவேளை, மாத்தறை பீடத்தின் நெதிகம்வில ரஜமகா விகாராதிபதி உயன்வத்தே சத்தாராம, கல்வில ரஜமகா விகாரையின் தலைமைப் பிக்கு பெரகம விமல புத்தி தேரர், பதில் விகாராதிபதி பெரகம விமல நாத தேரர், தங்காலை வஜிரகிரி விகாரைத் தலைமைப்பிக்கு கலாநிதி மிரிஸ்ஸே தம்ம வங்ச தேரர் உட்பட அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள பிரதான விகாரைகளிலுள்ள பிக்குகள், பிக்கு மாணவர்கள், பிரதேச வாசிகள் எனப் பலரும் இந்தப் பேரணியில் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். (எ)

## சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் நேற்று ஆரம்பம்

கொழும்பு, ஜன.04

கடந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியின் முதல் கட்ட நடவடிக்கை நேற்று ஆரம்பமாகின. இது அடுத்த மாதம் 12 ஆம் திகதி வரை இடம்பெற உள்ளது என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

55 நகரங்களிலுள்ள 87 பாடசாலைகளில் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இடம்பெறவுள்ளன. இதுதொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஜயந்த புஷ்பகுமார தெரிவித்தவை வருமாறு:

''விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் இரண்டாம் கட்ட நடவடிக்கை எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை நடைபெறும்.

இம்முறை விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்காக 62 ஆயிரம் மதிப்பீட்டாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த வருடத்திலும் பார்க்க இந்த எண்ணிக்கை அதிகமாகும். இரண்டு கோடி 50 இலட்சம் வினாத்தாள்கள் மதிப்பீடு செய்யப்பட உள்ளன.''- என்றார். (எ)

## போதைக் கும்பல் தலைவர் சிக்கினார்

போதைப் பொருள்கள் விற்பனையில் ஈடுபடும் கும்பல் ஒன்றின் தலைவர் மாளிகாவத்தையில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 30 போதை மருந்துகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று கொழும்பு விசேட செயற்பாட்டுப் பிரிவின் பொறுப்பதிகாரி பீ.என்.ஹேமந்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தப்பிச் சென்றுள்ள மற்றுமொரு சந்தேகநபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ)

## கற்பிட்டி மீனவருக்கு கிடைத்த பேரதிஷ்டம்!

### கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை

புத்தளம், ஜன.04

கடலுக்குச் சென்ற மீனவர்களுக்கு கிடைத்த பேரதிஷ்டம் தொடர்பான சம்பவம் ஒன்று கற்பிட்டி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

''கற்பிட்டியில் இருந்து கடலுக்குச் சென்ற மீனவர்களுக்குப் பல கோடி ரூபா பெறுமதியான திமிங்கிலத்தின் கழிவு அல்லது 'அம்பர்' எனப்படும் அரிய வகைப் பொருள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது சுமார் 34 கிலோ கிராம் நிறையுடையது என்று கூறப்படுகின்றது.

எனினும், இதனை எடுத்து வந்த மீனவர்களைக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், அந்த மீனவர்களை நீதி மன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தாம் எடுத்துள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, அந்த மீனவர்களால் கொண்டு வரப்பட்ட அம்பர் எனப்படும், திமிங்கிலத்தின் கழிவு ஒரு கிலோ கிராம் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகம் என்று கூறப்படுகின்றது.

மேலும், இந்தத் திமிங்கில கழிவுப் பொருளைக் கொண்டு வாசனைத் திரவியம், மருந்துப் பொருள்கள் என்பன உற்பத்தி செய்யப்படுகின்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# நீர்கொழும்பு நீதிமன்றுக்கு தமிழ் உத்தியோகத்தரை நியமிக்குக!

### அமைச்சர் மனோவிடம் வட மாகாண சபை உறுப்பினர் மயூரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.04

நீர்கொழும்பு நீதிமன்றத்துக்குத் தமிழ் பேசும் உத்தியோகத்தரை நியமனம் செய்யுமாறு வடமாகாணசபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன் அமைச்சர் மனோகணேசனிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக வட மாகாணசபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தேசிய சகவாழ்வு கலந்துரையாடல்கள் மற்றும் அரச கரும மொழிகள்அமைச்சர் மனோ கணேசனுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

நீர்கொழும்பு நீதிமன்ற கட்டடத் தொகுதியில் தமிழ் மொழியில் பரீட்சயமாகப் பேசக்கூடிய தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் இல்லாத காரணத்தால் பொதுமக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று அறிகின்றேன்.

வழக்குகளோடு சம்பந்தப்பட்ட வழக்காளிகளாக இருப்பினும், எதிராளிகளாக இருப்பினும், வழக்குத் தவணைக் காலத்திலும், வழக்குகள் முடிவடைந்த பின்னரும் அவர்கள் தமிழ்மொழி மட்டுமே தெரிந்தவர்களாக இருக்கும் பட்சத்தில் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

சரியான மொழிபெயர்ப்பு இன்மையால் வழக்குகளின் நிலைமைகள், தன்மைகளைக் கூட அறிந்து கொள்ள முடியாமல் அவர்கள் அவஸ்தைப்படுகின்றனர்.

சொந்த மொழியில் தகவல்களைப் பெறமுடியாத நிலை உள்ளது. வேறு திணைக்களங்களிலோ, அலுவலகங்களிலோ மொழி பெயர்த்துக் கூற உதவிக்குச் சிலரை அழைத்துச் செல்வது சுலபம். ஆனால் நீதிமன்றங்களில் காணப்படும் இறுக்கமான கட்டுப்பாடுகள் மூலம் நினைத்தது போல் பொது மக்கள் தமக்கு ஏற்ற யாரையும் அழைத்துச் செல்லவும் முடியாது.

தமிழ் பேசும் சட்டத்தரணிகளும் மிகக் குறைந்தளவிலேயே காணப் படுகின்றனர். எனவே தமிழ்பேசும் உத்தியோகத்தர்களை நியமனம் செய்து இம்மொழிப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் விசேடமான மொழிபெயர்ப்பாளர்களை நீதிமன்றவளாகத்துக்குள் கடமையாற்ற தங்கள் அமைச்சினூடாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இதில் தாங்கள் உடனடியாக எடுக்கும் நடவடிக்கையானது மொழிப்பிரச்சினையால் பணிகளை நிறைவேற்றி முடிக்காமல் விடப்பட்டிருக்கும் நீண்ட கால, உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வழிசமைக்கும் என்று நம்புகின்றேன்.''- என்றுள்ளது. (எ)





பொன்.வேணு கிருஷ்ணா

## அலெப்போவின் பேரழிவு

சிரியாவின் மிகப்பெரிய தொழில் துறை நகரமான, இலட்சக் கணக்கான மக்கட்தொகை கொண்ட அலெப்போ, ஐந்து வருடங்களாகக் கிளர்ச்சி குழுக்களின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. அது ரஷ்ய விமானக் குண்டுவீச்சுகளின் பின்னர், சிரிய அரச படைகளால் விடுவிக்கப்பட்டுள்ளது. சிரியாவின் ஐந்தாண்டு கால உள்நாட்டுப் போரில் இது ஒரு பெரிய திருப்புமுனை என்று கருதப்படுகின்றது. அதாவது, உள்நாட்டுப் போரின் இறுதியில் வெல்லப் போவது யார், தோற்கப் போவது யார் என்பதை தீர்மானிக்கும் சக்தியாக அலெப்போ யுத்தம் இருந்துள்ளது.





Russian forces have been operating in support of the government of President Bashar al-Assad in Syria for a year.


சிரியாவில், குறைந்தது ஒரு டசின் இயக்கங்கள் சிரிய அரசுக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடுகின்றன. அவற்றிற்கு அமெரிக்கா, சவூதி அரேபியா மற்றும் மேற்குலக நாடுகளின் உதவிகள் துருக்கி ஊடாகக் கிடைத்து வந்தன. அநேகமாக எல்லா ''விடுதலை'' இயக்கங்களும், அல்குவைதா அல்லது ஐ.எஸ். பாணியில் அமைந்த, இஸ்லாமிய மத அடிப்படைவாத இயக்கங்கள் தான். சுன்னி முஸ்லிம் சமூகத்தினரை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்திய அந்த இயக்கங்கள், ஏற்கனவே தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்களையும், ஷியா முஸ்லிம்களையும் இனச் சுத்திகரிப்பு செய்து விட்டன. (சிரியா அடிப்படையில் ஒரு பல்லின கலாசாரங்களைப் பின்பற்றும் மக்கள் குழுமங்களின் தேசம்.)



Russia's commitment to its relationship with Syria has been central to its intervention

உள்நாட்டுப் போரின் தொடக்கத்தில், சிரிய இராணுவம் ஆட்பலம், ஆயுதபலம் குறைந்திருந்தபடியால், அலெப்போ போன்று பல பிரதேசங்களைக் கைவிட்டுவிட்டு ஓடிக்கொண்டிருந்தது. கிளர்ச்சிக் குழுக்களினால் கைது செய்யப்பட்ட, அல்லது அவர்களிடம் சரணடைந்த சில நூற்றுக்கணக்கான படையினர் பொது இடங்களில் கழுத்து வெட்டிக் கொல்லப்பட்டனர். அந்த வீடியோக்கள் இணையத்தில் பதிவேற்றப்பட்டிருந்தன.

சரணடைந்த சிரியப் படையினர் மட்டுமல்ல, ஷியா, கிறிஸ்தவ மற்றும் பல சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்தவர்களும், ''தவறான இனத்தில் பிறந்த காரணத்தால்'' படுகொலை செய்யப்பட்டனர். வாழ்வா, சாவா போராட்டத்துக்கு மத்தியில் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் காரணமாக, சிரிய இராணுவத்தினரும், சிறுபான்மை சமூகத்தினரும் அதிபர் ஆசாத் தலைமையின் கீழ் அணிதிரண்டனர். அப்படியானவர்களுக்கு ஆசாத் மீதான விசுவாசத்தை விட, தாம் சார்ந்த சமூகங்களின் பாதுகாப்பு முக்கியமாகப் பட்டதால் போர் தீவிரமடைந்தது. கிறிஸ்தவ, ஷியா, அலாவி போன்ற சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த வீரர்களை கொண்ட National Defence Force (NDF) என்ற ஊர்காவல் படைகள் சிரிய இராணுவத்தின் பக்கம் நின்று போரிட்டன.



இதற்கிடையே லெபனான் ஹிஸ்புல்லாவும் ஆசாத்துக்கு உதவியாக வந்தது. லெபனானில் எண்பதுகளில் நடந்த தசாப்த கால உள்நாட்டுப் போரில், சிரிய அரசு ஷியா முஸ்லிம் சமூகத்தை சேர்ந்த ஹிஸ்புல்லா இயக்கத்தை ஆதரித்திருந்தது. அந்த செஞ்சோற்றுக் கடன் தீர்ப்பதற்காக, ஆயிரக் கணக்கான ஹிஸ்புல்லா போராளிகள் தொண்டர் படையணியாக சிரியா போர்க்களத்தில் குதித்தனர். அவர்களுடன் ஷியா முஸ்லிம்களின் வல்லரசாகக் கருதப்படும் ஈரானும், தன் பங்குக்கு இராணுவ ஆலோசகர்களை அனுப்பி இருந்தது. இவர்கள் எல்லோரும் அலெப்போ யுத்தத்தில் பங்கெடுத்திருந்தனர்.




### அலெப்போவைக்கட்டுப்பாட்டில் வைத்திருந்த கிளர்ச்சிக் குழுக்கள் எவை?

மேற்குலகால் ஆதரிக்கப் பட்ட அந்தக் கிளர்ச்சிக் குழுக்களின் போராளிகள், ஆதரவாளர்கள் அனைவரும் சுன்னி முஸ்லிம் சமூகத்தினர். சிரியாவில் மதத்தால் முஸ்லிமாக இருந்தாலும், சுன்னி, ஷியா, அலாவி என்று ஒவ்வொரு முஸ்லிம் மதப் பிரிவினரும் தம்மைத் தனித் தனியான இனமாக கருதிக்கொள்கிறார்கள்.



ஆகையால், இஸ்லாமியவாத கிளர்ச்சிக் குழுக்கள் கடுமையான மதக் கட்டுப்பாடுகளை சுன்னி-முஸ்லிம் பிரிவினர் மீது திணித்து வந்தன. மது பாவனை தடை செய்யப் பட்டது. இசைத்தட்டில் பாடல்கள் கேட்பது கூடத் தடை செய்யப் பட்டது. பெண்கள் முகத்தை மூடும் கருநிற அங்கி அணிய கட்டாயப் படுத்தப் பட்டனர்.



அலெப்போவை கட்டுப்பாட்டில் வைத்திருந்த கிளர்ச்சிக் குழுக்களுக்கும், இஸ்லாமிய தேசம் (ஐ.எஸ்.) என்று அழைக்கப்படும் ISIS இயக்கத்திற்கும் இடையில் பெரிய கொள்கை வேறுபாடு எதுவும் கிடையாது. ஐ.எஸ். இயக்கம், சுன்னி- முஸ்லிம் சமூகத்தவரின் ஏக பிரதிநிதி தான் மட்டுமே என்று உரிமை கோருகின்றது. ஏனைய இயக்கங்களை ''துரோகக் குழுக்கள்'', ''ஒட்டுக் குழுக்கள்'' என்று குற்றஞ் சாட்டித் தடை செய்துள்ளது. இதனால் அடிக்கடி சகோதர யுத்தங்கள் நடந்துள்ளன.

### அலெப்போவைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த இயக்கங்கள் பற்றிய விவரம்:

**1. சுதந்திர சிரிய இராணுவம்**

சிரிய இராணுவத்தில் இருந்து வெளியேறிய சுன்னி- முஸ்லிம்




அதிகாரிகள், படையினர் உருவாக்கிய இயக்கம். அவர்களை ''நல்ல போராளிகள்'' என்று முத்திரை குத்தி, அமெரிக்கா நேரடியாக உதவி செய்து வந்தது.

மேற்கத்திய ஊடகங்களில் அவர்கள் ''மிதவாதிகளாக'' காட்டப்பட்டனர். ஆனால், நடைமுறையில் சுதந்திர சிரிய இராணுவம் கூட இன்னோர் இஸ்லாமிய தீவிரவாத இயக்கம் தான். மொத்தப் போராளிகளின் எண்ணிக்கை முப்பதாயிரம் இருக்கலாம். ஆனால், அவர்கள் பல்வேறு குழுக்களாகப் பிரிந்திருக்கிறார்கள். உண்மையில் சுதந்திர சிரிய இராணுவம் என்பது பல குழுக்களின் ஐக்கிய முன்னணி. அதற்கென பொதுவான தலைவர் எவரும் இல்லை.

**2. நூர் அல் டின் அல் செங்கி (Nour al-Din al-Zenki)**

மிகச்சிறிய இயக்கம். போராளிகளின் மொத்த எண்ணிக்கை 1500 இருக்



கலாம். மத அடிப்படைவாத ஜிகாத்திற்காக போராடும் இந்த இயக்கத்துக்காக சி.ஐ.ஏ. நேரடியாக ஆயுதங்களைக் கொடுத்துதவி வந்தது! நிச்சயமாக, தாம் ஒரு ஜிகாதி இயக்கத்துக்கு உதவினோம் என்ற உண்மையை அமெரிக்கா வெளியில் சொல்லப் போவதில்லை. சில மாதங்களுக்கு முன்னர், சிரிய அரசுக்கு ஆதரவாக பேசிய குற்றத்துக்காக ஒரு 12 வயது சிறுவனை கழுத்து வெட்டி கொலை செய்த கோரக் காட்சி வீடியோ பதிவாக வெளியாகி உலகம் முழுவதையும் உலுக்கி இருந்தது. அந்தக் குரூரச் செயலை செய்த பெருமை இந்த இயக்கத்தைச் சேரும்.

**3. அஹ்ரர் அல் ஷாம் (Ahrar al-Sham)**

ஆப்கானிஸ்தானில் தலிபான் செய்தது போல, சிரியா முழுவதையும் இஸ்லாமிய மயமாக்க விரும்பும் கடும் போக்கு இயக்கம். 2014 ஆம் ஆண்டு வரையில் ஐ.எஸ்ஸுடன் சேர்ந்து இயங்கி வந்தது. ஆனால், ஐ.எஸ். காரர்கள் இந்த இயக்கத்தின் போராளிகள் சிலரை சுட்டுக்கொன்றபடியால் பிரிந்துசென்று தனியாக இயங்கியது. ஐ.எஸ். சிரியாவுக்கும் அப்பால், உலகம் முழுவதும் இஸ்லாமியப் புரட்சியை ஏற்றுமதி செய்ய விரும்புகிறது.



அதற்கு மாறாக அஹ்ரர் அல் ஷாம் சிரியாவுக்குள் நின்று கொள்கிறது. மொத்தப் போராளிகளின் எண்ணிக்கை இருபதாயிரம் இருக்கலாம்.

(கேள்வி தொடரும்...)



# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கிய மானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின் றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




16

## வன்முறைப் புயல் வீசிய 'கறுப்பு ஜுலை'

அரச பயங்கரவாத வன்முறை உச்சத்தைத் தொட்ட காலப்பகுதியாக 1983 ஜூன் மாதப் பகுதியைக் குறிப் பிடலாம். அவசரகாலச் சட்டங்கள்வ ழங்கிய அதிகாரத்தோடு சிங்கள ஆயுதப் படையினர், வவுனியா, திரு கோணமலை நகரங்களில் கண்மூடித் தனமான வன்முறை வெறியாட்டங் களில் ஈடுபட்டனர். தமிழ் பொதுமக் களைச் சுட்டுக் கொன்றமையுடன், கடைகள், வீடுகள், பள்ளிகள், கோயில் கள் ஆகியவற்றுக்குத் தீ வைத்தனர். திருகோணமலையில் ஆயுதப்படை யினருடன் சிங்களக் காடையரும் கூட்டுச் சேர்ந்து புரிந்த கலவரத்தில் 19 தமிழர்கள் வெட்டிச் சரிக்கப்பட் டனர். அங்கு 200 வீடுகள், 24 கடை கள், 8 இந்து கோவில்கள் எரித்துச் சாம் பராக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் பல இளைஞர்கள் இராணுவத்தினால் சுற்றி வளைக்கப்பட்டு சுட்டுக் கொல் லப்பட்டார்கள். அரசின் உந்துதலோடு, தமிழ் மக்கள் மீதான திட்டமிட்ட இனப்படுகொலை ஆரம்பமானது. அரசு தலைவர் ஜெயவர்த்தனா வெளி யிட்டிருந்த அறிக்கை ஒன்று, அதை உறுதிப்படுத்தியது.

''யாழ்ப்பாண மக்களின் கருத்து என்ன என்பது பற்றி எனக்கு அக்கறை இல்லை. அவர்களைப் பற்றி நாம் இப்போது சிந்திக்க முடியாது. அவர் களுடைய உயிர்களைப் பற்றியோ அவர்கள் எம்மைப் பற்றி எத்தகைய கருத்து வைத்திருக்கிறார்கள் என்பது பற்றியோ சிந்திக்க முடியாது.'' என்று ஜெயவர்த்தனா பிரித்தானிய நாளித ழான 'டெய்லி டெலிகிராப்' பத்திரி கைக்கு 1983 ஜூலை 11 ஆம் நாள் அன்று பேட்டி அளித்திருந்தார். சிங்கள ஆயுதப் படைகள் திட்டமிட் டுத் தமிழ் மக்களை அழித்தொழிப் பதற்குச் சிறீலங்கா அரசு ஆதரவு வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதை ஜெயவர்த்தனாவின் கூற்று,ஐயந்திரி பற உறுதிப்படுத்தியது.

இது இவ்வாறிருக்க, ஜூலை மாதம் நடுப்பகுதியில் நிகழ்ந்த சோக சம்ப வம் ஒன்று விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குப் பேரிடியாக அமைந் தது. 1983 ஜூலை 15 அன்று மாலை, யாழ்ப்பாண நகரிலிருந்து 15 மைல் தொலைவிலுள்ள மீசாலைக் கிராமத்தில் இந்தத் துன்பியல் சம்ப வம் நிகழ்ந்தது.

ஒரு மினிபஸ், இரண்டு ஜீப் வண் டிகள், ஓர் இராணுவ 'ட்ரக்' ஆகியன வற்றில் மீசாலைக் கிராமத்துக்குள் நுழைந்த நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் அங்கிருந்த விடு தலைப் புலிப் போராளிகளின் இருப் பிடத்தை நோக்கி விரைந்தனர். இராணுவத்தினரின் இந்தச் சுற்றி வளைப்பில் விடுதலைப்புலிகளின் தாக்குதல் தளபதியான சார்ள்ஸ் அன் ரனி(சீலன்) மற்றும் மூன்று போராளி களும் மாட்டிக் கொள்கின்றனர். சுற்றி வளைத்த படையினருடன் புலி வீரர்கள் துப்பாக்கிச் சமரில் குதிக்கின் றனர். இராணுவத்தினர் பனை மரங் கள் சூழ்ந்த பாதுகாப்பான இடங்களில் நிலையெடுத்து நின்று சரமாரியாகச் சுட, பொட்டல் வெளியில் மாட்டிக் கொண்ட போராளிகள் திருப்பித் தாக்குகின்றனர். இராணுவத்தின் துப் பாக்கி ரவைகள் மார்ப்பைத் துளைக்க, இரத்தம் சிந்தியவாறு நிலத்தில் சரி கிறான் சீலன். தப்ப முடியாத நிலை எனினும், உயிருடன் எதிரியிடம் சிக் கக் கூடாது என்ற உறுதிப்பாடு உந்த, தன்னைச் சுட்டுக் கொன்றுவிடுமாறு சக போராளியிடம் பணிக்கிறான் சீலன். தனது தளபதியைச் சுடத் தயங்கு கிறான் தோழன். அப்பொழுது கண்டிப் பான கட்டளையிடுகிறான் சீலன். வேறு வழி தெரியாது கதறி அழுதபடி சீலனின் கட்டளையை நிறைவேற்று கின்றான் அந்தப் போராளி. அவ் வேளை ஆனந்த் என்ற மற்றொரு பேராளியும் எதிரியின் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயங்களுடன் சாய் கிறான். தன்னையும் சுட்டுக் கொன்று விடும்படி மன்றாடுகிறான் ஆனந்த். அவனது வேண்டுகோளும் நிறை வேற்றப்படுகிறது. உயிருக்கும் மேலாக நேசித்த சக போராளிகளை உயிருடன் எதிரியிடம் விட்டுவிடாது செய்து, அவர்களது ஆயுதங்களையும் எடுத் துக் கொண்டு, முற்றுகையில் இருந்து தப்பிச் சென்றனர் மற்றும் இரு போரா ளிகள்.







மாவீரன் சீலனின் சாவு எமது விடுதலை இயக் கத்துக்கு ஒரு பேரிழப்பாக அமைந்தது. அபாரமான துணிவும், தமிழீழ இலட்சியப் பற்றுறுதியும் மிக்க சீலன் பல களங் களைக் கண்டவீரன். ஆற்றல் படைத்த கட்டளைத் தளபதி. தலைவர் பிரபா கரனின் மிகவும் நெருங்கிய தோழன். அந்த மாவீரனின் மறைவு பிரபாகர னின் ஆன்மாவை உலுப்பியது. ஒரு புறம் கடும் துயரும் மறுபுறம் கடும் சீற்றமும் அடைந்த பிரபாகரன், சிங்களப் படையினருக்குத் தகுந்த பதிலடி கொடுக்கத் தீர்மானித்தார். அதற்கான தாக்குதல் திட்டத்தையும் அவரே வகுத்தார். விடுதலைப் புலிகள் மீதும் பொதுமக்கள் மீதும் அரச பயங்கரவாத வன்செயல்களை ஏவிவிடும் ஆயுதப் படையினர் நிச்சயமாகத் தண்டிக்கப்படுவர் என் பதை எதிரிக்கு உணர்த்த வேண்டும் எனவும் பிரபாகரன் எண்ணினார். யாழ்ப்பாண நகரப் பகுதிக்குள் இராணுவ வண்டித் தொடர்கள் இரவிலே கிரமமாக நட மாடும் வழித்தடங்கள் பற்றிய விவரங்களைப் புலனாய்வு மூலம் திரட்டி, பிரசித்தி பெற்ற திருநெல் வேலிக் கெரில்லாத் தாக்குதலைப் புலிகளின்தலைவர்திட்டமிட்டார். இந்தத் தாக்குதலுக்குச் செல்லக் கிளி அம்மான் பொறுப்பாக நியமிக் கப்பட்டார். ஆனாலும், தாக்குதல் நடவடிக்கை முழுவதையும் பிரபா கரனே நெறிப்படுத்தினார்.

> "யாழ்ப்பாண மக்களின் கருத்து என்ன என்பது பற்றி எனக்கு அக்கறை இல்லை. அவர்களைப் பற்றி நாம் இப்போது சிந்திக்க முடியாது. அவர்களுடைய உயிர்களைப் பற்றியோ அவர்கள் எம்மைப் பற்றி எத்தகைய கருத்து வைத்திருக்கிறார்கள் என்பது பற்றியோ சிந்திக்க முடியாது." – ஜே.ஆர்.ஜெயவர்த்தனா

ஜூலை மாதம் 23 ஆம் நாள், நள்ளிரவு. தலைவர் பிரபாகரனுடன் அன்றைய மூத்த தாக்குதற் தளபதி களான செல்லக்கிளி, கிட்டு, புலேந் திரன், விக்டர், சந்தோசம் ஆகியோரு டன் பதினான்கு விடுதலைப்புலி அதிரடி வீரர்கள், ஆயுதப் பாணிகளாக இயக்கச்சீருடை அணிந்து, யாழ்ப்பாண நகரிலிருந்து இரண்டு மைல் தொலை விலுள்ள திருநெல்வேலி பலாலி - யாழ்ப்பாணம் வீதியோரமாக தாக்கு தலுக்குத் தயாராகிக் கொண்டிருக் கிறார்கள். பொது வாகனங்களும் பாதசாரிகளும் வீதியில் செல்லாதபடி தடை ஒழுங்குகள் செய்து கேந்திர நிலையங்களில் கண்ணி வெடிகளைப் புதைத்துவிட்டு, புலி வீரர்கள் நிலை யெடுத்துக் காத்து நிற்கின்றனர்.

மாதகல் இராணுவ முகாமிலிருந்து சிறீலங்காவின் முதலாவது காலாட் படைப் பிரிவைச் சேர்ந்த பதினைந்து பேர் கொண்ட அணி ஒன்று இராணுவ வண்டித் தொடராக திருநெல்வேலி நோக்கி வந்து கொண்டிருந்தது. முதலில் ஒரு ஜீப் வண்டி, அதற்குப் பின்னால் ஓர் இராணுவ 'ட்றக்' வண்டி யாக, படையினர் பதுங்கி நிற்கும் புலி வீரர்களின் நிலையை அண்மிக் கின்றனர். புலிகளின் பதுங்கு காவல் நிலையை இராணுவ வாகனங்கள் கடந்த போது, நிலக் கண்ணித் தகர்ப்பி அமுக்கப்படுகிறது. திருநெல்வேலியை அதிர வைத்த பயங்கர வெடியோசை. இரணுவ ஜீப் வண்டி காற்றில் உயர எகிறி, துண்டம் துண்டமாகச் சிதறி தரையிலே விழுகிறது. பின்னே வந்த 'ட்றக்' வண்டி திடீரென நிற்கிறது. பீதியடைந்த படையினர் அச்சத்தோடு வெளியே பாய, புலிகளின் துப்பாக்கிச் சல்லடை அவர்களைப் பதம் பார்க் கிறது. 'ட்றக்' வண்டியால் அவர்கள் வெளியே வர வர, அச்சொட்டாகச் சுடு வதில் பெயர் பெற்ற பிரபாகரனின் துப் பாக்கி அவர்களிற் பலரை அடுத் தடுத்து வீழ்த்துகிறது. சில இராணு வத்தினர் வாகனத்துக்குக் கீழே தவழ்ந்து சென்று படுத்திருந்தபடி சிலா விச் சுடுகிறார்கள். ஆனால், புலிகளின் எறிகுண்டுகள், அவர்களைச் செய லிழக்கச் செய்கின்றன.

(தொடரும்...)

## இலங்கை மத்திய வங்கியில் சீன நாணயமான ரென்மிபியும்!

கொழும்பு, ஜன.04

இலங்கை மத்திய வங்கியால் தினமும் வெளியிடப்படும் பிரதான நாணய மாற்று வீதப் பட்டியலில் சீனாவின் நாணயமும் இணைந்துள்ளது.

இவ்வருடத்தில் இருந்து சீன நாணயமான ரென்மிபியை இணைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய முதல் முறையாக 2017ஆம் ஆண்டு நாணய மாற்று வீத பட்டியல் நேற்று முன்தினம் மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ளது.

அதில் சீனாவின் ரென் மிபி ஒன்றுக்கான கொள்வனவு விலை 21.07 ரூபாவும் விற்பனை விலையாக 22.11 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

இதுவரை மத்திய வங்கியின் பிரதான நாணய மாற்று வீத பட்டியலில் பதிவாகியுள்ள நாணயங்களான, அமெரிக்க டொலர், பிரிட்டன் பவுண்ஸ், ஐரோப்பிய ஒன்றியத்தின் யூரோ, சுவிற்ஸர்லாந்தின் பிராங்க், கனேடியன் டொலர், ஆஸ்திரேலிய டொலர், சிங்கப்பூர் டொலர் மற்றும் ஜப்பானிய யென் ஆகிய 8 நாணயங்களுடன் மேலதிகமாக சீனாவின் ரென்மிபி இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரூபா 35 லட்சம் பெறுமதியான சிகரெட்டுகளுடன் மூவர் கைது

கொழும்பு, ஜன.04

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரமுற்பட்ட 35 இலட்சம் ரூபா பெறுமதியான 70ஆயிரம்சிகரெட்டுக்களுடன் மூவரைக் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுங்கப் பிரிவினர் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

டுபாயில் இருந்து நாட்டுக்கு வருகை தந்த கொழும்பைச் சேர்ந்த மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் கைப்பற்றப்பட்ட சிகரட்டுகளை சுங்கப் பிரிவினர் கையகப்படுத்தினர். அத்துடன் சந்தேகநபர்களுக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதாகச் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

## சாமிமலைப் பகுதியில் மூண்டது தீ! குடியிருப்புகள், கடைகள் தீக்கிரை!!





கொழும்பு, ஜன.04

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சாமிமலைப் பகுதிக் குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் 4 கடைகளும் தீக்கிரையாகியுள்ளன என்று மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 6 மணி அளவில் இடம் பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அனர்த்தத்தின் காரணமாகப் பெருமளவிலான உடைமைகள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

தீ அனர்த்தம் இடம்பெற்ற இடத்துக்குச் சென்ற தொழிலாளார் தேசிய சங்கத்தின் இளைஞர் அணித் தலைவர் பா.சிவநேசன் இவ்விடயம் தொடர்பில் மலைநாட்டுப் புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள இருப்பதோடு இளைஞர் அணியின் தலைவர் தலைமையில் நிவாரணங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## தினசரி ராசி பலன் 04.01.2017

| | |
|---|---|
| சுபநேரம் | : காலை : 9.30 – 10.30 |
| | மாலை : 4.30 – 5.30 |
| ராகு காலம் | : 12.00 – 1.30 |
| குளிகன் | : 10.30 – 12.00 |
| எமகண்டம் | : 7.30 – 9.00 |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

கீழ் நோக்கு நாள்

**மேஷம்:** நன்மை - நீண்ட நாளைய ஆசைகள் நிறைவேறி நன்மைகள் பலவும் தரும் நன்னாள்.

**ரிஷபம்:** வெற்றி - செய்யும் காரியங்களில் மேன்மை தந்து வெற்றி நல்கும்.

**மிதுனம்:** செலவு - இன்று திடீர் செலவீனங்கள் ஏற்படும் நாள்.

**கடகம் :** அமைதி - மனக் குழப்பங்கள் குறைந்து நிம்மதி, அமைதி காண்பீர்கள்.

**சிம்மம் :**பரிசு - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் நிதானத்துடன் செயற்பட்டால் எதிர்பாராத பரிசுப் பொருள் சேர்க்கை தரும்.
சந்திராஷ்டமம் : மகம், பூரம்

**கன்னி:** கவனம் - எடுக்கும் காரியங்களில் சிறப்புக்கள் குறையும், ஆதலால் கவனத்துடன் இருக்க வேண்டிய நாள்.

**துலாம்:** கீர்த்தி - உயர்ந்த பண்புகள் மனதில் பிரதிபலித்து நிலையான நிம்மதி கிட்டும்.

**விருச்சிகம்:** நஷ்டம் - அளவான ஆசைகள் இருப்பது இழப்பின் அளவைக் குறைக்கும்.

**தனுசு:** ஆக்கம் - இன்று உங்களுடைய செயலில் நல்முன்னேற்றம் ஏற்படும்.

**மகரம்:** பாராட்டு - உழைப்புக்குத் தகுந்த பாராட்டுக்கள் கிடைக்கும்.

**கும்பம்:** லாபம் - அதிஷ்டங்கள் மறைமுக வரவுகளாக வளம் நல்கும்.

**மீனம்:** தெளிவு - மனதில் உள்ள குழப்பங்கள் நீங்கி தெளிவு பெறும்.

## 2017 ஆம் ஆண்டுக்கான எண்கணித பலன்கள்

'எண்கள் எதையும் செய்யும்'
2017ஆம் ஆண்டுக்கான எண்கணித பலன்கள்
அன்பான வாசகர்களே, பிறந்த திகதி தெரியாதவர்கள் தங்களது ஆங்கிலப் பெயரின் முதல் எழுத்தின் அடிப்படையிலும் கீழ்க்கண்டவாறு பலன்களைத் தெரிந்து கொள்ளலாம்.

### பொதுப்பலன்

இந்த ஆண்டு தன்பலம் தனக்கே தெரியும் என்பதுபோல ஒவ்வொருவரும் மிக உத்வேகமாக தனது பணிகளை கவனிக்க துவங்கவிருப்பதால் உற்பத்தித்துறை மிகப்பெரிய அளவில் முன்னேற்றம் பெறும். அரசாங்கத்தின் ஆதரவு மிக அதிகமாக வந்து குவியும் மக்களுக்கு. கால்நடைகள் அதிகரிக்கும். நில விற்பனை பெருகும். சாதாரண பதவியில் இருப்போர் தமது விடாமுயற்சியால் நம்பமுடியாத ஏற்றங்களை அடைவர். கண் சம்பந்தமான நோய்கள் பலருக்கு வரலாம். இதற்கான முன்னெச்சரிக்கை அவசியம். அதிகளவில் துன்புறுத்தி வந்த நோய்கள் அகன்றுவிடும். ஆசாரமாக நடந்து ஆண்டவன் பற்றுடையவர்கள் அதிக அளவில் ஆனந்தமான வாழ்வை பெறுவர். பொதுப்பணிகளில் மிகுந்த ஆர்வம் கொண்ட பலர் அரசாங்க திட்டங்களை மக்களுக்கு கொண்டு செல்வதில் அதிகமான உதவிகரமாக இருப்பதால் மக்கள் கூடுதல் பலன்களை யெற்று மகிழ்வர்.

குறிப்பாக உலகத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள நாடுகள் வெற்றிமேல் வெற்றி பெறும். பொருளாதார ஏற்றத்தை அள்ளிக் குவிக்கும். நாட்டின் தலைவர்கள் உலக மத்தியில் போற்றப்படும் அளவுக்கு அரசின் திட்டங்களை வகுத்து செயற்படுவர். இந்த ஆண்டின் துவக்கம் 1ஆம் எண்ணிலும், ஞாயிறு அன்று துவங்குவதாலும், 1.1.2017 இன் கூட்டு எண் 3–ஆக வருவதாலும், எல்லா இடங்களிலும் நீதி, நேர்மை, ஒழுங்கு, கட்டுப்பாடு மிகுந்து காணப்படுவதால் தேசத்தில் விரோதத்தை ஏற்படுத்துவோர் பெரும் பின்னடைவைச் சந்திக்க நேரிடும். நாட்டின் பெயர் எண் 1ஆக வரும் நாடுகளும், 3ஆம் எண்ணைக் கொண்ட நாடுகளும் உலக மத்தியில் பெரும் செல்வாக்கை நிலை நாட்டும்.

மேலும் இந்தியாவின் பொருளாதார ஏற்றம் வானளவில் உயரும். இரும்பு, பெற்றோலிய உற்பத்தி, புடைவைத் தொழில், மருந்து, மருத்துவ நிலையங்கள், கல்வி, அரசாட்சி கொடி கட்டிப் பறக்கும். மொத்தத்தில் நல்லாட்சியாளர்களின் நிலை நினைத்துப் பார்த்திராத அளவுக்கு உயர்ந்திடும்.




### எண் 8

- 8, 17, 26 திகதிகளில் பிறந்தவர்களுக்கும், பெயரின் முதல் எழுத்தாக F, P - ஐ பெற்றவர்களுக்கும், பெயர் எண்ணாக 8 அமைந்தவர்களுக்கும் இந்த ஆண்டு பொறுமையுடன் நிதானமும் மிக அவசியம். எந்த ஒரு செயலிலும் சிந்தித்து இறங்குவது நல்லது.
- எப்பொழுதுமே பிறருக்காக வாழும் நீங்கள் உங்களுக்காகவும், உழைக்க வேண்டிய நேரம் இது. பலர் உங்களுடன் நட்பை வளர்த்துக் கொள்ள விரும்பினாலும் நீங்கள் தவிர்ப்பதை நிறுத்துங்கள்.
- செலவுகள் அதிகமாகலாம். இருப்புகள் குறைந்தாலும் பலர் உதவ முன் வருவர் ஏற்றுக் கொள்ளுங்கள்.
- பொறுமையாக செயற்பட்டு குழந்தைகளின் திருமண காரியங்களை நடத்திக் கொள்வது நல்லது பெரியோர்களே. இந்த விடயத்தில் கௌரவம் பார்க்காதீர்கள்.
- அகால உணவுகளை தவிர்ப்பது நல்லது. வாயு சம்பந்தமான பொருள்களால் கடும் அவதிக்குள்ளாக நேரிடும். உஷார்.
- புதிதாக வந்த நட்புகளை பெரிதாக நினைத்து, ஏற்கனவே உள்ளவர்களை உதாசீனப்படுத்தினால் ஏதேனும் சட்ட சிக்கலில் மாட்டிக்கொள்ள நேரிடும். கவனம் தொழில் அதிபர்களே.
- கொடுக்கல் - வாங்கலில் கடும் சிரமத்தை எதிர்கொள்ள நேரிடும். பண விடயங்களில் மிக எச்சரிக்கையுடன் நடந்து நற்பெயரை காப்பாற்றிக் கொள்வது நல்லது வியாபாரிகள்.
- அதிகாரிகளை அடக்க நினைத்து கடும் சிக்கல்களை ஏற்படுத்தி, சக ஊழியர்கள் மத்தியில் அவமானப்பட நேரிடும். மரியாதை மிக அவசியம் பணியாளர்களே.
- தலைமையை வேண்டாத இடத்தில் விமர்சித்து, கையும் களவுமாக விரும்பாதவர்களால் வறுத்தெடுக்கப்படலாம் அரசியல் வாதிகளே. கடும் எச்சரிக்கை.
- பிறரால் பெரும் ஏமாற்றத்துக்கு உள்ளாவதுடன் பண விரயமும் ஏற்படும். கவனம் கலைஞர்களே.
- விவசாயிகள் விருப்பங்கள் அரசால் நிறைவேற்றப்பட்டாலும் தகுந்த வாய்ப்பை நழுவ விடும் நிலை ஏற்படும். விழிப்புடன் செயற்படுவது நல்லது.
- பெண்கள் பிறந்தவீட்டுப் பெருமை பேசுவதை விட, புகுந்த வீட்டில் தங்களின் நற்பணிகள் மூலம் உயர்வு பெறுவது நல்லது.
- சோம்பேறித்தனத்தை விட்டுவிட்டு, உத்வேகத்துடன் செயற்பட்டு வெற்றி பெற முயலுங்கள் மாணவர்களே.



கலாநிதி ஜே.என்.எஸ்.செல்வன் Ph.D.,
எண் கணித ஆலோசகர்
வாஸ்து நிபுணர், நிலத்தடி நீர் நிபுணர்.
Email : jnsnumerro@yahoo.co.in

# கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில்....

கொழும்பில் எதிர்க்கட்சித்தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடந்த புத்தாண்டு ஆரம்ப நாள் நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள். எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தேசியக் கொடியை ஏற்றியும் மங்கல விளக்கேற்றியும் அலுவலகக் கருமங்களை ஆரம்பித்து வைத்தபோது..! (இ)

## பள்ளிவாசல் அமைக்க உதவுவாராம் மஹிந்த!

கொழும்பு, ஜன.04

பள்ளிவாசல் அமைப்பதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் தாம் செய்யவுள்ளார் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாகத் தெரியவந்துள்ளதாவது:-

மஹிந்த ராஜபக்ஷவுக்கும் முஸ்லிம் மதத் தலைவர்களுக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

புது வருடத்தை அடுத்து முஸ்லிம் மதத் தலைவர்களைச் சந்தித்த மஹிந்த, அவர்களின் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டார்.

மஹிந்தவின் கால்டன் இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

அம்பாந்தோட்டை மாவட்ட பிரதான முஸ்லிம் மத தலைவர்களான மொஹமட் அல் பாஹிஸ், வசீர் மௌலானா நசீம் தலைமையிலான குழுவினர், இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதன்போது அந்தப் பிரதேசத்தில் புதிதாக கட்டப்படும் பள்ளிவாசலின் நடவடிக்கை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது பள்ளிவாசல் அமைப்பதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்வேன் என மஹிந்த உறுதியளித்துள்ளார்.

இதற்கான பணம் மற்றும் பொருள்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குமாறு பஸில் ராஜபக்ஷவிடம் தொலைபேசி அழைப்பின் ஊடாக மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை வழங்கியுள்ளார்.- என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

## இலங்கை வந்துள்ள எரிபொருள் கப்பல்

திடீர் எரிபொருள் தேவை ஏற்பட்டால் அதற்கு முகங்கொடுக்கும் வகையில் எரிபொருள் கப்பலொன்று இலங்கை வந்துள்ளது.

பெற்றோலிய வளஅபிவிருத்தி அமைச்சர் சந்திம வீரக்கொடி இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். தற்போது நிலவும் வறண்ட காலநிலை காரணமாக மின் தடை ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன. அந்த வகையில் மாற்று ஏற்பாடுகள் மூலம் மின்சாரத்தை வழங்கப் போதுமான எரிபொருளை வழங்கத் தயாராக உள்ளோம் என்றும் அதனை நோக்காகக் கொண்டு எரிபொருள் கப்பல் வரவழைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# பண்ணையில் இராணுவ வசமுள்ள போதனா வைத்தியசாலைக் காணி

## விடுவிக்குமாறு ஜனாதிபதியைக் கோரும் மருத்துவர்கள்

யாழ்ப்பாணம், ஜன.04

"பண்ணையில் இராணுவத்தினர் வசமுள்ள யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சொந்தமான காணியை விடுவிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"யாழ்ப்பாணத்துக்கு வரும் ஜனாதிபதி இந்த விடயத்திலும் கவனம் எடுத்து உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"இந்தக் காணி விடுவிக்கப்பட்டால் இங்கு சிறுவர் வைத்தியசாலை அமைக்க முடியும்.

"இழுபறியிலுள்ள இந்தக் காணி விடயத்துக்கும் அவர் உடனடித் தீர்வை எடுத்து வைத்தியசாலை காணியை விடுவிக்க வேண்டும்."

-இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கு வருகைதரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பல நிகழ்வுகளில் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த நிலையில் மருத்துவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

வடக்கு மாகாணத்தில் சிறுவர் வைத்தியசாலை அமைப்பதற்கு 2017ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் 1000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. சிறுவர் வைத்தியசாலை அமைப்பதற்கு 1.5 ஏக்கர் காணி தேவையாக உள்ளது. காணி உரிய காலத்தில் கிடைக்காது போனால் நிதி வேறு இடத்துக்குச் சென்றுவிடும் அபாய நிலை உள்ளது.

வைத்தியசாலைக்கு உரிய காணியைத் தானே விடுவிக்குமாறு கோருகின்றோம். யாழ்ப்பாணத்துக்கு வரும் ஜனாதிபதி அந்தக் காணியை விடுவிக்க உடனடி உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும்.

யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்குக் காணி இல்லாமை பெரிய பிரச்சினையாக உள்ளது. யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும், பண்ணையில் உள்ள வைத்தியசாலைக்குரிய காணியைப் பெற்றுத் தரும்படி பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ளோம்.

சிறுவர் வைத்தியசாலை அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சிறுவர் வைத்தியசாலை அமைப்பதற்கான காணியை பெற்றுக்கொள்வதற்கு நன்கொடையாளர்களிடமும் கேட்டுள்ளோம்.

வைத்தியசாலையின் அபிவிருத்தித்திட்டத்துக்காக நிதிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. காணிகள் பெற்றுக் கொள்ள முடியாமையால் கிடைக்கப் பெற்ற நிதிகள் திரும்பிச் சென்றுள்ளன.

இது எங்கள் மக்களுக்கே பாதிப்பாக அமைந்துள்ளது. தூர இடங்களில் இருந்து வரும் வைத்தியசாலை ஊழியர்கள் தங்கி நின்று பணிபுரிவதற்கு விடுதி அமைக்க வேண்டியுள்ளது. அதற்கும் காணி தேவையாக உள்ளது.

வைத்தியசாலையின் பல அபிவிருத்தித் திட்டங்களுக்குக் காணிகள் இல்லாமை பெரிய பிரச்சினையாக உள்ளது. இதற்கு புலம்பெயர் தேசங்களில் வாழ்ந்து வரும் எமது உறவுகளோ அல்லது தனி நபர்களோ வைத்தியசாலைக்கு அண்மையில் உள்ள காணிகளை வைத்தியசாலைக்கு நன்கொடையாக வழங்குவதற்கு முன்வர வேண்டும்.- என்று தெரிவித்துள்ளனர். (ஐ)

# மேசன் தொழிலாளர்களுக்கான பயிற்சி குடாநாட்டில் இரண்டாவது தடவையும்!

## ஆர்வமுள்ளோர் பதிவு செய்யலாம்

யாழ்ப்பாணம், ஜன.04

குடாநாட்டில் மேசன் தொழிலாளருக்கான பயிற்சி இரண்டாவது தடவையாகவும் ஆரம்பிக்கப்படவுள்ளது. எனவே, பயிற்சியில் பங்குபற்ற விரும்பும் தொழிலாளர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுது. நாட்டில் போர் முடிந்து சமாதான சூழ்நிலை உருவானமையைத் தொடர்ந்து கட்டட வேலைகள் வேகமாக இடம் பெற்று வருகின்றன. ஆனால் தேவைக்கேற்றவாறு தரமான மேசன் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் கட்டட வேலைகளில் தடங்கலும் தாமதமும் ஏற்படுகின்றன.

இந்நிலை குறித்துக் கவனம் செலுத்தியுள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, மேசன் தொழிலை மேம்படுத்தும் நோக்குடன் மேசன் தொழிலாளர்களுக்கு 3 மாதகாலப் பயிற்சியை வழங்கி வருகின்றது. இத் திட்டத்தின் கீழ் கடந்த வருடம் யாழ். மாவட்டத்தில் சுமார் 150 மேசன் தொழிலாளர்களுக்கு 3 மாதகாலப் பயிற்சி வழங்கப்பட்டமையுடன் பயிற்சி முடிவில் அவர்களுக்கு 3 மாதங்களுக்குரிய 30ஆயிரம் ரூபா வேதனத்துடன் சீருடைகள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தொழில் சார்ந்த உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந் நிலையில் பயிற்றப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கும் நோக்குடன் இரண்டாவது தடவையாகவும் பயிற்சி வழங்கப்படவுள்ளது. இப்பயிற்சியில் பங்குபற்ற விரும்புபவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை 200 இற்கும் மேற்பட்டவர்கள் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த வருடத்திலும் பார்க்க இவ்வருடம் பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடுமேன்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-59)

## மின் உற்பத்தி இயந்திரங்கள் கொள்வனவு செய்யத் திட்டம்

கொழும்பு, ஜன.04

60 மின்சார உற்பத்தி இயந்திரங்களைக் கொள்வனவு செய்வது குறித்து இலங்கை மின்சார சபை கவனம் செலுத்தியுள்ளது.

நாட்டில் அவசர மின்சாரத் தேவையொன்று ஏற்படுமாயின், அதற்கு முகங்கொடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக நீர் மின்சாரம் உற்பத்தி செய்யும் நீர்த்தேங்களின் நீர் மட்டம் குறைவடைந்து வருகின்றது.

இந்த நிலையில், மின்சாரத் துண்டிப்பைத் தவிர்ப்பதற்காக மின்சார உற்பத்தி இயந்திரங்களைக் கொள்வனவு செய்ய இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளது.

இதற்கான யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று மின்சாரத்துறை அமைச்சின் செயலாளர் சுரேன் பட்டகொட தெரிவித்துள்ளார்.

இதற்கமைய ஆறு மாதங்களுக்கான மெகா வோல்ட் மின் உற்பத்தி செய்யக் கூடிய 60 இயந்திரங்களைக் கொள்வனவு செய்யவுள்ளனர் என்று அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)



நன்றி : தி இந்து

## விரைவில் சென்னை அடுத்த புயலை சந்திக்கும் வாய்ப்பு

சென்னை, ஜன.04

'வர்தா' புயலின் தாக்கம் ஓரளவு தணிந்து விட்ட நிலையில், விரைவில் சென்னை அடுத்த புயலைச் சந்திக்கவுள்ளதாக வானிலை மைய அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் கூறியவை வருமாறு:


''வங்கக் கடலில் இலங்கைக்குத் தெற்கே, பூமத்திய ரேகையை ஒட்டி ஒரு காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியுள்ளது. அது படிப்படியாக வலுப் பெற்று அந்தமான் அருகே புயலாக மாற வாய்ப்புள்ளது.

அந்தப் புயல் எதிர்வரும் 11 ஆம் திகதி சென்னை அல்லது நெல்லூர் கரையைக் கடக்க வாய்ப்புள்ளது. அப்போது மழை பெய்யலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது'' என்றனர்.

இதற்கிடையில் இரவு நேரங்களில் குளிர் அதிகமாக இருக்கும் என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

## சமூகத்தின் பெயரால் வாக்கா? அதுவும் ஊழல் நடவடிக்கையே

### உச்ச நீதிமன்றம் மீண்டும் அறிவிப்பு



டில்லி, ஜன.04

இந்தியாவில் தேர்தல்களின்போது சாதி, மதம், மொழி, இனம், போன்ற சமூகத்தின் பெயரால் வாக்குக் கேட்பது, ஊழல் நடவடிக்கையாகக் கருதப்படும் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

தேர்தலின்போது சாதி, மத அடிப்படையில் வாக்குச் சேகரிப்பது தொடர்பாக 1995 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மறு பரிசீலனை செய்யக் கோரிச் செய்யப்பட்ட மனு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்த வேளையிலேயே மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

7 பேர் கொண்ட அமர்வில் 4 நீதிபதிகள் தேர்தலின்போது சாதி, மதம், மொழி, இனத்தின் பெயரில் வாக்குகள் கேட்பது ஊழலே என்று தெரிவித்தமையை ஏற்றுக் கொண்ட உச்ச நீதிமன்றம் இனிமேல் தேர்தல்களின் போது சாதி, மதம் ஆகியவற்றைப் பயன்படுத்தி வாக்குக் கேட்கக் கூடாது என்று உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவு விரைவில் நடைபெற உள்ள 5 மாநில சட்ட சபைத் தேர்தலில் எதிரொலிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.(எ)

## இந்தியாவில் முதன் முதலாக திருநங்கைகளுக்குப் பள்ளி

டில்லி, ஜன.04

இந்தியாவில் முதன் முறையாகத் திருநங்கைகளுக்குத் தனிப் பாடசாலை திறக்கப்பட்டுள்ளது.

பாடசாலைப் படிப்பைத் தொடர முடியாத திருநங்கைகளுக்காக இந்தத் தனிப்பாடசாலை கேரள மாநிலத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

திருநங்கைகள் சமூகத்தில் பல கருத்துக்களுக்கும், வெறுப்புகளுக்கும் ஆளாவதன் விளைவாக, எண்ணிக்கையில் அவர்களில் சுமார் அரைப் பங்கினர் தங்கள் பாடசாலைப்படிப்பைநிறைவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.




இந்தியாவில் 'சஹாஜ்' சர்வதேசப் பாடசாலை திருநங்கைகளுக்கான முதல் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

25- 50 வயதுடைய 10 பேருக்கு அந்தப் பாடசாலையில் இடம் வழங்கப்பட இருக்கின்றது.

மேலும் அந்தப் பாடசாலையில் சேரும் நபர்கள் 10 மற்றும் 12 ஆம் வகுப்புக்காகத் தயார்ப்படுத்தப்படுவார்கள்; பொதுவாக 15-16 வயதினர் 10 ஆம் வகுப்பும், 17-18 வயதினர் 12 ஆம் வகுப்பில் பயில்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலையின் முதல்வரான திருநங்கை ஆர்வலர் விஜயராஜா மல்லிகா பி.பி.ஸி.யிடம் தெரிவிக்கையில்,


''திருநங்கைகள் சமூகத்தில் நல்லதொரு பணிகளைப் பெறவும் மரியாதையுடன் வாழவும் அவர்களை இந்தப் பாடசாலை தயார்ப்படுத்தும்.

இதேவேளை இது வரை வந்த 14 விண்ணப்பங்களில் நாங்கள் 6 பேருக்கு இடம் வழங்கியுள்ளோம்.

அனைவரும் ஆணிலிருந்து பெண்ணாக மாறியவர்கள். பத்து இடங்களில் ஒன்றைப் பெண்ணிலிருந்து ஆணாக மாறியவர்களுக்கும் மேலும் ஒன்றை மாற்றுத்திறனாளிகளுக்கும் ஒதுக்கியுள்ளோம்''. என்று அவர் தெரிவித்தார். (எ)

## விஷச் சாராயம் குடித்த ஆறு பேர் உயிரிழப்பு!

### மேலும் 18 பேர் ஆபத்தான நிலையில்



கொல்கத்தா, ஜன.04

மேற்கு வங்காளம் மாநிலம், புர்த்வான் மாவட்டத்தில் விஷச் சாராயம் குடித்த 6 பேர் உயிரிழந்தனர். 18 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

புர்த்வான் மாவட்டத்தில் உள்ள ராம்கோபால்பூர் கிராமத்தில் நேற்றுமுன்தினம் விஷச் சாராயத்தை வாங்கிக் குடித்த 30 இற்கும் அதிகமானோர் அடுத்தடுத்து, மயங்கி, சுருண்டு விழுந்தனர்.

பாதிக்கப்பட்டவர்களை அவர்களது உறவினர்கள் புர்த்வான் அரச மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்று 6 பேர் அடுத்தடுத்து உயிரிழந்தனர். மீதியுள்ளவர்களின் உயிரைக் காப்பாற்ற தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வரும் நிலையில் அவர்களில் 18 பேர் கவலைக்கிடமாக உள்ளனர் எனக் கூறப்படுகிறது.

எனவே, இந்தச் சம்பவத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. (எ)

## கட்சி நிர்வாகிகளுடன் சசிகலா ஆலோசனை

சென்னை, ஜன.04

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் சசிகலா, மாவட்ட வாரியாகக் கட்சி நிர்வாகிகளுடன் இன்று முதல் ஆலோசனை நடத்தவுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளவை வருமாறு:

''கட்சிப் பணிகள் குறித்து மாவட்ட ஒன்றிய, நகர, பேரூராட்சி, பகுதிச் செயலாளர்கள் உள்ளிட்டோருடன்ஆலோசனை நடத்தப்படவுள்ளது. தொகுதி வாரியாகப் பொதுக் குழு உறுப்பினர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சார்பு அமைப்புகளின் மாவட்டச் செயலாளர்களுடனும் ஆலோசனைநடத்தப்படவுள்ளது.

அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் இன்று முதல் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெறும்.''-என்றுள்ளது.(எ)

## 31 இல் நாடாளுமன்று கூடும்; மறுநாள் 'பட்ஜெட்' தாக்கல்

### நேற்றைய கூட்டத்தில் முடிவு

டில்லி, ஜன.04

இந்திய நாடாளுமன்றம் எதிர்வரும் 31 ஆம் திகதி கூடவுள்ளது. மத்திய பட்ஜெட் அடுத்த மாதம் முதலாம் திகதி தாக்கல் செய்யப்படவுள்ளது.

நாடாளுமன்றத்தில் மத்திய அரசின் பொது பட்ஜெட் வழக்கமாக பெப்ரவரி கடைசி வாரத்தில் தாக்கல் செய்யப்படும்.

இந்த ஆண்டு முன்கூட்டியே பட்ஜெட்டைத் தாக்கல் செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

பட்ஜெட் கூட்டத் தொடரை எப்போது ஆரம்பிப்பது எத்தனை நாள்கள் நடத்துவது என்பது பற்றி முடிவு செய்வதற்காக உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் மத்திய அமைச்சரவையின் பொருளாதார விவகாரக் குழுக் கூட்டம் டில்லியில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மத்திய அமைச்சர் சுஷ்மா சுவராஜ், நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் அனந்தகுமார் உள்ளிட்ட மூத்த அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத் தொடரை எதிர்வரும் 31 ஆம் திகதி கூட்டுவது என்றும் அடுத்த மாதம் முதலாம் திகதி மத்திய பட்ஜெட் தாக்கல் செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டது. (எ)



# பிரேஸில் சிறையில் கலவரம்! 56 பேர் கொடூரமாகக் கொலை!!

பிரேஸிலியா, ஜன.04

பிரேஸிலில் அமேசன் மாகாணத்தில் உள்ள மனாஸ் நகரில் சிறைச்சாலைக்குள் கைதிகளுக்கு இடையே ஏற்பட்ட கலவரத்தில் 56 பேர் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். அத்துடன், பலர் படுகாயமடைந்துள்ளனர் என்று சர்வதேசத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வேளையில் ஏற்பட்ட கலவரம் தொடர்ந்து 17 மணி நேரம் நீடித்துள்ளது.

சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள போதைப் பொருள் கடத்தல் குற்றவாளிகளுக்கும் உள்ளூர் கைதிகளுக்கும் இடையே கலவரம் ஏற்பட்டது எனக் கூறப்படுகிறது.

இந்தக் கலவரத்தைத் தொடர்ந்து சிறைக் காவலர்களில் 12 பேர் கைதிகளால் சிறைப்பிடிக்கப்பட்டனர். அதன் பின்னர், இருதரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட கலவரத்தில் சில கைதிகளின் தலை துண்டிக்கப்பட்டும், சிலர் உயிரோடு எரிக்கப்பட்டும் கொல்லப்பட்டனர்.

சிறைச்சாலையைத் தங்களது அதிகாரத்தின் கீழ் கொண்டு வருவதற்காகவும், கடத்தல் பொருள்களைக் கொண்டு செல்ல வழிகளை உருவாக்கும் முயற்சியில் இந்தக் கலவரம் ஏற்பட்டது எனக் கூறப்படுகிறது.

மேலும், இந்தக் கலவரத்தில் பலர் சிறைச்சாலையை விட்டு தப்பி ஓடியுள்ளனர். கலவரத்தில் படுகாயம் அடைந்த சில கைதிகள் தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சர்வதேச அளவில் குற்றங்கள் அதிகளவில் நிகழும் நாடுகளின் பட்டியலில் பிரேஸில் முதலிடம்வகித்து வருவதுடன், அங்குள்ள சிறைச்சாலைகளிலும் அதிகளவில் கைதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். (எ)



## சிரிய நாட்டு கிளர்ச்சியாளர் எச்சரிக்கை

டமஸ்கஸ், ஜன.04

சிரியாவில் போர் நிறுத்தத்தை மீறும் வகையில் அரச படைகள் தாக்குதல் நடத்துவதை நிறுத்தாவிடில் அமைதிப் பேச்சு ரத்து செய்யப்படும் என்று சிரியக் கிளர்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

ரஷ்யா - துருக்கி இணக்கப்பாட்டின் அடிப்படையில் இந்த மாத இறுதியில் இந்தப் பேச்சு நடைபெறவுள்ளது.எனினும் அரசபடையினர் போர் தவிர்ப்புக் காலத்திலும் பெரியளவில் வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று கிளர்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர். (எ)

## தாய்லாந்தில் வாகன விபத்து: 25 பேர் உடல் கருகிப் பலி!

பாங்கொக், ஜன.04

தாய்லாந்தில் நெடுஞ்சாலையைக் கடக்க முயன்ற வான் மீது லொறி மோதியதில் 25 பேர் உடல் கருகிப் பலியாகினர்.

கிழக்கு தாய்லாந்தில் கிளெங் மாவட்டத்தில் உள்ள ரயாங் என்ற இடத்தில் இருந்து ஆள்களுடன் லொறி ஒன்று சென்று கொண்டிருந்தது.

சாங்புரி என்ற இடத்தில் நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த ஒரு வான் மீது பயங்கரமாக மோதியது. இதனால் லொறியும், வானும் தீப்பிடித்து எரிந்தன.

இந்த விபத்தில் லொறியில் பயணம் செய்த 11 பேரும், வானில் சென்ற 14 பேரும் என மொத்தம் 25 பேர் உடல் கருகிப் பலியாகினர். அவர்களில் 3 வயதுச் சிறுவனும் அடங்குவான்.

அதிவேகமாக வந்த வான் குறுக்கு வீதியைக் கடந்தபோது வான் கட்டுப்பாட்டை இழந்து லொறி மீது மோதியது எனக் கூறப்படுகிறது. இதன் போது வானில் இருந்த எரிவாயு சிலிண்டர் வெடித்ததால் தீ விபத்து ஏற்பட்டது எனக் கருதப்படுகிறது. (எ)

## ரொஹிங்கியா முஸ்லிம்கள் மீதான வன்முறையின் காணொலி அம்பலம்



நைபிடோ, ஜன.04

மியன்மாரின் தொடர்ந்து துன்புறுத்தல்களுக்கு உள்ளாகி வரும் ரொஹிங்கியா முஸ்லிம் மீது இராணுவத்தினர் மேற்கொள்ளும் கொடூரத் தாக்குதல்கள் தொடர்பான காணொலி வெளியாகியுள்ளது.

சிறுபான்மை இனத்தவர்களான ரொஹிங்கியா முஸ்லிம்கள் மீதான தாக்குதல் நடவடிக்கைகள் தொடர்கின்றன என்று வெளியிடப்பட்ட தரவுகளில் உண்மை இல்லை என்ற வாதங்கள் வெளிவந்த நிலையில், தற்போது கொடூரத் தாக்குதல்களை மேற்கொள்ளும் காணொலி ஒன்று வெளியாகியுள்ளது.

இந்தநிலையில், இந்தக் காணொலி தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

ரொஹிங்கியா முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளில் பதற்றநிலை மற்றும் துன்புறுத்தல்கள் தொடரும் பட்சத்தில் மியன்மாருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை எடுக்க நேரிடும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு தனது அறிக்கையில் தெரிவித்திருந்த நிலையில் தற்போது இந்தக் காணொலி வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## இஸ்ரேல் பிரதமரிடம் விசாரணை ஆரம்பம்

ஜெருசலேம், ஜன.04

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகூ லஞ்சம் வாங்கினார் எனக் கூறப்பட்ட குற்றச்சாட்டில் பொலிஸார் அவரிடம் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

வர்த்தகச் சமூகத்தினிடம் இருந்து பல தனிப்பட்ட நன்மைகளை இஸ்ரேல் பிரதமர் பெற்றுக்கொண்டார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. விசாரணையாளர்கள் கமராக்களில் படம் பிடிக்கப்படுவதைத் தடுக்க இஸ்ரேல் பிரதமரின் வீட்டுக்கு முன்னால் கறுப்புத் திரைபோடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## அமெரிக்கா மீது வடகொரியாவால் ஏவுகணைத் தாக்குதல் நடத்த முடியாது

### அடித்துக் கூறுகிறார் ட்ரம்ப்

நியூயோர்க், ஜன.04

அமெரிக்கா மீது வடகொரியாவால் ஏவுகணைத் தாக்குதல் நடத்த முடியாது என்று ரொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வடகொரிய ஜனாதிபதி கிம்ஜாங் உன் தொலைக்காட்சியில் புத்தாண்டு உரை நிகழ்த்தினார். சுமார் 30 நிமிடங்கள் ஆற்றிய உரையில், வடகொரியா கண்டம் விட்டுக்கண்டம் பாய்ந்து சென்று தாக்கும் ஏவுகணை தயாரித்து வருகிறது.

அமெரிக்கா வரை சென்று தாக்கும் திறன் கொண்ட இந்த ஏவுகணை தயாரிக்கும் பணி நிறைவடையும் நிலையில் உள்ளது. எனவே அந்த ஏவுகணைச் சோதனை விரைவில் நடத்தப்படும் - என்றார்.

அவரது இந்தப்பேச்சு உலக நாடுகளிடையே பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த நிலையில் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ரொனால்ட் ட்ரம்ப் டுவிட்டரில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ளார். அவர் தெரிவித்தவை வருமாறு;

''அமெரிக்காவை தாக்கும் அளவுக்கு வடகொரியாவால் ஏவுகணை தயாரிக்க முடியாது.

"எனவே, அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தும் வடகொரியா அரசு எண்ணம் பலிக்காது என்று தெரிவித்துள்ளார். வடகொரியாவை அணு ஆயுத நாடு என ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று அமெரிக்கா கூறி வருகிறது. இந்நிலையில் வடகொரியா பற்றி ட்ரம்ப் இதுவரை தனது கொள்கையை அறிவிக்காதநிலையில் தற்போது தனது நிலைபாட்டை வெளிப்படுத்தியுள்ளார். (எ)

## இஸ்தான்புல் தாக்குதல் சம்பவம்; இதுவரை எண்மர் கைதாகினர்!

இஸ்தான்புல், ஜன.04

துருக்கி தலைநகர் இஸ்தான்புல்லில் உள்ள இரவு கேளிக்கையகத்தில் புத்தாண்டின் போது நடைபெற்ற படுகொலைகள் தொடர்பில் துருக்கியில் உள்ள பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார் 8 சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

இந்தத் தாக்குதலில் 39 பேர் கொல்லப்பட்டனர். தாக்குதல்தாரியை பொலிஸார் தொடர்ந்து தேடி வருகின்றனர்.

இதேவேளை ஐ.எஸ் குழுவைச் சேர்ந்த தீவிர வாதிகளில் ஒருவர் இந்தத் தாக்குதலை நடத்தினார் என ஐ.எஸ். அமைப்பு தெரிவித்துள்ளது.

சிரியாவில், ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக துருக்கி மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்குப்பதில் தாக்குதல் நடத்தப்பட்டது என ஐ.எஸ் கூறியுள்ளது. (எ)

காலைக்கதிர்
Kalaikkathir



# இந்தியாவின் நிழலாகவே இருக்குமா இலங்கை?

இந்தியக் கடல் பிராந்தியத்தை ஆக்கிரமித்துவரும் சீனாவை எதிர்த்து நிற்கக் கூடிய ஒரேயொரு பிராந்திய நாடாக விளங்கும் இந்தியாவுடன் பகைமையை வளர்க்கக் கூடாது என்பதற்காகவே அமெரிக்கா வெளிப்படையாக இலங்கையின் இறைமையில் தலையீடு செய்யாதிருக்கலாம்.

பூமியில் இலங்கை என்னும் தீவு எப்போதும் ஒரு சிறிய தொரு நாடாகவே காணப்படுகிறது. முன்னர் சிலோன் என்று அழைக்கப்பட்ட இலங்கையின், பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல பண்டுங் மாநாட்டில் அப்போதைய நவநாகரிகப் போக்கை எதிர்த்தார் என்பதுடன் சீனாவுக்கு எதிரான உரை ஒன்றை நிகழ்த்திய போது, இந்தியப் பிரதமர் ஜவஹர்லால்நேரு, விரைந்து சென்று 'சேர் ஜோன், ஏன் தங்களுடைய உரையை எனக்குக் காண்பிக்கவில்லை?' என்று வினவினார்.

'ஏன் நான் அவ்வாறு செய்ய வேண்டும்? நீங்கள் தங்களுடைய உரையை என்னிடம் காண்பித்தீர்களா?' என ஜோன் கொத்தலாவல, நேருவிடம் வினவினார் என்று வரலாறு கூறுகிறது.

இதையொத்த சர்ச்சையொன்று 1990களில் இடம்பெற்றது எனக் கூறப்படுகிறது.

அப்போது கொழும்புக்கான அமெரிக்கத் தூதராகக் கடமையாற்றிய ரொசிற்றா ஸ்காபர், 'வொய்ஸ் ஒப் அமெரிக்கா' என்ற அமெரிக்காவின் பன்னாட்டு ஒலிபரப்பு நிறுவனத்தின் சக்தி வாய்ந்த ஒலிபரப்பியை இலங்கையில் நிறுவுவதற்கு ஆதரவு வழங்கினார். இலங்கை இதற்கு ஆதரவு அளித்த போதும், இந்தியா எதிர்ப்பை வெளியிட்டது.


இதுபோன்றே தற்போது அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலைத் துறைமுகங்களின் எதிர்காலம் தொடர்பாகவும் சர்ச்சைகள் இடம்பெறுகின்றன. அதாவது, இந்தியா தனது பிராந்திய மற்றும் அனைத்துலகக் கடமைகளை ஒருமுகப்படுத்தி உறவுகளை வலுப்படுத்துவதில் பல்வேறு போராட்டங்களுக்கு முகங்கொடுக்கும் நிலையில், இவ்விரு துறைமுகங்களின் எதிர்காலம் தொடர்பான சர்ச்சை தொடர்கிறது.

இந்தியாவிடம் ஆலோசனைகள் பெறாது, இலங்கை சொந்தமாகத் தீர்மானம் இயற்றுவது தொடர்பில், இந்தியா அவ்வளவு மகிழ்ச்சியடையாது என்று விமர்சகர்கள் கருதினாலும் கூட, இவ்விரு நாடுகளும் ஒரே தரப்பிலேயே இருக்கின்றன என அமெரிக்கா கருதுகிறது.

ஆனால், சீனா என்பது இங்கு பிறிதொரு விடயமாகும். சீனா தனது 'சகல காலநிலை நண்பன்' எனக் கூறப்படும் பாகிஸ்தானில் மட்டுமல்லாது, நேபாளம், பங்களாதேஷ் மற்றும் மியன்மார் போன்ற இந்திய மாக்கடல் பிராந்திய நாடுகளில் தனது திட்டங்களை அமுல்படுத்தி வருகிறது. இந்த நாடுகளைச் சூழவுள்ள கடல் பிரதேசத்திலும் சீனா தனது செல்வாக்கை விரிவுபடுத்தி வருகிறது.

டிசெம்பர் மாதத்தின் ஆரம்பத்தில், சீனாவின் Merchant Port Holdings என்னும் நிறுவனத்துக்கு அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை குத்தகைக்குவழங்குவது தொடர்பான 1.12 பில்லியன் டொலர் பெறுமதியான உடன்படிக்கை ஒன்றுக்குள் இலங்கை நுழைந்தது.

இது வெறும் புரிந்துணர்வு உடன்படிக்கை மட்டுமே என்று இலங்கையின் துறைமுக அமைச்சர் அர்ஜுனரணதுங்க தெரிவித்துள்ள போதிலும், இந்திய மாக் கடலின் பூகோள கேந்திர முக்கியத்துவம் மிக்க கடல் வழியில் அம்பாந்தோட்டைத்துறைமுகம் அமைக்கப்பட்டுள்ளதால் இது மிக முக்கிய கேந்திர மையங்களில் ஒன்றாக உள்ளது.



சீனாவுடனான ராஜபக்ஷ அரசின் நெருக்கமான உறவை இந்தியா எதிர்த்திருந்தது. இதனால் ராஜபக்ஷ அரசுக்கு எதிரான தனது முழுமையான எதிர்ப்பையும் 2015 இல் இடம்பெற்ற அதிபர் தேர்தலில் இந்தியா காண்பித்ததாக இலங்கையின் முன்னாள் பாதுகாப்புச் செயலரும் முன்னாள் அதிபர் மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரர்களில் ஒருவருமான கோத்தபாய ராஜபக்ஷ நம்புகிறார்.

இந்தத் தேர்தல் இடம்பெறுவதற்கு ஒரு சில வாரங்களுக்கு முன்னர் காத்மண்டுவில் இடம்பெற்ற சார்க் பிராந்திய உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கையின் அப்போதைய அதிபர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தபோது தேர்தலில் வெற்றி பெறுவதற்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தார்.

ஆனால், இந்தியா தனது தேசிய நலனில் இரட்டை வேடங்களைக் கொண்டிருந்தது என்பது மட்டுமே எதிர்பார்க்கப்பட வேண்டிய விடயமாகும்.

சீனாவுடன் இலங்கையால் மேற்கொள்ளப்பட்ட 1.4 பில்லியன் டொலர் பெறுமதியான துறைமுக நகரத் திட்டத்தை இலங்கை இரத்துச் செய்ய வேண்டும் எனவும் சீனா மற்றும் இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபையால் இணைந்து உருவாக்கப்பட்ட கொழும்பு அனைத்துலக கொள்கலன் முனைய நிறுவனத்தை இலங்கையே பொறுப்பெடுக்க வேண்டும் எனவும் இந்தியா விரும்பியதாக ராஜபக்ஷ முன்னர் தெரிவித்திருந்தார்.

''சீன நிதியில் மேற்கொள்ளப்படும் அனைத்துக் கட்டுமானத் திட்டங்களும் நிறுத்தப்பட வேண்டும். அத்துடன், அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை இலங்கை தனது முழுக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்'' என்பதையே இந்தியா விரும்புகிறது என்று இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் தன்னிடம் தெரிவித்தார் என்று ராஜபக்ஷ குறிப்பிட்டிருந்தார்.

''இலங்கை ஒரு சிறிய நாடு, ஆகவே இந்தச் சிறிய நாட்டுக்கு இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்கள் தேவையில்லை'' என்று டோவல் தெரிவித்தார் என்று ராஜபக்ஷ கூறியிருந்தார்.

அம்பாந்தோட்டை மற்றும் கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் ஆகியன மட்டும் சர்ச்சைக்குரிய விடயங்களல்ல.

திருகோணமலையில் அமெரிக்கா தனது கடற்படைத் தளம் ஒன்றை உருவாக்குவதில் ஆர்வமாக உள்ளது என்று லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான திஸ்ஸவிதாரண உறுதிப்படுத்திய போது, இவர் நாட்டின் எந்தவொரு இரகசியத்தையும் வெளியிடவில்லை.

தென் சீனா மற்றும் கிழக்குச் சீனக் கடல்களில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்தமை, அமெரிக்காவில் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ரொனால்ட் ட்ரம்ப் - தாய்வான் அதிபருடன் தொலைபேசியில் உரையாடியமை, அமெரிக்காவின் ஆளில்லா விமானத்தை சீனா கைப்பற்றியமை போன்ற பல்வேறு விடயங்கள் திருகோணமலை மீதான அமெரிக்காவின் ஆர்வம் அதிகரிக்கத் துணைபோயின.

ஆனால், இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் அதிகரித்துவரும் சீனாவை எதிர்த்து நிற்கக் கூடிய ஒரேயொரு பிராந்திய நாடாக விளங்கும் இந்தியாவுடன் பகைமையை வளர்க்கக் கூடாது என்பதற்காகவே அமெரிக்கா வெளிப்படையாக இலங்கையின் இறைமையில் தலையீடு செய்யாதிருக்கலாம்.

இந்திய மாக்கடலில் சுதந்திரமான கடற்போக்குவரத்தை உறுதிப்படுத்துவதற்குஇலங்கை ஓர் அனுசரணையாளராகவும் ஒருங்கிணைப்பாளராகவும் இருக்க முடியும் என்று அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்காவின் பசுபிக் கட்டளைத் தளபதி அட்மிரல் பிங்க்லி ஹரிஸ், அதிபர் சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஏனைய பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடத்திய பின்னர் தெரிவித்திருந்தார்.

இந்திய - ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் பூகோள செயற்பாட்டு முறைமையை அடிப்படையாகக் கொண்ட சட்டங்களை மேலும் மேம்படுத்துவதற்கு ஒத்த கருத்துக்களைக் கொண்ட நாடுகளுக்கு இடையில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதன் முக்கியத்துவத்தையும் இலங்கை புரிந்து கொண்டு பங்களிப்பதை வரவேற்பதாகவும் பசுபிக் கட்டளைத் தளபதி தெரிவித்தார் என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இதையே சிலர் 2017 இல் நடைபெறவுள்ள மலபார் இராணுவப் பயிற்சி நடவடிக்கையில் இந்திய, அமெரிக்க, ஜப்பானியக் கடற்படையினருடன் இணைந்து இலங்கையும் ஈடுபடப் போகிறது என்று தெரிவித்திருந்தனர்.

''நாங்கள் 21 ஆவது மலபார் பயிற்சி நடவடிக்கையை மேலும் விரிவுபடுத்த விரும்புகிறோம்'' என்று அமெரிக்காவின் ஏழாவது கடற்பிரிவின் துணை அட்மிரல் ஜோசப் பி ஒகொய்ன், அண்மையில் தெரிவித்திருந்தார். இலங்கைக்கு ஐந்து நாள் பயணத்தை மேற்கொண்ட இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் சுனில் லம்பாவுடனான சந்திப்பின் பின்னர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

''நீர்மூழ்கி எதிர்ப்பு போர் முறையானது மிகவும் பயனுள்ளதாக அமையும் என்று நான் நினைக்கிறேன். இந்தியக் கடற்படையுடன் இணைந்து p-81 பொசெய்டன் நீண்டதூர கடற் கண்காணிப்பு வான்கலம் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுகிறது. இவை இரண்டும் இணைந்து நீர்மூழ்கிக் கப்பல்களை வேட்டையாட முடியும்'' என்று துணை அட்மிரல் ஜோசப்பி. ஒகொய்ன் தெரிவித்திருந்தார்.

இந்தியப் பிராந்தியக் கடற்பரப்பில் அடிக்கடி சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் தரித்து நிற்பதுடன் வைத்துப் பார்க்கும் போது, இந்தப் பிராந்தியத்தில் நீர்மூழ்கி எதிர்ப்புப் போர் முறைகளை புதுப்பிக்க வேண்டும் என்னும் அட்மிரல் ஹரிஸின் வலியுறுத்தலில் எவ்வித ஒளிவு மறைவையும் காண முடியாது.

பராக் ஒபாமாவின் இரண்டாம் ஆட்சிக் காலத்தில் ஜோன் கெரி அமெரிக்காவின் இராஜாங்கச் செயலராகப் பதவியேற்பதற்கு முன்னர், செனற்றின் வெளியுறவுக் குழுவின் அறிக்கையை வெளியிடும் ஆசிரியர் குழுவில் அங்கம் வகித்திருந்த போது அமெரிக்காவின் இலங்கை மீதான பூகோள - கேந்திர முக்கியத்துவம் தொடர்பாக குறிப்பிட்டிருந்தார்.

அமெரிக்காவை ஆட்சி செய்யவுள்ள ட்ரம்ப் நிர்வாகமானது இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை மீதான அமெரிக்காவின் நலன்களைக் கண்டறியுமானால், இலங்கை ஆசியாவுக்கான அடுத்த முக்கியத்துவம் மிக்க மையமாக மாற முடியும். இது உண்மையான விடயமாகும்.

இந்திய மாக்கடலில் அமெரிக்காவானது 'அறைக்குள் அகப்பட்ட யானை' போன்று இக்கட்டான சூழலில் மாட்டியுள்ளது என்று விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். உலக ஏகாதிபத்திய நாடான அமெரிக்காவானது இந்திய மாக் கடலில் தன்னை நிலை நிறுத்த வேண்டியதன் உண்மைத் தன்மை அறிந்து கொள்ளப்பட வேண்டும் என்னும் கருத்திலேயே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான சிறிய நாடு - பெரிய நாடு உறவு நிலையானது, இலங்கை எந்தவொரு சூழ்நிலையிலும் தனது இறையாண்மையை உறுதிப்படுத்துவதற்கு தன்னிச்சையாக இந்தியாவை ஒருபோதும் உதறித்தள்ளாது என்பதையே சுட்டி நிற்கிறது.

இலங்கை எப்போதும் கடல் சார் நடவடிக்கைகள் தொடர்பில் தங்கிவாழும் ஒரு நாடாகும் என்று சில அறிக்கைகள் சுட்டிநிற்கின்றன. இலங்கையில் இடம்பெற்ற நீண்ட கால யுத்தத்தின் விளைவாகவே இதன் கடல் சார் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டன என்று ஏனைய ஊடகங்கள் கூறுகின்றன.

யாழ்ப்பாணத்தில் இந்திய விமானங்களால் உணவுப் பொதிகள் வீசப்பட்ட இந்தியாவின் கழுகு நடவடிக்கையானது (ஒப்பரேசன் EAGLE) தனது இறையாண்மை மற்றும் ஒருமைப்பாட்டுக்குக் களங்கம் விளைவித்தது என்று இலங்கை பகிரங்கமாகக் கண்டனம் தெரிவித்தது.

ஆயுதம் தாங்கிய யாழ்ப்பாண தமிழ் இளைஞர்களிடமிருந்து அப்துல் கயூமை விடுவிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட கக்ரஸ் (Cactus) நடவடிக்கைக்கு மாலைதீவு நன்றியுணர்வை வெளிப்படுத்தியது. ஆனால் அவ்வாறு இலங்கை நன்றி பாராட்டவில்லை. இந்திய அமைதி காக்கும் படையால் முன்னெடுக்கப்பட்ட பவான் இராணுவ நடவடிக்கையின் (ஒப்பரேசன் Pawan) துன்பகரமான முடிவானது சிலருக்கு குறிப்பாகப் பௌத்த - சிங்கள இனவாதிகளுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கத் தவறியிருக்க மாட்டாது.

இலங்கை அரசு தனது நாட்டின் தென்முனையிலுள்ள அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் 80 சதவீதத்தை விற்க விரும்புகிறது. ஆனால், இது பொருளாதார நோக்கத்துடனேயே இதனை மேற்கொள்கிறதே அன்றி அரசியல் காரணத்துக்காக இல்லை.

ராஜபக்ஷ அரசில் அங்கம் வகித்த இடதுசாரி அமைச்சர் ஒருவர் அம்பாந்தோட்டை வழக்கை உச்ச நீதிமன்றுக்கு மாற்றுவதை எதிர்த்து அச்சுறுத்தல் விடுத்தமை, உள்நாட்டு அரசியல் பகைமையாகவே கருத முடியும். இதுபோன்ற சம்பவமே நீண்ட காலத்துக்கு முன்னர் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கத்தில் இலங்கையை ஸ்தாபக உறுப்பினராக இணையுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்றுக்கொள்வதற்குத் தடையாக இருந்தது.

ஆசிய உறுப்பு நாடாவதன் மூலம் இலங்கை, தெளிவாக வரையறுக்கப்பட்ட ஆசியாவின் அடையாளமாக மாற விரும்பலாம். பதிலாக, இது இந்தியாவின் நிழலாகவே தொடர்ந்தும் இருக்க வேண்டிய நிலையில் உள்ளது என்று உணர்கிறது. தற்போதும் இந்தச் சிறிய தேசமானது இந்தப் பூமியின் தலை விதியைத் தீர்மானிக்கும் ஒரு நாடாக வேண்டுமென ஏங்குகிறது.

★★★★★★★★★★★★★★

(தமிழாக்கம்- நித்தியபாரதி, நன்றி: புதினப்பலகை)

# இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் புதிய தலைவராகும் வாய்ப்பு கங்குலிக்கு!



புதுடில்லி, ஜன.04

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் புதிய தலைவராகும் வாய்ப்பு இந்திய அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலிக்கு இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின் படி, புதிய தலைவரை தேர்வு செய்யும் வரை, பி.சி.சி.ஐ. மூத்த துணைத் தலைவர் ஒருவர், தற்காலிக தலைவராகச் செயற்படவுள்ளார்.

இவர், லோதா குழு பரிந்துரைக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். அதாவது 70 வயதுக்கு மேற்படா தவராகவும், பி.சி.சி.ஐ. நிர்வாகத்தில் வேறு எந்த ஒரு பொறுப்பில் இல்லா தவராகவும் இருக்கவேண்டும். மேலும், அரசியல் வாதி அல்லது அரசு பணியாளராக இல்லாமல் இருக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, பி.சி.சி.ஐ. தலைவராகும் வாய்ப்பு பெங்கால் கிரிக்கெட் சங்க தலைவரும், முன்னாள் தலைவருமான சௌரவ் கங்குலிக்கு இருப்பதாக கூறப்படுகிறது.


இதேபோல், லோதா குழு பரிந்துரைக்கு உட்பட்டு துணை தலைவர்களாக உள்ள மாத்யூ (மேற்கு மண்டலம்), கௌதம் ராய் (கிழக்கு மண்டலம்) ஆகியோருடன் முன்னாள் வீரர்களான கவாஸ்கர், மொகிந்தர் அமர்நாத் உள்ளிட்டோருக்கும் தலைவராகும் வாய்ப்பு உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பி.சி.சி.ஐ. அல்லது மாநில கிரிக்கெட் சங்க நிர்வாகத்தில் பதவி வகிப்பவர்கள் 70 வயதுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும் என்ற லோதா குழு பரிந்துரையை உடனடியாக அமுல்படுத்த வேண்டும் எனவும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதனால், தமிழக கிரிக்கெட் சங்கத் தலைவராக பதவி வகிக்கும் சீனிவாசன், நிரஞ்சன் ஷா, பரூக் அப்துல்லா உள்ளிட்ட மூத்த நிர்வாகிகள் தாங்கள் பதவிகளை பி.சி.சி.ஐ. அல்லது மாநில கிரிக்கெட் சங்கப் பதவிகளில் இருந்து உடனடியாக விலக வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், பி.சி.சி.ஐ. செயலாளர் பதவியில் இருந்து நீக்கியது குறித்து அஜய் ஷிர்கே தெரிவித் தவை வருமாறு:-

''பி.சி.சி.ஐ. செயலாளர் பதவியில் இருந்து நீக்கப் பட்டது கவலை இல்லை. இதன்மூலம் பி.சி.சி.ஐயில் எனது பங்களிப்பு முடிவுக்கு வந்தது. பதவிகள் மீது எனக்கு ஆசை இல்லை. இந்த விவகாரம் என்னையோ அல்லது தலைவரையோ சார்ந்தது அல்ல. பி.சி.சி.ஐயின் ஒட்டு மொத்த உறுப்பினர்களைச் சார்ந்தது. தற்போது நிலவி வரும் சூழ்நிலையால் இந்திய கிரிக்கெட்டுக்குப் பாதிப்பு ஏற்படாது'' என்றும் தெரிவித்துள்ளார். (க)

# தனிப்பட்ட போராட்டம் அல்ல!



*அனுராக் கூறுகிறார்*

புதுடில்லி, ஜன.04

என்னைப் பொறுத்தவரை இது தனிப்பட்ட போராட்டம் அல்ல. இது விளையாட்டு அமைப்புக்கான சுயாட்சி குறித்த போராட்டம் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முன்னாள் தலைவர் அனுராக் தாகூர் கூறியுள்ளார்.

தலைவர் பதவியில் இருந்து நீக்கம் செய்யப் பட்டமை குறித்து அனுராக் தாகூர் தெரிவித்தவை வருமாறு:-

என்னைப் பொறுத்தவரை இது தனிப்பட்ட போராட்டம் அல்ல. இது விளையாட்டு அமைப்புக்கான சுயாட்சி குறித்த போராட்டமாகும். எல்லா குடிமகன்களையும் போல் நானும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மதிக்கிறேன்.

ஓய்வு பெற்ற நீதிபதிகளின் மேற்பார்வையில் இந்திய கிரிக்கெட் சபை சிறப்பாக செயல்படும் என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கருதினால் அதற்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களின் வழிகாட்டுதலில் இந்தியக் கிரிக்கெட் சபை சிறப்பாகச் செயல்படும் என்று நான் நம்புகிறேன்.

இந்தியக் கிரிக்கெட்டின் நலன், விளையாட்டு அமைப்பின் சுயாட்சி ஆகியவை குறித்த எனது அர்ப்பணிப்பு எப்பொழுதும் நிலைத்து இருக்கும். இந்திய கிரிக்கெட்டுக்கு சேவையாற்றியதைக் கௌரவமாகக் கருதுகிறேன். இந்திய கிரிக்கெட் சபை நிர்வாகம் உலகளவில் சிறப்பு வாய்ந்ததாக உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (க)

# வெற்றிக்கு வித்திட்டார் சங்கக்கார!


மெல்போர்ன், ஜன.04

ஆஸ்திரேலியாவில் நடக்கும் பிக் பாஷ் இருபதுக்கு 20 தொடர் இடம் பெற்று வருகிறது.

இத் தொடரின் போட்டி ஒன்றில், ஹொபார்ட் ஹரிகேன்ஸ் அணி, அடிலெய்ட் ஸ்டைர்கர்ஸ் அணியை 8 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

கடைசி ஓவரில் அதிரடி காட்டி அணியை வெற்றி பெறவைத்த சங்கக்கார 22 ஓட்டங்களும், டி ஆர்சி ஷாட் 60 ஓட்டங்களையும் குவித்தனர். (க)

# பாகிஸ்தான் நடுவர் அலீம் தார் சாதனை!



இஸ்லாமாபாத், ஜன.04

பாகிஸ்தானின் நடுவர் அலீம் தார் அதிக டெஸ்ட் போட்டிகளில் நடுவராகப் பணியாற்றியவர் என்ற சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையில் கேப் டவுனில் நடைபெறும் டெஸ்ட் போட்டி, அவர் மத்தியஸ்தம் வகிக்கும் 332 ஆவது போட்டியாகும்.

அலீம் தார் 2000ஆம் ஆண்டு முதன் முதலில் டெஸ்ட் போட்டி ஒன்றில் நடுவராகப் கடமையாற்றியிருந்தார்.

இதற்கு முன்னர் அதிக டெஸ்ட்களில் நடுவராகப் பணியாற்றியவர் தென்னாபிரிக்காவின் ரூடி கோர்ட்சன் ஆவார். இவர் 331 டெஸ்ட் போட்டிகளில் நடுவராகப் பணியாற்றியதுடன், 2010 இல் ஓய்வு பெற்றார். (க)

# மன்னார் சிகை அலங்கரிப்பாளர் சங்க கழகத்துக்கு அமைச்சர் டெனிஸ்வரன் சீருடைகளை வழங்கினார்



மன்னார், ஜன.04

மன்னார் மாவட்டச் சிகை அலங்கரிப்பாளர் சங்க விளையாட்டு கழகத்திற்கு வடமாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன் விளையாட்டுச் சீருடைகளை வழங்கியுள்ளார்.

2016 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியில் இருந்து ரூபா 30 ஆயிரம் பெறுமதியான விளையாட்டு சீருடைகளை அவர் வழங்கியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் மன்னாரில் அமைந்துள்ள அமைச்சரின் உப அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வின்போதே இந்தச் சீருடைகள் வழங்கப் பட்டுள்ளன.

பலகாலமாக இயங்கி வரும் இவ் விளையாட்டுக் கழகம், இதுவரை காலமும் விளையாட்டுச் சீருடையின்றி போட்டிகளில் பங்குபற்றிவந்துள்ளது.

இந்த விடயம் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதுடன், அதற்கான கோரிக்கையும் சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தினரால் முன் வைக்கப்பட்டது.

அவர்களது கோரிக்கையை ஏற்று அமைச்சர் டெனிஸ்வரனால் இந்த உதவித்திட்டம் வழங்கப் பட்டுள்ளது. (க)

# போர்னா கோரிச் அதிர்ச்சி தோல்வி!

சென்னை, ஜன.04

சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தில் குரோஷியா வீரர் போர்னா கோரிச் அதிர்ச்சித் தோல்வி கண்டு வெளியேறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஒற்றையர் பிரிவில் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் குரோஷிய வீரர் போர்னா கோரிச், தென் கொரிய வீரர் ஹியோன் சங்கைச் சந்தித்தார்.

கடந்த ஆண்டுப் போட்டியில் இறுதி ஆட்டத்துக்கு முன்னேறிய குரோஷியா வீரர் போர்னா, இந்த முறையும் ரசிகர்களுக்கு விருந்து படைப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், போர்னா கோரிச் 3-6, 5-7 என்ற நேர்செட்டில் ஹியோன் சங்கிடம் அதிர்ச்சித் தோல்வி கண்டு வெளியேறியுள்ளார். (க)



# இலங்கையை 110 ஓட்டங்களில் சுருட்டியது தென்னாபிரிக்கா

இலங்கை - தென்னாபிரிக்கா அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் நேற்று முன்தினம் கேப்டவுனில் தொடங்கியது.

முதல்நாள் ஆட்ட நேர முடிவில் தென்னாபிரிக்க அணி 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 297 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தில் தனது முதல் இன்னிங்ஸைத் தொடர்வதற்காக டி கொக் மற்றும் அபொட் ஆகியோர் களமிறங்கினர்.

16 ஓட்டங்களைப் பெற்றிருந்த அபொட்டை ஹேரத் தனது பந்துவீச்சில் வெளியேற்றினார்.

முதல் நாள் ஆட்டநேர முடிவில் 68 ஓட்டங்களை எடுத்திருந்த டி கொக் மொத்தமாக 124 பந்துகளைச் சந்தித்து 101 ஓட்டங்களுடன் குமாரவின் பந்தில் சந்திமாலிடம் பிடிகொடுத்தார்.

அவரைத் தொடர்ந்து



பிளேண்டரும் 20 ஓட்டங்களுடன் குமாரவின் பந்தில் சந்திமாலிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

இறுதியாக ரபாடா 8 ஓட்டங்களுடன் குமாரவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தென்னாபிரிக்க அணி தனது முதல் இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து392 ஓட்டங்களை எடுத்தது.

நேற்று குமார 3 விக்கெட்டுக்களையும், ஹேரத் ஒரு விக்கெடையும் கைப்பற்றினர்.

தனது முதல் இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாட இலங்கை அணியின் வீரர்கள் கருணாரட்ண மற்றும் சில்வா ஆகியோர் களமிறங்கினர்.

சில்வா 39 பந்துகளில் 11 ஓட்டங்களை எடுத்து ரபாடாவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த மெண்டிஸை மகாராஜ் 11 ஓட்டங்களுடன் வெளியேற்றினார்.

கருணாரட்ண 76 பந்துகளுக்கு முகம் கொடுத்து 24 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் ரபாடாவின் பந்தில் பவுமாவிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

டி சில்வா 16 ஓட்டங்களுடன் மகாராஜ்ஜின் பந்தில் எல்.பி. டபிள்யூ ஆனார்.

அணித் தலைவர் மத்தியூஸ் 17 பந்துகளைச் சந்தித்து 2 ஓட்டங்களை மாத்திரமே பெற்ற நிலையில் ரபாடாவின் பந்தில் வெளியேறினார்.

தொடர்ந்து சந்திமல் 4 ஓட்டங்களுடனும், ஹேரத் ஒரு ஓட்டத்துடனும், குமார 4 ஓட்டங்களுடனும் லக்மால் மற்றும் ப்ரதீப் ஆகியோர் ஓட்டங்கள் எவற்றையும் பெறாமலும் ஆட்டமிழந்தனர்.

இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 110 ஓட்டங்களையே பெற்றது.

தரங்க 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் பிளேண்டர் மற்றும் ரபாடா ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களையும், மகாராஜ் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தென்னாபிரிக்க அணி தனது இரண்டாம் இன்னிங்ஸைத் தொடங்கியது.

# பாகிஸ்தானுக்கு எதிரான 3 ஆவது டெஸ்ட்: ஆஸ்திரேலியாவின் வோர்னர் அதிரடி சதம்!

சிட்னி, ஜன.04

பாகிஸ்தானுக்கு எதிரான 3 ஆவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா அணியின் தொடக்க வீரர் டேவிட் வோர்னர் சதம் அடித்து அசத்தியுள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் ஆஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் செய்து 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகிறது.

இதில் முதல் 2 டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்றுத் தொடரை கைப்பற்றிவிட்டது.

ஆஸ்திரேலியா- பாகிஸ்தான் அணிகள் மோதும் 3 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நேற்று சிட்னியில் தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற ஆஸ்திரேலியா துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.



தொடக்க வீரர்களாக டேவிட் வோர்னர், மெட் ரென்சவ் களம் இறங்கினார்கள்.

டேவிட் வோர்னர் அதிரடி ஆட்டத்தில் ஈடுபட்டார். 42 பந்தில் அரைச் சதம் அடித்த அவர் 78 பந்தில் சதம் அடித்து அசத்தினார். இதில் 17 பவுண்டரி அடங்கும்.

60 ஆவது டெஸ்ட் போட்டியில் அவர் பெற்ற 18 ஆவது சதம் இதுவாகும். மதிய உணவு இடைவேளைக்கு முன்பே அவர் சதம் அடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

டேவிட் வோனர் 113 ஓட்டத்தில் (95 பந்து) ஆட்டமிழந்தார். அடுத்து களம் வந்த கவாஜா 13 ஓட்டங்களில் வெளியேறினார். ரென்சவ்-அணித் தலைவர் சுமித் ஜோடி சிறப்பாக விளையாடியது. ரென்சவ் சதத்தை நோக்கி சென்றார். ஆஸ்திரேலியா 59 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 243 ஓட்டங்களை எடுத்து இருந்தது.

மதிய உணவு இடைவேளைக்கு முன்பு சதம் அடித்த 2 ஆவது ஆஸ்திரேலிய வீரர் என்ற பெருமையையும் வோர்னர் பெற்றுள்ளார்.

இதற்கு முன்பு கிரிக்கெட் ஜாம்பவான் பிராட்மேன் 1930 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக லீட்ஸ் மைதானத் தில் உணவு இடைவேளைக்கு முன்பு சதம் அடித்து இருந்தார்.

போட்டியின் 88 ஆவது ஓவரில் ஆஸ்திரேலியா அணி மூன்று விக்கெட்டுகள் இழப்புக்கு 365 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.



## போராடி வென்றார் ஜோகோவிச்

டோஹா, ஜன.04

கட்டார் தலைநகர் டோஹாவில், கட்டார் ஓபன் டென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது.


இதில் நேற்று அதிகாலை நடந்த ஆண்கள் ஒற்றையர் முதல் சுற்று போட்டியில், உலகின் 2 ஆம் நிலை வீரரான செர்பியாவின் நோவாக் ஜோகோவிச் 63 ஆம் நிலை வீரரான ஜேர்மனியின் ஜோன் லென்னர்ட் ஸ்ட்ரப் மோதினர்.

இதில், 7-6 (7/1), 6-2 என்ற செட் கணக்கில் ஜோகோவிச் வெற்றி பெற்றார். இந்த ஆட்டத்தின் தொடக்கத்தில் சற்றே தடுமாறிய ஜோகோவிச், அதன்பின் சுதாரித்து விளையாடி வெற்றியை வசப்படுத்தினார்.

இந்த ஆண்டில் ஜோகோவிச் விளையாடிய முதல் போட்டி இது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்தாண்டின் 2 ஆவது பாதி சீசனில், ஜோகோவிச்சை பின்னுக்கு தள்ளி, பிரிட்டனின் அன்டி முர்ரே முதலிடத்தைக் கைப்பற்றினார். தற்போது மீண்டும் முதலிடத்தைக் கைப்பற்ற ஜோகோவிச் முயன்று வருகிறார். அன்டி முர்ரேவும் கட்டார் ஓபனில் கலந்து கொண்டிருக்கிறார். அவர் தனது முதல் சுற்று போட்டியில், பிரான்ஸின் ஜெர்மி சார்டியை எதிர்கொள்கிறார்.

## சர்வதேச ரீதியில் யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் வெள்ளிப் பதக்கம் வென்றார்



யாழ்ப்பாணம், ஜன.04

சர்வதேச ரீதியில் இடம்பெற்ற பளுதூக்கும் போட்டியில் இந்துக் கல்லூரி மாணவன் எ.எட்டின்வூட் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

மலேசியாவின் கோலாலம்பூர் நகரில் நடைபெற்ற தென்னாசிய நாடுகளுக்கு இடையிலான பளுதூக்கும் போட்டியில் 205 கிலோகிராம் நிறையைத் தூக்கி எ.எட்டின்வூட் வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளார். இதன்மூலம் அவர் யாழ். இந்துக் கல்லூரிக்கும் இலங்கைக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

20 வயதின் கீழ்ப் பிரிவில் 85 கிலோகிராம் எடைப் பிரிவில் பங்குபற்றிய இவர் 'Snatch' முறையில் 95 கிலோகிராமும் 'Clean and Jerk' முறையில் 110 கிலோகிராமும் ஆக மொத்தம் 205 கிலோகிராம் எடையை தூக்கியுள்ளார்.

இந்த மாணவனுக்கான பயிற்சிகளை செ.திருமாறன் வழங்கி இருந்தார்.

# பலாலி வடக்கு கடற்றொழிலாளருக்கு மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்பட்டது

அச்சுவேலி ஜன.04

பலாலிவடக்கில்மீள்குடியேற்ற அமைச்சின் 3 இலட்சத்து 48 ஆயிரம் ரூபா செலவில் பலாலி வடக்கில் தற்காலிகமாக மீன்பிடித்துறைஒன்றுஅமைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி பிரதேசத்தில் மீள்குடியேறியுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாகவேஇந்தமீன்பிடித்துறைமுகம் அமைக்கப்பட்டுள்ளது.

பலாலி வடக்கு கடந்த வருட இறுதியில் படையினரால் விடுவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து அங்குள்ள அன்ரனிபுரத்தில் 30 குடும்பங்களும் கடற்ரையின் தெற்கு பக்கம் அரச காணியில் 107 குடும்பங்களுமாக தற்போது 137 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன. அவர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுஅவைகட்டிமுடிக்கப்பட்டுள்ளன.

அவர்கள் கடற்றொழிலை மேற்கொள்வதற்கு துறைமுகம் இல்லாதது பெரும் குறையாக இருந்தது. இது தொடர்பாக அவர்கள் வலி.வடக்கு பிரதேச செயலாளரிடம் தெரியப்படுத்தினர். அவசரமாக தங்களுக்கு துறைமுகம் ஒன்றை அமைத்து தருமாறு அவர்கள் அவரிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

இந்தக்கோரிக்கையின்நிமித்தம் அவர்களுக்கு துறைமுகம் அமைத்துக் கொடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அடுத்த கட்டமாக அவர்களுக்கு கடற்றொழில் உபகரணங்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-09)

# பன்னிருவர் தொடர்பான ஆள்கொணர்வு மனு; முல்லைத்தீவு நீதிமன்றில் நேற்று விசாரணை

முல்லைத்தீவு, ஜன.04

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது படையினரிடம் சரணடைந்த பின்னர் காணாமற்போனவர்கள்என்றுகருதப்படும்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர்எழிலன்(சின்னத்துரைசசிதரன்)மற்றும் வண. பிதா ஜோசப் பிரான்ஸிஸ் ஆகியோர் உட்பட பன்னிரண்டு பேர் தொடர்பான ஆள் கொணர்வு மனுக்கள் தொடர்பிலான விசாரணைகள் நேற்று முல்லைத்தீவுநீதிவான்நீதிமன்றில் நீதிவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன் முன்னிலையில் நடைபெற்றன.

கடைசியாக செப்ரெம்பர் 29 ஆம் திகதி இடம்பெற்ற விசாரணையின்போது, முன்னர் 58 ஆவது படைப்பிரிவின் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சானக்க குணவர்த்தனவை மனு தாரர் தரப்பு சட்டத்தரணி கே. எஸ்.இரத்தினவேல் குறுக்கு விசாரணை செய்திருந்தார். நேற்றும் அவர் தொடர்ந்து குறுக்கு விசாரணைகளை மேற்கொண்டார்.

சரணடைந்த போராளிகளின் பட்டியலைத் தாம் நீதிமன்றில் சமர்ப்பிப்பார் என பெப்ரவரி மாத விசாரணையின்போது தெரிவித்த இராணுவ அதிகாரி தற்போது புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகளின் பட்டியலையே நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறார் என மனுதாரர் தரப்பு சட்டத்தரணி இரத்தினவேல் நீதிமன்றுக்குத் தெரிவித்தார்.

ஆனால், அதை மறுத்த இராணுவ ஜெனரல் குணவர்த்தனா, புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் பட்டியலே தங்களிடம் உள்ளதாகவும், அதையே தாம் முன்னரும் குறிப்பிட்டார் எனவும் தெரிவித்தார்.

வழக்கு விசாரணை ஜனவரி 30ஆம்திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (உ-81)

## தாலி திருடியவருக்கு பிணை

யாழ்ப்பாணம், ஜன. 04

சுன்னாகம் மயிலினிப் பகுதியில் பெண் ஒருவரின் 4 பவுண் தாலிக்கொடியைத் திருடினார் என்றுகைதுசெய்யப்பட்டபெண்ணின் சகோதரன் 75ஆயிரம் ரூபாபெறுமதியானசரீரப்பிணையில் நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பெண் ஒருவர் தனது தாலிக் கொடிதிருட்டுப்போயுள்ளதுஎன கடந்த ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் பொலிஸில்முறைப்பாடு செய்தமையைத் தொடர்ந்து பெண்ணின் சகோதரனை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைதுசெய்து விசாரித்தனர்.

குற்றத்தை ஒப்புக் கொண்ட சந்தேகநபர் நேற்று முன்தினம் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோதே அவரை 75ஆயிரம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில்செல்வதற்கு மல்லாகம்நீதிவான்ஏ.யூட்சன்அனுமதியளித்தார்.

அத்துடன்எதிர்வரும்9ஆம்திகதி சந்தேக நபருக்கு எதிராகக் குற்றப்பத்திரத்தைத் தாக்கல் செய்யுமாறும் சுன்னாகம் பொலிஸாருக்கு நீதிவான் கட்டளையிட்டார்.

# திருநெல்வேலியில் வீடு புகுந்து திருட்டு; சந்தேகத்தின் பேரில் கரம்பன் நபர் கைது



திருநெல்வேலி ஆடியபாதம் கிழக்கு வீதியில் உள்ள வீடு ஒன்றிற்குள் புகுந்த திருடர்கள் 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான நகை, மற்றும் 6 ஆயிரத்து500ரூபாபணம்என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர் என கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம்திங்கட்கிழமைஅதிகாலை 2.45 மணியளவில் இடம் பெற்றது எனத் தெரியவருகின்றது.

வீட்டுஉரிமையாளர்இயற்கை கடன் கழிப்பதற்கு கதவைத் திறந்துவெளியில்சென்றநேரம் பார்த்து உள்நுழைந்த திருடர்கள் பவுண் காப்பு, இரண்டு சோடி தோடு, 4 பவுண் கைச் செயின், 3 மோதிரம், 46 ஆயிரம் ரூபா பெறுமதியான பென்ரன், மற்றும் 4 பவுண் பெறுமதியான கைவளையல் என்பவற்றைத் திருடிச் சென்றனர் எனத் தெரியவருகின்றது.

இச்சம்பவம்தொடர்பில்கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தது. திருட்டு சம்பவத்துடன் தொடர்புபட்டார் என்றசந்தேகத்தின்பேரில், ஊர்காவற்றுறைகரம்பன்கிழக்கைச் சேர்ந்த இளஞன் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ம-09)

## வேப்பமரம் தறித்த நால்வர் கைது!

கொழும்புத்துறை 3ஆம் குறுக்குத்தெருப்பகுதியில்உள்ள ஆலயக்காணி ஒன்றுக்குள் சட்டவிரோதமான முறையில் 7 வேப்பமரங்களை தறித்த நால்வரைத் தாங்கள் கைது செய்துள்ளனர் என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மேற்படி மரங்களைத் தறிக்கப்பட்டுக் கொண்டிருந்தமை தொடர்பாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து அங்கு சென்ற பொலிஸார் சந்தேக நபர்களைக் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 27வேப்ப மரக் குற்றிகளும் கைபற்றப்பட்டன.

அவர்கள்மரம்வெட்டுவதற்குப் பயன்படுத்திய இயந்திர வாள்கள் - 2, கத்திகள் - 2 என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. (ம-09)

# அரச மதுபானம் விற்ற பெண் நீதிமன்றில் ஆஜர்

ஊர்காவற்றுறை ஜன.09

சீல் செய்யப்பட்ட அரச மதுபானத்தை வீட்டில் வைத்து விற்பனை செய்த புங்குடுதீவு பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவருக்கு 18 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

மேற்படி பெண் நேற்று முன்தினம்திங்கட்கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஏ. எம்.எம்.றியால்முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டபோதே தண்டம் விதிக்கப்பட்டது.

அத்துடன், அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட 15 அரச மது பானப் போத்தல்களையும் அழிப்பதற்கும்நீதிவான்கட்ளை பிறப்பித்தார்.

கடந்த டிசம்பர் மாதம் இறுதியில் புங்குடுதீவுப் பகுதியில் உள்ளவீடுஒன்றில்வைத்துஅரச சாராயத்தை விற்பனை செய்த போது மேற்படிப் பெண்ணை ஊர்காவற்றுறை பொலிஸார் கைது செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-09)

# திருடப்பட்ட தொலைபேசியை பயன்படுத்தியவருக்கு பிணை

அச்சுவேலி ஜன.04

குரும்பசிட்டியில் திருடப்பட்ட கைத்தொலைபேசியைப் பயன்படுத்திய பாணந்துறையைச் சேர்ந்த நபர் ஒருவரைக் கைது செய்த பொலிஸார் அவரை நேற்று மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

அவரை 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆட்பிணையில் விடுவித்த நீதிபதி ஏ.யூட்சன், வழக்கை பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி குரும்பசிட்டி கிழக்கு பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான கைத்தொலைபேசி ஒன்று திருட்டு போயிருந்தது. இது தொடர்பில் கைபேசி உரிமையாளரினால் தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

திருடப்பட்ட தொலைபேசியின் இலக்கத்தை வைத்து விசாரணைகளை மேற்கொண்ட தெல்லிப்பழை பொலிஸார், அந்த தொலைபேசியை பாணந்துறையச் சேர்ந்த நபர் ஒருவர் பயன்படுத்துவதைக்கண்டுபிடித்தனர்.

அவரைத் தொடர்புகொண்ட பொலிஸார் யாழ்ப்பாணத்திற்கு வரவழைத்துக் கைதுசெய்து நேற்றுமுன்தினம்திங்கட்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். (ம-09)

# கடனை மீளச் செலுத்த முடியாத பெண்மணி உயிரை மாய்த்தார்

## நிதி நிறுவனங்களின் அழுத்தமே!

முல்லைத்தீவு, ஜன.04

மூன்று நிதி நிறுவனங்களில் கடன் பெற்றுக்கொண்ட பெண்ணொருவர் அதனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில், அந்த நிறுவனங்களின் அழுத்தங்களைத் தாங்க முடியாமல் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முல்லைத்தீவு இளங்கோபுரம் மூன்றாம் திட்டம் தேரா வில் பகுதியில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த அம் பிகைபாகன் ஜெகதீஸ்வரி (வயது 32) என்பவரே மரணமடைந்தார். இவருக்கு 8 வயதில் ஒரு மகனும் 12 மற்றும் 3 வயதுகளில் இருபெண் பிள்ளைகளும் உள்ளனர்.

தற்கொலை செய்வதற்கு முன்னர், அவர் எழுதியதாகக் கருதப்படும் கடிதம் ஒன்றும் அவர்களின் வீட்டில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. அதில், தன்னைக் கணவன் கைவிட்டுச் சென்றுள்ளார் என்றும் தனது இறுதிக் கிரியைகள் முடிந்த பின்னர் தனது பிள்ளைகளைச் சிறுவர் விடுதி ஒன்றில்சேர்க்குமாறும்குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தனது பெயரில் உள்ள காணியை விற்றுவிட்டு தான் பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்துமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மரணம் தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் தென்னிலங்கையில் இருந்து வடக்கில் தமது அலுவலகங்களைத் திறந்துள்ள நிதிநிறுவனங்களால் கிராமப் புறங்களில் உள்ள, கஷ்டப்பட்ட மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளனர்.

கிராமங்களைத் தேடிச் செல்லும் இவர்கள் பாமர மக்களுக்கு ஆசைகாட்டி அவர்களைக் கடன் பெறவைத்துவிட்டு அதனைமீள அறவிடும்போது அவர்களை அவமானப்படுத்தும் வகையில் அநாகரிகமான வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றனர். இதனால் அவர்கள் மனஉளைச்சல்களுக்கு உள்ளாகி தவறான முடிவுகளை எடுக்கின்றனர் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த விடயத்தில் அரச அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பலர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ம-70)

# 12 வயதுச் சிறுமி மீது துஷ்பிரயோக முயற்சி: நோர்வே பிரஜையும் சிறுமியின் தாயும் கைது

வவுனியாவில் 12 வயதுச் சிறுமி ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்த முயன்றார் என்ற சந்தேகத்தில், நோர்வே பிரஜாவுரிமை பெற்ற 28 வயதுடைய இளைஞர் ஒருவரும், அதற்கு உடந்தையாகச் செயற்பட்டார் என்ற சந்தேகத்தில் சிறுமியின் தாயாரும் பொலிஸாரால்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது எனத் தெரியவருகின்றது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா ஆச்சிகுளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வசிக்கும் குடும்பத்துடன் நட்பைப் பேணிய மேற்படி நோர்வே பிரஜை அங்கு வீட்டில் எவரும் இல்லாதவேளை அங்குசென்று சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயன்றார் என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பாக சிறுமியின் மூத்த சகோதரி வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்தார். அந்தமுறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளைமேற்கொண்டபொலிஸார் சந்தேக நபரான இளைஞரையும் சிறுமியின் தாயாரையும் (வயது 41) கைது செய்தனர்.

அவர்கள்இருவரும்வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது, நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். சிறுமி மருத்துவ பரிசோதனைகளுக்காக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (ம-100)

காலைக்கதிர் Kalaikkathir

# ஊடகவியலாளரின் வீட்டில் திருட்டு

முல்லைத்தீவு–விசுவமடுவில் ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டுக்குள்புகுந்ததிருடர்கள் அங்கு அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த நகை, பணம் என்பவற்றைத் திருடிக்கொண்டு தப்பிச் சென்றனர். இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற் றது.

விசுவமடு இளங்கோபுரம் பகுதியில் வசித்துவரும் சுயாதீன ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டுக்குள் நள்ளிரவு நேரம் சமையலறை புகைக்கூட்டின் வழியாக உள்நுழைந்த திருடர்கள் அங்குள்ள அறை ஒன்றினுள், அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த 15 இற்குமேற்பட்டபவுண்நகைகள், 60 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றை எடுத்துக்கொண்டு கதவைத்திறந்து வெளியேறிச் சென்றனர் எனத் தெரியவருகின் றது.

வீட்டில் உள்ளவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோதே இந்தத் திருட்டு இடம்பெற்றது. இதுதொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் அந்த வீட்டுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். (ம–70)

# அனுமதிப் பத்திரம் பெறாமல் மணல் ஏற்றியவருக்கு அபராதம்!

அச்சுவேலி, ஜன.04

சட்டவிரோதமான முறையில் சிறிய உழவு இயந்திரத்தில் மண் ஏற்றிச்சென்ற, ஆவரங்கால் பகுதியைச்சேர்ந்த ஒருவர்நேற்று முன்தினம் திங்கட்கிழமை மல்லாகம் நீதிமன்றில் நீதிவான் ஏ.யூட்சன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அத்துடன் மண்ணைப் பறிமுதல் செய்யவும் உழவியந்திரத்தைப் பதிவு செய்யப்பட்ட உரிமையாளரிடம் ஒப்படைக்கவும் நீதிமன்றப் பொலிஸாருக்கு நீதிவான் கட்டளை பிறப்பித்தார்.

கடந்த மாதம் 18 ஆம் திகதி அச்சுவேலியில் சந்தேகத்திற்கிடமான முறையில் சென்ற சிறிய உழவு இயந்திரத்தினை அச்சுவேலி பொலிஸார் மறித்து சோதனையிட்டனர். இதன்போது அனுமதிப்பத்திரம் பெறாமல் மண் ஏற்றிச் சென்றமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து பொலிஸார் அவர் மீது வழக்குப் பதிவு செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம–09)

# மலிவாகக் கீரை விற்ற சிறுமி மீது மற்றொரு கீரை வியாபாரி தாக்குதல்

*சாவகச்சேரி சந்தையில் நேற்று சம்பவம்*

சாவகச்சேரி, ஜன.04

சாவகச்சேரி சந்தையில் மலிவு விலையில் கீரை விற்பனையில்ஈடுபட்ட சிறுமிஒருவரை மற்றொரு கீரை வியாபாரியான பெண்ணொருவர்தாக்கிக்காயப்படுத்திய சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமைஇடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பத்தில் பாதிக்கப்பட்ட 14 வயதுச் சிறுமி சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கஷ்டநிலையிலுள்ள குடும்பத்தைச் சேர்ந்த மேற்படி சிறுமி கடந்த சில தினங்களாக சாவகச்சேரிசந்தையில்கீரைவியாபாரத்தில்ஈடுபட்டுவந்தார். ஏனையோர் விற்பனை செய்வதை விட மலிவான விலையிலேயே அவர் கீரை விற்றார் எனத் தெரியவருகின்றது.

அந்தச் சிறுமியின் நிலையை அறிந்த பலரும் அவரிடம் கீரையைப் பெற்றுச் சென்றனர். இதனைப் பொறுக்க முடியாத அங்குள்ளமற்றொருகீரைவியாபாரியான பெண் ஒருவர் சிறுமியை மூர்க்கத்தனமாகத் தாக்கினார் எனத் தெரியவருகின்றது.

அவரின் தாக்குதலால் முகத்தில் காயமடைந்த சிறுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இந்த விடயம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ், சாவகச்சேரி நகரசபைமற்றும்மகளிர்அமைப்புக்களின்கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. (ம–21)

## சுருட்டல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போன்ற மிகவும் ஊழல்மிக்கதே என்றும் அவர் கூறியுள்ளார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

ஊழல் மோசடியில் ஈடுபட்டவர்களுக்குத் தண்டனை பெற்றுக் கொடுப்பதே இந்த அரசின் பிரதான வாக்குறுதியாக இருந்தது. எனினும் ஊழல் மோசடிக்காரர்களுக்குத் தண்டனை வழங்குவதற்குப் பதிலாக, திருடப்பட்ட சொத்துக்களை மீளப் பெற்றுக் கொள்வதற்குப் பதிலாக, திருடர்களின் பாதுகாவலராக இந்த அரசு மாறியுள்ளது. அதேபோல் ஊழல் மோசடிகளில் பங்காளராகியுள்ளது.

தற்போது அரிசி விலை அதிகரித்திருப்பதால் நாட்டில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. வறட்சி நிலைமை காணப்படுவது உண்மை. எனினும் அரிசி விலை அதிகரிப்புக்கான காரணம் அதுவல்ல.

தற்போதைய அரசின் பொருளாதாரக் கொள்கைப்படி அரசு விற்பனை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. அரசு இவ்வாறு விற்பனை செய்வது பொது மக்களின் சொத்துக்களையே. அம்பாந்தோட்டை துறைமுகத்தைக் கட்டுவதற்காகக் கடன் பெற்றனர். அதனை பொது மக்களே செலுத்த வேண்டும்.

அது நிர்மாணிக்கப்பட்டிருப்பதும் மக்களின் நிலத்திலேயே. ஆகவே அதனை விற்பனை செய்யும் அதிகாரம் அரசுக்கு இல்லை. அதன் காரணமாக அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை விற்பனை செய்யும் உடன்படிக்கையை நாட்டுக்கு வெளிப்படுத்துங்கள் என்று நாங்கள் அரசிடம் கூறுகின்றோம். – என்றார்.

# வலி. மேற்கு பிரதேச சபையினால் மூளாய் சந்தை திடீரென மூடப்பட்டது

*வீதியில் வைத்து பொருள்கள் விற்பனை*

வட்டுக்கோட்டை, ஜன.04

வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் மூளாய் சந்தை இழுத்து மூடப்பட்டதால், அந்தச் சந்தை வியாபாரிகளும் பொது மக்களும் நேற்று பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கினர்.

எனினும் வியாபாரிகள் பொருள்களை வீதியில் வைத்து விற்பனை செய்தமையால், சில மணி நேரங்களுக்கு பின்னர் மீண்டும் சந்தைக்குள் சென்று வியாபாரத்தில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டது.

வலி.மேற்குபிரதேசசபையின் பராமரிப்பில் உள்ள மூளாய் பொதுச்சந்தைக்கு சொந்தமாக காணி இல்லாமையால் அது மூளாய் பிள்ளையார் ஆலயத்திற்கு சமீபமாக உள்ள தனியாரின் காணி ஒன்றிலேயே இயங்கி வருகின்றது.

இந்தச் சந்தையில் மரக்கறிகள் மற்றும் கடல் உணவுகளை விற்பனை செய்பவர்களிடம் இருந்து கடந்த பல வருடங்களாக வரி அறவிட்டு வருகின்ற வலி.மேற்கு பிரதேச சபை, தங்களுக்கு ஏற்ற வசதிகளைச் செய்துகொடுக்கவில்லை என்று வியாபாரிகள் குற்றம் சுமத்தினர்.

அந்தச் சந்தைக் காணியை விட்டு வியாபாரிகள் வெளியேற வேண்டும் என கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் தங்களுக்கு பிரதேச சபையால் கூறப்பட்டது என்றும், ஆனால், பிரதேச சபை மாற்றிடத்தை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்றும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

இந்த நிலையில், 'நேற்றுக் காலை அங்கு நாங்கள் வியாபாரம் செய்யச் சென்றபோது சந்தையை மூடிய பிரதேச சபை உத்தியோகத்தர்கள் எங்களை உள்ளே அனுமதிக்கவில்லை. அதனால் நாம் வீதியில் வைத்து மரக்கறிகளையும் கடலுணவுகளையும் விற்பனை செய்தோம்' என்றும் அவர்கள் கூறினர்.

இதனை அறிந்து அங்கு வந்த பிரதேச சபைச் செயலாளர் 15 தினங்களுக்குள் மாற்று இடம் ஒன்றை ஏற்படுத்தித் தருவார் எனக் கூறியதுடன் சந்தைக் காணியைத் திறந்து அங்கு வியாபாரம் செய்ய அனுமதி வழங்கினார் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ம–58)

# வவுனியா விக்ஸ் காடு கிராம மக்கள் அங்கிருந்து உடன் வெளியேற வேண்டும்

*வனவளப் பாதுகாப்பு அதிகாரிகள் உத்தரவு*

வவுனியா, ஜன.04

வவுனியா – இராசேந்திரங்குளம் கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட விக்ஸ் காடு என அழைக்கப்படும் கிராமத்தைச் சேர்ந்த 30 குடும்பங்களை அவ்விடத்தை விட்டு உடனடியாக வெளியேறுமாறு வனவளப் பாதுகாப்பு அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

பல்வேறு இடங்களிலிருந்து யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்து அகதிகளாக வவுனியாவுக்கு வந்த மக்கள் அகதி முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் வசித்து வந்தனர். இவர்கள் பற்றைகளும் முட்செடிகளும் நிறைந்து, விக்ஸ் காடு என அழைக்கப்படும் பிரதேசத்தில், கடந்த 2009 ஆம் ஆண்டு சிறிய காடுகளை வெட்டி நிலத்தை பண்படுத்தி சுயமாக குடியேறியிருந்தார்கள்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் அந்த மக்களுக்கு வாக்குரிமையும் வழங்கப்பட்டுள்ளது.

இங்கு குடியிருக்கும் 30 குடும்பங்களுக்கும் அக் காணிகள் வழங்கப்படும் என அரசியல்வாதிகள், அரச அதிகாரிகளால் உறுதிமொழி வழங்கப்பட்டிருந்ததுடன் அங்குள்ள சில வீடுகளுக்கு மின்சாரமும் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்று முன்தினம் திடீரென அங்கு சென்ற வனத்துறை அதிகாரிகள் அவர்கள் காடுகளை வெட்டிக் குடியேறினார்கள் என்று அச்சுறுத்தியமையுடன் அவர்களை அங்கிருந்து வெளியேறுங்கள் எனவும் உத்தரவிட்டுள்ளனர். (ம–100)

## ஜனாதிபதியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்குரிய ஒழுங்குகளும் முழுமையாகச் செய்யப்பட்டு இருந்தன.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் மற்றும் யாழ். கோட்டையை அண்மித்த பகுதிகளில் இராணுவத்தால் பெருமெடுப்பில் அலங்கார வேலைகளும் செய்யப்பட்டிருந்தன.

ஜனாதிபதியின்வருகைக்கான ஏற்பாடுகளுக்காக பெருந்தொகைப் பணம் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் இராணுவம் மற்றும் அரச அதிகாரிகளும் இதற்காகக் களத்தில் இறங்கி பாடுபட்டனர்.

இறுதியில் ஜனாதிபதியின் விஜயம் இரத்துச் செய்யப்பட்டமையால் பெருந்தொகைப் பணம் மற்றும் அதிகாரிகளின் நேரமும் உழைப்பும் வீண்விரயமாகியுள்ளன.

## நிதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கமைய டிசெம்பர் 29ஆம் திகதி அவர் மொனராகலை பிரதிப் பொலிஸ்மா அதிபராகக் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இதேவேளை பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவின் பணிப்பாளராக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பவித்ர தயாரத்ன தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த முதலாம் திகதி தனது கடமைகளைப் பொறுப்பேற்றார் எனவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

## தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கூட்டத்தில் பங்குபற்றியிருந்த அட்டாளைச்சேனையைப் பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர்கள் அட்டாளைச் சேனைக்கு ஒரு தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவியை வழங்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர். இதற்குப் பதிலளித்த கட்சித் தலைவர் ஹக்கீம் கோரிக்கை தொடர்பில் பரிசீலிக்கப்படும் என்றார்.

கட்சியின் பேராளர் மாநாடு பெப்ரவரியில் நடைபெறும் என்றும் இந்தக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

## தெற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில தினங்களுக்கு முன்னர் அறிவித்தமையை அடுத்தே சிறிலங்காசுதந்திரக்கட்சிக்குள் ஒரு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுவிட்டதாகக் கூறப்பட்டது.

அந்த பதற்ற நிலைக்குக் கட்டியம் கூறுமாற்போல மாகாண சபைகள், உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜெயரத்ன தமது அமைச்சுப் பதவியைத் துறந்து கூட்டு எதிரணிப் பக்கம் தாவினார்.

இந்தச் சூழலில் மேலும் பலர் அரசுப் பக்கம் இருந்து கூட்டு எதிரணிப் பக்கம் இன்று அல்லது நாளை பாய்வார்கள் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த நெருக்கடிகளை அடுத்து ஆளும் தரப்பில் உள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கான கூட்டம் ஒன்று கட்சியின் பிரமுகரான மஹிந்த அமரவீரவின் வீட்டில் நேற்று மாலை 7 மணிக்குக் கூட்டப்பட்டது. அந்தக் கூட்டத்துக்கு சு.கவின் சகல எம்.பிக்களும் வருகைதர வேண்டும் என்று பணிப்புரையும் விடுக்கப்பட்டிருந்தாகத் தெரிகின்றது.

இந்தக் கூட்டம் நேற்று இரவு 11 மணி தாண்டியும் நடைபெற்றுக் கொண்டிருந்ததாகக் கொழும்புச்செய்திகள்தெரிவித்தன.

இந்தக் கூட்டம் ஆரம்பமாவதற்கு சற்று முன்னரே – நேற்று மாலை 6 மணியளவிலேயே – இன்றைய தமது யாழ். விஜயம் ரத்துச் செய்யப்படுவதான அறிவிப்பு ஜனாதிபதி தரப்பிலிருந்து வெளியிடப்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

எனினும், இன்று தமக்காக யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் அனைத்திலும் பிறிதொரு தினத்தில் தாம் பங்குபற்றுவார் என ஜனாதிபதி தெரியப்படுத்தியுள்ளார் என்றும் கூறப்பட்டது.

தவிர்க்க முடியாத காரணங்களினாலேயே இன்றைய யாழ்ப்பாண நிகழ்ச்சியில் தம்மால் பங்குபற்ற இயலாமல் இருப்பதாகவும் ஜனாதிபதி தெரியப்படுத்தியுள்ளார்.

இதற்கிடையில் –

தமது அடுத்த ஐந்தாண்டுக்கான செயற்றிட்டங்களைத் தெளிவுபடுத்தி 'பலம் மிக்க தோர் இலங்கை' என்ற தலைப்பில் விரிவான அறிக்கை ஒன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று நண்பகல் அலரி மாளிகையில் வைத்து வெளியிடவிருக்கின்றார்.

நல்லாட்சி அரசு என்ற பெயரில் பிரதமர் ரணிலும் அவரது ஐக்கிய தேசியக் கட்சியும் தங்களை அரசியல் ரீதியாகப் பலப்படுத்திக் கொள்கின்றனர் என்றும் –

அதற்குத் துணைபோய், உதவியபடி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி தன்னை அழித்து, சிறுமைப்படுத்தி வருகின்றது என்றும் –

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த கூட்டு எதிரணி எம்.பிக்கள் சுமத்தி வரும் குற்றச்சாட்டு, அந்தக் கட்சிக்குள் பலத்த நெருக்கடிகளை உண்டு பண்ணியுள்ளது எனக் கூறப்படுகின்றது.

அதன்விளைவாக ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளை எதிர்கொண்டு சமாளிப்பதே ஜனாதிபதி மைத்திரிபாலவின் உடனடி கவனிப்புக்குரியதாக மாறியுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (உ)

## கடல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். பொதுமக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்கும் செயற்றிட்டம் இந்த வருடம் முதல் முன்னெடுக்கப்படும். (உ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.01.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.